தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 ஜூலை 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினாக்கள்–விடைகள், உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

கால்நடை அபிவிருத்தி.

***குறுகிய கால வினா எண் 5—திரு. டி. இராசரத்தினம் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னாள் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கால்நடைப் பண்ணையில் 15 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட நட்டத்திற்கு 1965–66 ஆண்டுகளில் விதிமுறைகளை ஒட்டியோ அல்லது திருத்தப்படாமலோ நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், வழங்கப்பட்ட நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு ? எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பழையகோட்டை பட்டயக்காரரின் பண்ணையில் நிறைவேற்றப்பட்ட காங்கேயம் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாடுகளுக்குத் தீவனம் அளிக்க 1952–53 முதல் 1958–59 வரை ஆன தீவனச் செலவு குறித்து, இம்மாநில அரசின் பங்கிற்காகவும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் பங்கிற்காகவும் பழையகோட்டை பட்டையக்காரருக்கு கொடுக்கப்படவேண்டிய மானிய நிலுவையாகிய ரூ. 1,98,973·08, 1965 செப்டம்பர் திங்களில் கொடுக்கப்படுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் தொகை பழைய கோட்டை பட்டையக்காரருக்கும் திருமதி பார்வதி அர்ச்சுனனுக்கும் ஆளுக்குப் பாதி என்ற அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் ரூ. 99,486·54 கொடுக்கப்படவேண்டுமென ஆணையிடப்பட்டது. இச்செலவில் பாதித் தொகையாகிய 99,486·54 ரூபாயை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கொடுத்துவிட்டது.

திரு. டி. இராசரத்தினம் : திருத்தப்பட்டு வழங்கப்பட்ட மானியம் எந்தத் தேதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1965-ம் வருடம் அக்டோபர் மாதம் 11-ம் தேதியில் ஜி.ஓ. எண் 3359-ன்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. வினாயகம் : அப்படி ஏற்பட்ட நஷ்டத்திற்குப் பதிலாக நஷ்ட ஈடு கொடுத்தது நியாயம்தான் என்று அரசாங்கம் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே அவர்கள் 1952-ல் இருந்து 1959 வரையிலும் வழங்கி அதற்குப்பிறகு அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். மீண்டும் பழையகோட்டை பட்டையக்காரர் அமைச்சர் ஆன பிறகு அந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுபோன்ற கால்நடைப் பண்ணைகளை வைத்து ரூ. 500 மதிப்புள்ள மாடுகளை ரூ. 1,500க்கு விற்று கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்களே. ஏன் இதுபோன்ற பண்ணைகளைச் சர்க்காரே நடத்தக்கூடாது ? இனிமேலாவது இதுபோன்ற மானியத் தொகையை வேறு யாருக்கும் கொடுக்காமல் நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிப்பட்டவர்களுக்கு மானியம் வழங்குவதைவிட சர்க்காரே நடத்துவதுதான் நல்லது என்று பல பண்ணைகளை நடத்தி வருகின்றனர்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: மந்திரி பதவியைத் துஷ்பிரயோகம் செய்து பெறப்பட்ட மானியம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதைத் திருப்பி வசூல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பதவியை துஷ்பிரயோகம் செய்து வாங்கினர் என்று சொல்வதற்கில்லை. இந்தத் தேதியில் அவர் அமைச்சராக இருந்தார் என்பது மட்டும் குறிப்பிடத்தக்கது.

திரு. ந. சவுந்திர பாண்டியன் : இதுமாதிரி எத்தனை முறை வழங்கியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : 1952-ல் இருந்து 1959 வரையிலும் உள்ள பாக்கியை வழங்கியிருக்கிறார்கள்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1952-க்குப் பிறகு வேறு யாருக்கும் அளிக்காமல் அமைச்சர் அவர்களுக்கு மாத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. வேறு யாருக்காவது அந்த நிலைமை ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கும் அளித்திருப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது குறிப்பிட்ட பண்ணையைப் பற்றியது. மற்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : குறிப்பிட்ட பண்ணையிலே உள்ள மாடுகள் இந்த மாநிலத்திலே வேறு எந்த பண்ணையில் இருக்கும் மாடுகளை விட தரத்தில் உயர்ந்தவை என்று சொல்வது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது கனம் உறுப்பினருடைய கருத்தாக இருக்கலாம். மாறுபட்ட கருத்தும் நிலவுகிறது.

திரு. கே. விநாயகம் : இந்தப் பண்ணையிலே இருந்து மாடுகள் 1952–53லே உயர்ந்ததாக இருந்ததாகவும் அந்த நேரத்திலே அரசாங்கப் பண்ணையிலே இருந்த மாடுகள் அந்த அளவிற்கு வளர்ச்சி அடையவில்லை என்ற கருத்து இருக்கிறது. அந்த அளவிலே அந்தத் தொகை கொடுத்திருக்க வேண்டும். காலதாமதம் ஆகி கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுத்தது நியாயம் தான் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நியாயம்தான் என்று அப்போது இருந்த அரசாங்கம் கருதியது. அந்த அரசாங்கம் அப்படிக் கருதித் தான் மானியம் வழங்கியிருக்கிறார்கள். நாங்கள் ஒன்றும் வழங்கவில்லை.

1967 ஜூலை 18]

*குறுகிய கால வினு எண் 6—திரு. டி. இராசரத்தினம் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965–66 ஆண்டுகளில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வாங்க வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ? எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது.

(இ) கடன் பெற்ற அனைவரும் மேற்படி கடன் தொகையினை பெற்ற காரியத்திற்கு பயன்படுத்திவிட்டனரா ?

(உ) இல்லையெனில், அன்னாரின் பெயர்களும் தொகையும் தெரிவிப்பதுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்காக ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் 46 பேர்களுக்கு ரூபாய் 1,33,000 அளவுக்கு 1965–66ம் ஆண்டில் கடன்கள் வழங்கப்பட்டன.

(இ) கடன் பெற்றவர்களில் சிலர் இதுவரையில் கறவை மாடுகளை வாங்கவில்லை.

(உ) அரசு வழங்கிய கடன்தொகை கொண்டு கறவை மாடுகள் வாங்காதவர்களின் பெயர், இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ஆகிய விவரங்கள் வருமாறு :—

	பெயர்.	வழங்கப்பட்ட கடன் தொகை. ரூ.
1	திரு. வி. கணபதி நாயக்கர், ஸ்ரீபெரும்புதூர்	3,000
2	திரு. பட்டாபிராமன் நாயக்கர், வெண்காடு	2,000
3	திரு. எஸ். எ. எஸ். காதர், ஸ்ரீபெரும்புதூர்	5,000
4	திரு. எஸ். எ. எஸ். மெஹபூப் சாகேப், ஸ்ரீபெரும்புதூர் ..	5,000
5	திரு. ஜே. மதன்ராஜ், பூவிருந்தவல்லி	5,000
6	திரு. சக்ரபாணி, சென்னீர்குப்பம்	4,000
7	திரு. என். புருஷோத்தம் ரெட்டியார், வரதராஜபுரம் ..	4,000

சென்னீர்குப்பத்தைச் சேர்ந்த திரு. சக்ரபாணியிடமிருந்து கடன் தொகை முழுவதும் வட்டியுடன் வசூலிக்கப்பட்டது. மற்றவர்களிடமிருந்து கடன்தொகை முழுவதையும் வட்டியுடன் வசூலிக்க அவர்களுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

திரு. டி. இராசரத்தினம் : மாடுகள் வாங்கப்படவில்லை என்றால் அவர்கள் மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : சர்க்காரிடம் மாடுகள் வாங்குவதற்காக கடன் பெற்றவர்கள் மாடுகள் வாங்காததால் தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்று மார்ச் மாதத்திலே நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்தக் கடனை வாங்குகிறவர்கள் மாடுகள் வாங்காமல் தங்கள் சொந்த உபயோகத்திற்கு உபயோகித்துக் கொண்டால், அவர்களிடமிருந்து ஏதாவது கொடுத்த பணத்தை வசூல் பண்ணுகிற முறையிலே இருந்தால்தானே இனிமேலாவது அப்படிப்பட்ட முறையிலே பணத்தை உபயோகப்படுத்தாமல் இருப்பார்கள். ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சர்க்கார் வழங்குகிற கடனை எந்தக் காரியத்திற்காக வழங்கப்படுகிறதோ, அதைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றுதான் வழங்கப்படுகிறது. மாடுகள் வாங்கவில்லையென்றால்

அதற்காக கடனுதவி வாங்கியிருந்த பணத்தைப் பயன்படுத்திக் கொண்டால் அவர்கள் வட்டியையும், கடனையும் சேர்த்து கொடுக்க வேண்டுமென்று கூறப் படுகிறது. அவர்கள் வேண்டுமென்றே மாடுகள் வாங்கவில்லை என்று தெரிகிற நேரத்திலே, கொடுத்த பணத்தைத் திருப்பி பெறுவதற்கு சகலவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, கொடுக்கப் பட்டிருக்கிற கடன்களில் குறிப்பாக ஒருவரிடமிருந்து மட்டும் வசூலிக்கப் பட்டிருக்கிறது. அப்படி வசூலிக்கப்பட்டுக் கொடுத்தவர் திராவிட கழகத் தைச் சார்ந்தவர். மற்றவர்களில் இரண்டு பேர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாகவும், காங்கிரசுக்குத் தீவிரமாக உழைத்தவர்களாகவும் இருக் கிற காரணத்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், மற்றவர்கள் பேரில், அவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்ற காரணத்திற்காக, நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் சொன்ன விவரத்திலிருந்து நான் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் எனக்குத் தெரிந்த வரையிலும் சொல்வேன்—திரு. மதன்ராஜ் என்பவர் பூவிருந்த வல்லி பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்றும், திரு. காதர் என்பவர் ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்றும் எனக்குத் தெரி யும். இது ஸ்ரீபெரும்புதூர் தொகுதியைச் சேர்ந்த விவகாரமாக இருக்கிறது. அதனால் இத்தகைய பாகுபாடு கவனத்திற்குரியது. ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தக் கட்சி என்று பார்க்காமல், யார் கடன்பட்டிருந்தாலும், பெற்ற கடனைக் கொண்டு மாடுகள் வாங்காமலிருந் தால், கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதிலே இந்த அரசாங்கம் எந்தவிதத் தயக்கமும் காட்டாது ; அவசியம் கடனைத் திரும்பிப் பெறும்.

திரு. கே. விநாயகம் : ஐயா, மேலே குறிப்பிட்ட நபர்கள் மாடுகள் வாங்குவதற்காகக் கடன் வாங்கி, நல்ல தரமான மாடு இன்னும் கிடைக்க வில்லை என்று சொல்லி, அதைத் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? (சிரிப்பு) கடன் தொகையை உடனடி யாக வசூலிக்காமல், அவர்கள் மாடு வாங்குவதற்குரிய காலத்தைக் கொஞ்சம் நீட்டிப்போட முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தக் கடன் பெற்ற நண்பர் கள் மாடு வாங்கப் போன போது நண்பர் திரு. விநாயகத்தையும் அழைத்துச் சென்று ஏமாற்றம் அடைந்தார்களா என்று அறிய விரும்பு கிறேன். (சிரிப்பு).

திரு. வி. கே கோதண்டராமன் : கிராமங்களில் இப்படிக் கறவை மாடு கள் வாங்குவதற்குரிய கடன் தொகையைக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக வாங்க வேண்டுமானால், 500 ரூபாய் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆனால், தேர்தலுக்கு ஒரு வருஷத்திற்கு முன்னாலே இந்தத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலுக்காக வேண்டி, ஆட்களைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும், தாஜா பண்ணி வைக்க வேண்டும் என் பதற்காகவே இப்படிப் பணம் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானே ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஸ்ரீபெரும்புதூர் தொகுதியாக இருக்கிறது. தேர்தலுக்கு முன்னாலே கொடுக்கப்பட்டிருப்பதால் கனம் அங்கத்தினர் யூகிப்பது சரியாக இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 389, 390, 391, 392 ஆகியவை தற்போதைக்குத் தள்ளிவைக்கப்படுகின்றன. பிறகு எடுத் துக்கொள்ளப்படும்.

பொதுவான ஊழியப் பதிவேடுகள்

*393 வினா—திரு கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடி, தனியார் பள்ளி ஆகியவைகளில் வேலை செய்யும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு பொதுவான "சர்வீஸ் ரிஜிஸ்டர்" வைப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏதேனும் உத்திரவிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

பேறுகால விடுப்பு.

*394 வினா—திரு கொ. இரா. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பல்வேறு நிர்வாகங்களில் பணியாற்றும் ஆசிரியைகள் அனைவருக்கும் மூன்று மாத பிரசவ விடுப்பு அளிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

Secondary School Leaving Examinations

* 395 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government propose to abolish the conduct of examinations of the Secondary School-Leaving stage ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that the Central Government are proposing to abolish the Secondary School-Leaving Certificate Examination and whether they have sent such a proposal to the Madras Government and if so, what is the reaction of this Government ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, பள்ளி இறுதித் தேர்வுகளை நிறுத்திவிடவேண்டும் என்று எந்தக் கட்டளையும் பிறப்பிக்கவில்லை. கல்விக் குழு ஒருவிதமாகச் சிபார்சு செய்திருக்கிறது. ஆண்டுதோறும் அவர்களுக்கு பரீட்சை வைத்து, அதன் மூலம் வருகின்ற எண்களையும் உள்ளடக்கிக்கொண்டு தேர்வு நடத்தலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கும்படியாகக் கூறியிருக்கிறது. அதுபற்றி இரு தரப்பான கருத்துக்கள் இருக்கின்றன. ஐம்பது எண்களை, ஆண்டு பூராவும் அவ்வப்போது வைக்கின்ற தேர்வுகளின் மூலமாகப் பெறும் திறமையைக் கணக்கிட்டும், பிறகு பொதுவாக எழுதப்படுகிற தேர்வின் மூலமாகக் கிடைக்கின்ற ஐம்பது எண்களையும் கூட்டி, ஒரு விதத்திலே அவர்களுடைய திறமையைப் பரிசோதிக்கலாம் என்ற கருத்து இருந்து வருகிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை.

திரு. கே. விநாயகம் : ஆண்டு முழுவதும் இந்த மாணவர்களுடைய திறமையைச் சோதிப்பதற்கு வேண்டிய பரீட்சைகள் வைப்பதைவிட, ஆண்டு இறுதியில் முழுப் பரீட்சை இருக்கிறது என்ற பயம் மனதிற்கு இருந்து, அதை முன்னிட்டு அவர்கள் நன்கு படித்து முன்னேறுவதற்கு வேண்டிய வகையை இந்தப் பரீட்சைகள் செய்யும். ஆதலாலே, எந்தக் காரணத்தை யொட்டி மத்திய அரசு சிபார்சு செய்தாலும், அல்லது இந்தக் கல்விக

குழு சிபார்சு செய்தாலும், நம்முடைய அரசாங்கம் அதற்கு இரையாகாமல், அந்தக் கொள்கையை விடாமல், திரும்பவும் இந்தப் பரீட்சையை நீடித்து வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, அத்தகைய தேர்வு முறைகளைக் கைவிடுவதாக இந்த அரசுக்கு எண்ணம் இல்லை. தேர்வுகள் வைத்தால்தான் முறைப்படிப் பயிலுவதற்கும், மாணவர்கள் அக்கறையோடு படித்துத் திறமை பெறுவதற்கும் வழிவகை இருக்கிறது. தேர்வு வைக்காமலிருந்தால் அவர்கள் படிக்காமலே இருக்கிறார்கள் என்பதுதான் நடைமுறை அனுபவமாக இருக்கிறது. வாரத்திற்கு வாரம் தேர்வு வைத்து, மாதத்திற்கு மாதம் தேர்வு வைத்து, இறுதித் தேர்வு வைக்கும் பள்ளிகளிலேதான் தேர்வு பெற்றவர்களுடைய எண்ணிக்கைச் சத வீதம் உயர்ந்து காணப்படுகிறது. ஆகவே, தேர்வுகளை நீக்கிவிடுவதாக இல்லை. ஆண்டின் இறுதியில் நடத்தப்படும் தேர்வின் எண்ணிக்கையும், கால் தேர்வு, அரைத் தேர்வு ஆகியவற்றினுடைய எண்ணிக்கையும் உள்ளடக்கிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத்தான் முதலில் தெரிவித்தேன். இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

Post-Graduate Classes.

* 396 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether Grade I Professors in Government Colleges only are posted to handle post-graduate classes ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

State Educational Loan

* 397 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state ;

(*a*) whether it is a fact that the benefits of the State Educational Loan Rules are not extended to the students studying in the Indian Institute of Technology, Madras, and the Regional Engineering College, Tiruchirappalli, and

(*b*) if so, the steps taken to extend the same to the students of this State studying in these institutions ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தை விரிவாக்குவது குறித்து பரிசீலனை செய்து, நிறுத்தி வைக்கப்பெற்றுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, students taking up different courses of study in the Arts as well as Technical colleges are being given this facility of State educational loan. Why is this denied to the students studying only in the Indian Institute of Technology as the studies imparted there are also considered to be very beneficial in the interest of the State? As it has been denied so far, will the Government reconsider it and extend the facilities to those students also ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திலே பணிபுரிகின்ற அரசிதழ் பதிவுபெறாத அலுவலர்களுடைய குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கும், அரசாங்கத்தினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்டு இயங்குகிற எல்லாக் கல்வி

1967 ஜூலை 18]

நிலையங்களிலும் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. டி.டி.இ., டி.எச்.இ., டி.பி.ஐ., டி.எம்.இ., ஆகியவர்கள் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் அளிக்கப்படுகிறது. மற்ற தனியார் நடத்துகிற கல்வி நிறுவனங்களில் அத்தகைய கடன் வசதி அளிப்பதுதான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க நிர்வாகத்தின்கீழ் உள்ள கல்வி நிலையங்களில் பயிலுகிறவர்களுக்கு அளிக்கப்படும் கடன் தொகையைத் திருப்பி வசூலிப்பதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. கடன் தொகை திருப்பி வராத நிலைமை, விட்டுவிட்டுத் தருகிற நிலைமை, படித்து முடிந்ததும் வேலையில் இருக்கிறார்களா இல்லையா, என்கிற தகவலை அறிந்துகொள்ள முடியாத நிலைமை, முகவரி அறிவிக்காத நிலைமை, இப்படிப் பல சங்கடங்கள் இதிலே இருப்பதால்தான், இதை நம்முடைய அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிற நிறுவனங்களைப் பொறுத்து மட்டும் வழங்கிவிட்டு, தனியார்த் துறை நிறுவனங்களில் புகுத்துவதில் காலதாமதம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

தொழிற்பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்

*398 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சிப் பள்ளியில் 1965–66, 1966–67 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு என்ன ?

(இ) இவைகளுக்காக வாங்கப்பட்ட மூலப் பொருள்களின் மொத்த மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தொழிற் பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், அங்கு பயிற்சி பெறுபவர்கள் பயிற்சிக் காலத்தில் பயிற்சிக்காகவும், மாதிரிக்காகவும் செய்யப்பட்டவை. ஆதலால், அந்த மாதிரி உருவங்களுக்காக உபயோகப்படுத்தப்பட்ட மூலப் பொருள்களின் விலை, அங்கு செய்யப்பட்ட முழுமைப் பொருள்களின் விலையெனக் கொள்ளப்படுகிறது. இதற்காக வாங்கப்பட்ட மூலப்பொருள்களின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	ரூ.	பை.
1965–66-ம் ஆண்டு	1,371	40
1966–67-ம் ஆண்டு	908	26

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, தொழிற்பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இந்தப் பொருள்கள் அங்கே பயிற்சிக்காக உபயோகப்படுத்தப்பட்டாலும் கூட, அந்தப் பொருள்கள் விற்கப்படுகின்றன. அந்தப் பொருள்கள் விற்கப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பயிற்சிப் பள்ளிகளில் செய்யப்படுகிற பொருள்கள் விற்பனைக்காக என்று கருதிச் செய்யப்படுவதில்லை. அங்கே பயிற்சிக்காகவும், மாதிரிக்காகவும் செய்யப்படுகின்றன. அவை பிறகு விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. விற்பனைக்கு வைக்கும் போது, மூலப் பொருள்கள் என்ன விலைக்கு வாங்கப்பட்டனவோ அதே விலைதான், காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷனைக் கணக்கிடப்பட்டு விற்கப்படுகிறது. இரண்டு ஆண்டுக்காலம் பொருள்கள் விற்கப்படாமல் இருந்தால், 25 சத விகிதம் கழித்துக்கொடுத்து, மறுபடியும் விற்பனை செய்வதற்கு முயற்சி செய்யப்படுகிறது. மறுபடியும் ஓரளவு விற்பனை ஆகாமல் இருக்குமானால், மேற்கொண்டு 25 சத வீதம் கழிவு தரப்படுகிறது. அதற்குப் பிறகும் அந்த மாதிரிப் பொருள்கள் விற்பனை ஆகாமல் இருக்குமானால், பிறகு அவைகளெல்லாம் ஏலம் விடப்படுகின்றன. அந்த வகையிலே சில பொருள்கள் மட்டும் ஏலம் விடப்படுகின்றன. இந்தப் பொருள்கள் செய்வதற்காக 1965–66-ம் ஆண்டில் வாங்கப்பட்ட மூலப் பொருள்களின் மதிப்பு ரூ. 1,371·40. 1966–67-ம் ஆண்டில் வாங்கப்பட்ட மூலப் பொருள்களின்

மதிப்பு ரூ. 908·26. பொருள்களை விற்றுவந்த விவரம் இல்லை. இரண்டு வகைத் திட்டங்களின் கீழ் வந்த பொருள்கள் மட்டும் ஏலம் விடப்பட்டிருக்கின்றன.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, இந்தப் பொருள்கள் விற்பதிலே அங்கிருக்கக்கூடிய இன்ஸ்பெக்டர்கள் "மிஸ்யூஸ்" பண்ணினார்கள் என்ற புகார் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி எவ்வித புகாரும் வரவில்லை. அதுபற்றி கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 399வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நாகபட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளியில் கடந்த இரண்டாண்டுகளாக, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தகராறுகள் காரணமாக முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதனை ஒழுங்குபடுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆசிரியர் மாணவர்களிடையே சச்சரவு இருந்தது உண்மை. ஆனால் பள்ளியில் பயிற்சி பாதிக்கப்படவில்லை.

(இ) சச்சரவு பற்றி விசாரணை செய்யப்பட்டு, ஒழுங்கை நிலைநாட்ட சில ஆசிரியர்கள் வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர்களின் இல்லங்களுக்கு மராமத்து.

* 400 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கனம் முதல் அமைச்சர், கனம் பொதுப்பணித் துறை அமைச்சர், கனம் அரிஜன நலத்துறை அமைச்சர் ஆகியோர் இல்லங்களுக்கு கட்டடம் மற்றும் வசதிகள் செய்வதற்கு அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சபை முன் ஒரு விவர அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : On a point of order, Sir. A similar question was answered yesterday in the Upper House. Whether it is Lok Sabha or Rajya Sabha or Lower House or Upper House, the normal convention is that, when an answer is ready, it should first be placed before the Lower House. Obviously the answer was ready long ago. It should be placed here first and then only it should be placed in the Upper House. That has been the convention. I wish to draw the attention of the Chair to it.

Mr. SPEAKER : As the Hon. Member has drawn the attention of the Chair, I would ask him to leave it at that, because the listing of the questions is the responsibility of the Chair and not of the Minister.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிட வேலைகளைச் செய்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் அரசாங்கஅதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்களா ? அப்படி அவர்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்

a 664–668-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது

1967 ஜூலை 18]

தால், அவர்களுடைய உழைப்பையும், மேற்பார்வையையும் கருதி 15 சத விகிதம் சூபர்விஷன் சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அந்தத் தொகையையும் சேர்த்துத் தான் இந்தக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லாம் சேர்த்துத்தான் அந்தக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முடிவாக இன்னும் கணக்குத் தரப்படவில்லை. அமைச்சர்கள் அதிகம் தந்ததாகவும் இருக்கலாம் அல்லது அமைச்சர்கள் தர வேண்டியதாகவும் இருக்கலாம். முடிவான கணக்குப்படி செய்யப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், சொந்த வீடுகள் இருக்கும் அமைச்சர்களுக்கு அந்த வீட்டு வசதிகள், பராமரிப்பு வசதிகள் அரசாங்கச் செலவில் தொடர்ந்து செய்துகொள்ள முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் சட்டபூர்வமாக விதிகள் செய்ய வேண்டுமென்று யோசனை செய்ததா? இதை அரசு பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சொந்த வீடுகள் இருக்கும் அமைச்சர்களுக்கு, அந்த வீடுகளுக்கான செலவுகள்—மெயின்டனன்ஸ்—மற்ற வசதிகளுக்கு அரசாங்கத்தினுடைய பணமே தரப்பட வேண்டுமென ஒரு தீர்மானத்தை முன்வைத்து, அதற்கான கட்டுகள் எல்லாம் முந்தைய அரசாங்கத்தில் தொடங்கப்பட்டன. ஆனால் இந்த அரசு அது தேவையில்லையென்று புறக்கணித்துவிட்டது.

திரு. இல. பலராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இது போன்ற உதவிகளை அங்கத்தினர்களுக்கும் விஸ்தரிக்க இந்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விடும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது அமைச்சர்களைப் பொறுத்த கேள்வி அல்ல. கனம் அங்கத்தினர்களும் அமைச்சர்களைப் போலவே சொந்த செலவில் செய்துகொண்டால், அதை இந்த அரசு தடுக்காது.

திரு. எஸ். முருகையன் : சார், சென்ற ஆட்சியின் அமைச்சர்களுக்குச் சொந்த வீடுகள் இருந்தும், வீட்டு அலவன்ஸ் வாங்கிய அமைச்சர்கள் எத்தனை பேர்? மற்றும் அவர்களுக்குத் தரப்பட்ட பர்னிச்சர் வகைகளைத் திருப்பிக் கொடுக்காத அமைச்சர்கள் எத்தனை பேர்? இப்போதிருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கு மேஜை, நாற்காலி போன்ற பர்னிச்சர்கள் வழங்கப்பட்டுள்ளதா? முந்தைய அரசாங்கத்தில் இருந்த எதிர்க் கட்சித் தலைவருக்கு அந்த வசதிகள் எல்லாம் அளிக்கப்பட்டனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கனம் உறுப்பினர் இந்தக் கேள்விகளை எல்லாம் இணைத்துக் கேட்கிறார். முதலாவதாக, சென்ற ஆட்சியில் அமைச்சரவையிலிருந்த எல்லா அமைச்சர்களுக்குமே சொந்த வீடுகள் இருந்தும், வீட்டு அலவன்ஸ், கார் அலவன்ஸ், முதலியவை தரப்பட்டன. மற்றும் அமைச்சர்களுக்கு வேண்டிய மேஜை, நாற்காலி போன்ற பர்னிச்சர்களும், மின்சார விசிறி போன்றவைகளும் வாங்கப்பட்டன. அவைகள் எல்லாம் அவர்களுடைய பதவிக்காலம் முடிவடைந்ததும் அரசிடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்ற விதிப்படி தரப்பட்டிருந்தன. அப்படியே ஒருவர் தவிர எல்லா அமைச்சர்களும் பர்னிசர்களைத் திருப்பித் தந்துவிட்டனர். சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி அம்மையாருக்கு கிட்டத்தட்ட 8 ஆயிரம் மதிப்புள்ள பொருள் தரப்பட்டது. அதில் சுமார் 4,740 ரூபாய் மதிப்புள்ள வாட்டர் கூலர்-ஐ மட்டும் இன்னும் ஜோதி அம்மாள் அவர்கள் திருப்பித் தரவில்லை.

இரண்டாவதாக, இப்போதுள்ள எதிர்க்கட்சித் தலைவருக்கு மேஜை, நாற்காலி போன்ற மற்ற வசதிகள் ஜனநாயக முறைப்படி அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முன்பிருந்த எதிர்கட்சித் தலைவருக்கு, அவர்களுடைய ஜனநாயக முறைப்படி கொடுக்கப்படவில்லை.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்கள் தங்களுடைய சொந்த பங்களாக்களில் இருந்து, அதை அரசாங்க உத்தியோகஸ்தர்களை வைத்து மராமத்து செய்துகொண்ட பிறகு, என்ன செலவாகிறது என்று பார்த்து

அமைச்சர்கள் கொடுத்திருப்பது நியாயமாக இருப்பினும்கூட, இம்மாதிரியான சந்தேகத்திற்கெல்லாம் இடங்கொடுக்காமல், அரசாங்க உத்தியோகஸ்தர்களை வைத்துப் பயன்படுத்துவதைவிட, அமைச்சர்கள் சக்தி படைத்தவர்களாக இருப்பதால், அவர்களே கையிலுள்ள பணத்தைச் செலவழித்து செய்துகொள்ளாமல் என் இந்தச் சந்தேகத்திற்கு ஆளாக வேண்டும்? இனிமேலாகிலும் அப்படி நடந்துகொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யாரோ சந்தேகத்திற்கு ஆளானதாக, நண்பர் விநாயகம் அவர்கள் உருவாக்குகிறார். யாரும் அப்படி ஆளாகவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுகாதார அமைச்சர் ஜோதி அம்மாள் அவர்கள்கூட ரூபாய் 1,600 செலவில் ஓர் அறை கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கட்டித் தந்திருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களுக்கான உழைப்புக்கும் சேர்த்து அதற்கான செலவை அமைச்சர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

திரு கொளத்தூர் கோதண்டம் : இப்போதுள்ள அமைச்சர் வீடுகளில் என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன, அதேபோல் பழைய அமைச்சர்களின் வீடுகளில் எவ்வளவு ரூபாய் அளவுக்கு பர்னிசர், மற்ற வசதிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய அமைச்சர்களுடைய வீடுகளில் திரு. கக்கன் அவர்களுடைய வீட்டிற்கு ரூபாய் 15,496 அளவுக்கு மேஜை நாற்காலி போன்ற சாமான்கள், திரு. மஜீத் அவர்களுடைய வீட்டில் ரூபாய் 15,154 அளவில் மேஜை, நாற்காலி போன்ற சாமான்கள், திரு. பூவராகன் அவர்கள் வீட்டில் ரூபாய் 19,535 செலவில் நாற்காலி, மேஜை போன்ற வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 15 ஆயிரம், 19 ஆயிரம், 20 ஆயிரம் என்ற அடிப்படையில் வீட்டுக்கு சாமான்கள் வாங்கிக் கொடுத்திருப்பதும், மராமத்து செய்வதும் என்றால், இவர்கள் பரம ஏழைகளா ? அவர்கள் ஏழைகள் என்று எழுதிக் கொடுத்தால் அதற்கு விதிவிலக்கு அளித்து, 'ரைட் ஆப்' செய்துகொடுங்கள். பெரிய லட்சாதிபதியாக இருந்துகொண்டு, லட்சாதிபதி என்று சொல்லிக்கொள்கிறார்களே அவர்களிடம் கண்டிப்பாக இந்தப் பணத்தை வசூல் செய்வதற்கு தகுந்த நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் பதிலைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டார் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட சாமான்கள் அந்தப் பங்களாக்களில் இருந்தன. அவர்கள் வெளியேறிய பிறகு அந்தச் சாமான்கள் அப்படியேதான் இருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : மேற்கூறிய மூன்று அமைச்சர்கள், திரு. கக்கன், திரு. மஜீத், திரு. பூவராகன் இவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்களாக்களில் இருந்துகொண்டு, அரசாங்கத்திற்கு வேலை செய்கிற காரணத்தாலே அந்த பர்னிசர்கள் எல்லாம் அரசாங்கத்தின் சார்பில் வாங்கிக் கொடுக்கப்பட்டு, அரசாங்க வேலைக்கே பயன்படுத்திக்கொண்டு வந்தார்களே தவிர, சொந்த வேலைக்குப் பயன்படுத்தவில்லை. அவர்கள் வீடுகளைக் காலிசெய்து விட்டு வரும்போது ஒரு துரும்பு கூட கொண்டுவரவில்லையென்பதை அரசாங்கம் உணருகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் பதிலில் ஒரு பகுதியைத்தான் சொன்னேன். அடுத்த பகுதியைப் பெருந்தன்மையாக விட்டுவிட்டேன். நண்பர் விநாயகம் அவர்கள் விடுவதாக இல்லை. அரசாங்க மாளிகையில் இருந்தவர்கள் மட்டும் பயன்படுத்திக்கொண்டார் என்பது அல்ல. சொந்த வீட்டில் இருந்த திரு. காமராஜ் அவர்களுக்கு 4,066 ரூபாய், திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு ரூபாய் 4,696 மதிப்புள்ள சாமான்கள் கொடுக்கப்பட்டு, அவைகளை அவர்கள் பதவி விலகிய பிறகு திரும்பக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் திருமதி ஜோதி அம்மையார் மட்டும் இன்னும் கொடுக்கவில்லை.

திரு பெ. மலேச்சாமி : தலேவர் அவர்களே, விவர அறிக்கையில் கண்டுள்ளவாறு முதல் அமைச்சர் அவர்களும், பொதுபணித்துறை அமைச்சர் அவர்களும் பார்வையாளர்களின் வசதிக்காக, பாதுகாப்பாளர்களின் வசதிக்காக ஆன செலவையும், மேலும் மின்சார விசிறிகள், மின்சார விளக்குகள் ஆகியவற்றிற்கான செலவையும் அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டார்களே, இதுபோல பழைய அமைச்சர்களும் ஏதாவது பணம் கொடுத்திருக்கிறுர்களா என்று அறிய விரும்புகிறேன். முற்பகல் 9-30

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : முதல் அமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் இவற்றிற்கான செலவுகளே அரசாங்கத்திற்குத் தருவதாகச் சொல்லித் தந்துவிட்டார்கள். ஆனுல் பழைய அமைச்சர்கள் பதவியில் இருந்து விலகுகிறபோது வாக்களித்தவாறு தந்திருக்கிறுர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுள் சுகாதார அமைச்சரிடம் தங்கிவிட்ட வாட்டர் கூலர் பற்றிச் சொன்னுர்கள். அதன் மர்மத்தை விளக்குவார்களா? அதைத் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறுர்களா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : எட்டாயிரம் ரூபாய் பெருமான முள்ள சாமான்கள் முன்னுள் சுகாதார அமைச்சரிடம் இருந்தன. அவற்றில் நாற்காலி, மேசை போன்ற 4 ஆயிரம் பொருமான பர்னிசர்கள் திருப்பித் தப்பட்டுவிட்டன. நாலாயிரம் ரூபாய் பொருமான வாட்டர் கூலரையும் திரும்பத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலேவர் அவர்களே, இந்த நாலாயிரம் ரூபாய் பொருமான சாமானே அரசாங்கம் திரும்பப்பெறுவதாக இருக்கிறதா? அல்லது விட்டுவிட அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : விட்டுவிடுவதாக இல்லே. வசூலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலேவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் மூன்று அமைச்சர்களேப் பற்றிய விவரம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற அமைச்சர்களேப் பற்றிய செலவுகள் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : ஏராளமான அளவுக்கு அந்த அரண்மனேகளில் பழைய பர்னிசர்களே விட்டுபோயிருக்கிறுர்கள். அதையே மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்கிறுர்கள்.

திரு. வ. ஜார்ஜ் : தலேவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் கொடுத்திருக்கிற செலவினங்கள் சர்விஸ் சார்ஜ் உள்படவா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இதற்கு முன்பே பதில் சொல்லியிருக்கிறேன். உட்படத்தான்.

திரு. செ. பால்சுப்பிரமணியன் : முன்னுல் இருந்த கப்பல் போன்ற கார்கள் கண்ணில் காணப்படவில்லேயே, அவைகள் என்ன ஆயின?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அவைகள் எல்லாம் வெளிநாடுகளில் இருந்து, மத்திய சர்க்காரில் இருந்து வருகிற விருந்தினர்களே அழைத்து, கொண்டுபோய் விடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்போதுள்ள அமைச்சர்கள் சிறிய கார்களேயே பயன்படுத்திக் கொண்டிருக்கிறுர்கள்.

THIRU T. MARTIN : Sir, from the answer given by the Hon. Minister, I understood that these works were supervised by the Government officials. Now, the list which has been prepared and presented before this House does not include the remunerative

charges regarding the work done by these officials. Will this Government give another list containing the remunerative charges which are debitable against them ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Ministers are not expected to reimburse the expenses incurred in their official capacity and the Ministers have chosen magnanimity and I expect hon. Members also to respond to that magnanimity instead of entering into peevishness.

*401 விஞ—திரு. அ. பொ. அரசு : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னுள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் அன்னாரின் வீட்டிற்கு அரசினர் செலவில் ஏதேனும் மராமத்து செய்யப்பட்டதா, அல்லது மேசை, நாற்காலி, விரிப்புகள் போன்றவை அளிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில் எந்தெந்த வருடங்களில் எவ்வளவு ரூபாய்க்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) சபைமுன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, as suggested by the Hon. Chief Minister, let us not enter into peevishness.

Baby Taxis

* 402 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to allow four passengers to travel by baby taxis ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இந்த பேபி டாக்சிகளின் சொந்தக்காரர்கள் எல்லாம் குறிப்பிட்ட இலாக்கா அமைச்சர் அவர்களைப் பார்த்து "நான்கு பேர்களை ஏற்றச் சொல்வது சரியல்ல, அப்படி ஏற்றுவதன் காரணமாக அந்தக் கார்களின் ஜீவித காலம் குறைந்துவிடும், கார் பாகங்கள் சீக்கிரம் தேய்ந்துவிடும், ஆகவே நான்கு பேர்களை ஏற்றிக் கொண்டாகவேண்டும் என்கிற உத்தரவைப் போடக்கூடாது'' என்பதாகத் தெரிவித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்? அவற்றை எல்லாம் தேசீயமாக்கப் போகிறோம் என்பதாக மிரட்டுவதைவிட்டு, அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்குவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசீயமாக்குகிறோம் என்பது மிரட்டல் அல்ல. ஒரு காரில் எத்தனை பேர்கள் ஏற முடியும் என்று முதலாளிகள் சொல்வதைவிட, அந்தக் காரின் உற்பத்தியாளர் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதாகக் கருதித்தான் அரசு அவர்களிடம் கேட்டிருக்கிறது. ஒன்றிரண்டு நிர்வாகங்களிடம் இருந்து பதில் வந்து விட்டது. மற்ற பதில்களும் வந்த பிறகு அவைகள் பரிசீலிக்கப்பட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி இந்த அரசு ஆராயும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கார் சொந்தக்காரர்கள் குடும்ப சகிதமாக நீண்ட தூரம் போகும்போது எத்தனைபேர்கள் வேண்டுமானாலும் ஏற்றிக்கொள்கிறார்கள். அதிகப் பணம் கொடுப்பதாகச் சொன்னாலும்

* 668–669-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மதிப்பு ரூ. 908·26. பொருள்களை விற்றுவந்த விவரம் இல்லை. இரண்டு வகைத் திட்டங்களின் கீழ் வந்த பொருள்கள் மட்டும் ஏலம் விடப்பட்டிருக்கின்றன.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, இந்தப் பொருள்கள் விற்பதிலே அங்கிருக்கக்கூடிய இன்ஸ்பெக்டர்கள் "மிஸ்யூஸ்" பண்ணினார்கள் என்ற புகார் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி எவ்வித புகாரும் வரவில்லை. அதுபற்றி கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 399வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நாகபட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளியில் கடந்த இரண்டாண்டுகளாக, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தகராறுகள் காரணமாக முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதனை ஒழுங்குபடுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆசிரியர் மாணவர்களிடையே சச்சரவு இருந்தது உண்மை. ஆனால் பள்ளியில் பயிற்சி பாதிக்கப்படவில்லை.

(இ) சச்சரவு பற்றி விசாரணை செய்யப்பட்டு, ஒழுங்கை நிலைநாட்ட சில ஆசிரியர்கள் வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர்களின் இல்லங்களுக்கு மராமத்து.

* 400 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கனம் முதல் அமைச்சர், கனம் பொதுப்பணித் துறை அமைச்சர், கனம் அரிஜன நலத்துறை அமைச்சர் ஆகியோர் இல்லங்களுக்கு கட்டடம் மற்றும் வசதிகள் செய்வதற்கு அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சபை முன் ஒரு விவர அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : On a point of order, Sir. A similar question was answered yesterday in the Upper House. Whether it is Lok Sabha or Rajya Sabha or Lower House or Upper House, the normal convention is that, when an answer is ready, it should first be placed before the Lower House. Obviously the answer was ready long ago. It should be placed here first and then only it should be placed in the Upper House. That has been the convention. I wish to draw the attention of the Chair to it.

MR. SPEAKER : As the Hon. Member has drawn the attention of the Chair, I would ask him to leave it at that, because the listing of the questions is the responsibility of the Chair and not of the Minister.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிட வேலைகளைச் செய்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் அரசாங்கஅதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்களா ? அப்படி அவர்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்

a 664–668-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

charges regarding the work done by these officials. Will this Government give another list containing the remunerative charges which are debitable against them ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Ministers are not expected to reimburse the expenses incurred in their official capacity and the Ministers have chosen magnanimity and I expect hon. Members also to respond to that magnanimity instead of entering into peevishness.

*401 வினா—திரு. அ. பொ. அரசு : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் அன்னாரின் வீட்டிற்கு அரசினர் செலவில் ஏதேனும் மராமத்து செய்யப்பட்டதா, அல்லது மேசை, நாற்காலி, விரிப்புகள் போன்றவை அளிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில் எந்தெந்த வருடங்களில் எவ்வளவு ரூபாய்க்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) சபைமுன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, as suggested by the Hon. Chief Minister, let us not enter into peevishness.

Baby Taxis

* 402 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to allow four passengers to travel by baby taxis ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இந்த பேபி டாக்சிகளின் சொந்தக்காரர்கள் எல்லாம் குறிப்பிட்ட இலாக்கா அமைச்சர் அவர்களைப் பார்த்து "நான்கு பேர்களை ஏற்றச் சொல்வது சரியல்ல, அப்படி ஏற்றுவதன் காரணமாக அந்தக் கார்களின் ஜீவித காலம் குறைந்துவிடும், கார் பாகங்கள் சீக்கிரம் தேய்ந்துவிடும், ஆகவே நான்கு பேர்களை ஏற்றிக் கொண்டாகவேண்டும் என்கிற உத்தரவைப் போடக்கூடாது" என்பதாகத் தெரிவித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்? அவற்றை எல்லாம் தேசீயமாக்கப் போகிறோம் என்பதாக மிரட்டுவதைவிட்டு, அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்குவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசீயமாக்குகிறோம் என்பது மிரட்டல் அல்ல. ஒரு காரில் எத்தனை பேர்கள் ஏற முடியும் என்று முதலாளிகள் சொல்வதைவிட, அந்தக் காரின் உற்பத்தியாளர் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதாகக் கருதித்தான் அரசு அவர்களிடம் கேட்டிருக்கிறது. ஒன்றிரண்டு நிர்வாகங்களிடம் இருந்து பதில் வந்து விட்டது. மற்ற பதில்களும் வந்த பிறகு அவைகள் பரிசீலிக்கப்பட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி இந்த அரசு ஆராயும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கார் சொந்தக்காரர்கள் குடும்ப சகிதமாக நீண்ட தூரம் போகும்போது எத்தனைபேர்கள் வேண்டுமானாலும் ஏற்றிக்கொள்கிறார்கள். அதிகப் பணம் கொடுப்பதாகச் சொன்னாலும்

ஃ 668–669-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஏற்றிக்கொள்கிறுர்கள். அப்போது எல்லாம் அதனுடைய ஆயுட்காலம் குறைந்து போவது இல்லையா? ஆகவே மூன்று பேர்கள் என்பதற்கு நான்கு பேர்களை ஏற்றிக்கொள்வதனுல் அதன் ஆயுட்காலம் ஒன்றும் குறைந்து விடாது என்பதை அரசினா் உணர்கிறுர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இதைச் சிந்திக்க வேண்டியவர் திரு. விஞயகம் அவர்கள்.

திரு. நா. காசிராமன் : சர்க்கார் சொல்கிற பிரகாரம் இந்த டாக்சிகளில் நான்கு பேர்களை ஏற்றிக்கொள்வதற்கு அவர்கள் சம்மதித்தால் இப்போதுள்ள வரி விகிதத்தை, நான்குபேர்கள் ஏற்றப்படுகிறுர்கள் என்பதற்காக இந்த அரசு அதிகப்படுத்தாமல் இருக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இதற்குமேல் போட இப்போது உத்தேசம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : டாக்சியில் நான்கு பேர்கள் ஏற்றிக்கொள்வது என்பது ஒரு விஷயம். இதற்கு முன் இருந்த அரசு ஆட்டோ ரிக்ஷாக்களை கட்டுப்படுத்திற்று. அந்தக் கட்டுப்பாட்டை தளர்த்த இந்த அமைச்சரவை முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில் பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. போலீஸ் தரப்பினர் அபிப்பிராயம் ஒரு வகையில் இருக்கிறது. இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் தெரிவிக்கிற அபிப்பிராயம் வேருக இருக்கிறது. இவைகளைப் பற்றி இந்த அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. கே. விஞயகம் : ஒரு வேளை பேபி டாக்சியில் நான்கு பேர்கள் போகலாம் என்ற உத்தரவு வருகிறது என்று வைத்துக்கொண்டால் இப்போதுள்ள மீடர் ரேட்டை உயர்த்தாமல் பார்த்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : மாண்புமிகு அங்கத்தினர் யோசனை யோசிக்கப்படும்.

Madras-Arkonam Railway line

* 403 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the electrification of Madras-Arkonam railway line stands ; and

(*b*) the steps taken by the State Government to hasten this scheme with Central Government ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) சென்னை-திருவள்ளூர் பிரிவுக்கு மின்சார இரயில் பாதை போடும் திட்டத்தையும் டீசல் ரயில் வண்டிகளை விடும் திட்டத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து ஆய்வு செய்யும் வேலையை இந்திய அரசின் ரயில்வே அமைச்சு மேற்கொண்டுள்ளது.

(இ) சென்னை-அரக்கோணம் மின்சார ரயில் பாதை போடும் திட்டத்துக்கு நான்காவது திட்டத்தில் முதலிடம் அளிக்கும்படி மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி வந்துள்ளது.

திரு. கே. விஞயகம் : சென்னையிலிருந்து அரக்கோணம் வரையிலும் மின்சார ரயில் போடுவதைப்பற்றி ஆராய்ந்து கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இது எத்தனை ஆண்டுகளுக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? இதை எப்பொழுது துவக்குவதாக இருக்கிறுர்கள் ? நமது ஆட்சிக் காலத்திலேயே முடியும் என்று நினைக்கிறுர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1957-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்தே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தத் தொடங்கியிருக்கிறது, வற்புறுத்திக்கொண்டே வருகிறது, இந்த அரசும் வற்புறுத்தும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த மின்சார ரயில் பாதை நீண்ட நாட்களாகவே பேசப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படாமல இருக்கிறது. எழுச்சி நாளிலே இதையும் சேர்த்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து மத்திய அரசோடு போராடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எழுச்சி நாளன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதையும் மனதிலே நினைத்துக்கொள்ளலாம்.

Dr. H. V. HANDE : This question of electrification of the Madras-Arkonam Railway line has been hanging fire for the last one decade. Apart from the fact that it costs some money, have the Central Government given any other specific reasons for postponing this scheme from the Second Five-Year Plan to the Third and Fourth Five-Year Plan, which may even be postponed to the fifth five year plan ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் எந்தக் காரணமும் சொல்லவில்லை, பரிசீலித்து வருகிறோம், பரிசீலித்து வருகிறோம் என்ற காரணத்தைத் தவிர.

Thiru R. PONNAPPA NADAR : Has the State Government fixed any priority list for the other railway lines ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்னை-அரக்கோணம், சென்னை-கும்மிடிபூண்டி லைன்களில் மினசார ரயில்கள் விட ஏற்பாடுகள் செய்தல்.

சேலத்திலிருந்து கரூர் வழியாக திண்டுக்கல்லுக்கு பிராட்கேஜ் ரயில் பாதை ஒன்றைப் புதிதாக அமைத்தல், திண்டுக்கல்லிலிருந்து மதுரை வழியாகத் தூத்துக்குடி செல்லும் ரயில் பாதையை பிராட்கேஜ் ரயில் பாதையாக மாற்றுதல்; இதில் மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்கிற இணைப்பும் அடங்கும்.

திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் வழியாகத் திருவனந்தபுரத்திற்கு (நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு கிளைப்பாதையுடன்) புதிய ரயில் பாதை ஒன்றை அமைத்தல்.

திருச்சிராப்பள்ளிக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் உள்ள கார்டு லைனை பிராட்கேஜ் லைனாக மாற்றியமைத்தல்; விழுப்புரத்திலிருந்து செங்கற்பட்டிற்கு கூடுதலாக பிராட்கேஜ் லைன் ஒன்றை அமைத்தல், அரக்கோணத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையே உள்ள ரயில் பாதையை பிராட்கேஜ் பாதையாக மாற்றியமைத்தல்.

இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

Salary of Ministers

* 389 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the members of the Cabinet including the Hon. Chief Minister have decided not to draw any salary or allowances, etc ; and

1967 ஜூலை 18]

(b) if so, whether they propose to work without remuneration of any kind ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநயகம் : ஐயா, பதில் இல்லையென்றால், எப்பொழுது ஊதியம் வாங்கினர்கள், எப்பொழுது வாங்க முயற்சிக்கிறார்கள் என்ற விவரம் சொல்ல முடியுமா?

THE HON. THIRU C. N. ANNADURAI : The main question is : whether it is a fact that the members of the cabinet including the Hon. Chief Minister have decided not to draw any salary. The answer is 'No' which means that they may draw the salary.

THIRU K. VINAYAKAM : My question is very relevant. I am very careful in framing my question.

வாங்குவது இல்லை என்று முடிவு செய்யவில்லையென்றால் எப்பொழுது வாங்கப்போகிறார்கள்? விநயகம் பரிந்து கேட்டால் வாங்காமல் இருப்பேன் என்று முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னர்களே, ஞாபகம் இருக்கிறதா? இந்த மாதம் எல்லோரும் சேர்ந்து ஒன்றுக வாங்கலாமா?

THE HON. THIRU C. N. ANNADURAI : Since my hon. Friend is much interested in our drawing the salary, I am tempted to ask him why he is so much interested, because usually in official circles when one officer asks his brother officer to draw the salary, a doubt arises whether it is with a view to take a loan. Is it with that idea that the question is put ?

THIRU K. VINAYAKAM ; On a point of order, Sir. During question hour it is the right of the Members to put questions to the Ministers and it is the duty of the Ministers to answer. Here I find the Chief Minister putting a question to me expecting me to answer. Is this in order ?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend should know that in English grammar sometimes answers come in the form of questions.

பர்மாவிலிருந்து வந்த தமிழர்கள்

***390 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இதுவரை தமிழர்கள் எத்தனைபேர் பர்மாவிலிருந்து சென்னை மாநிலத்தில் குடியேறியுள்ளார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : 1964 ஜூலையிலிருந்து 1—6—1967 வரை பர்மாவிலிருந்து தாயகம் திரும்பி இம்மாநிலத்தில் குடியேறியவர்கள் மொத்தம் 82,755 பேர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்களைப் பொறுத்தவரையில் அவ்வளவு பேர்களும், தமிழ் நாட்டிலேயே குடியேறியிருக்கிறார்களா அல்லது வேறு எந்த

எந்த ராஜ்யங்களிலே குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசாங்கமே வாழ்க்கைக்கு வேண்டிய பண உதவியைச் செய்கிறார்களா ? அல்லது நமது ராஜ்யத்திலிருந்து உதவி செய்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பெரும்பாலானவர்கள் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே சிறு சிறு தொழில்கள் செய்வதற்கும் சில இடங்களில் விவசாயத்திலே ஈடுபடுவதற்கும் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து கடன் தொகை பெறப்படுகிறது. ஆனால் கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டதாலே மத்திய சர்க்கார் கடன் கொடுக்கின்ற நிலையில் இந்த அரசுக்குத் திருப்தி இருக்கிறதா என்பதை நானே வினாவாக எழுப்பி நானே அதற்குப் பதிலாக திருப்தி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : A number of Burma evacuees are in great distress. In Madras City near Vyasarpadi lake many of them have been housed. During rainy season the place is marooned completely by water. We represented this to the previous Ministry, but no action was taken. Will this ministry consider the position of Burma evacuees more sympathetically and will the Minister tell us whether he has got any extra measures of relief to these poor people ?

The Hon. Thiru C. N. ANNADURAI : We have impressed upon the Central Government that the problem of rehabilitation of repatriates from Burma should be tackled in a scientific and big way just as the Central Government did with regard to East Pakistan refugees. But they have not yet taken into consideration some of the suggestions that this Government has made. Recently also, an officer of this Government attended a rehabilitation conference at Delhi and impressed upon the Central Government the need for that. As far as the plight of the Burma repatriates is concerned, I am in full sympathy with the repatriates and as far as possible this Government will try to rehabilitate them in a small manner, because this Government's financial position does not permit rehabilitation in a big way.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பர்மா, சிலோன் போன்ற நாடுகளிலிருந்து வந்திருக்கிற அகதிகள் சிறு தொழிலுக்காகக் கடன் கேட்டு மாவட்ட கலெக்டர்களுக்கு விண்ணப்பம் செய்கிறபோழுது மிகமிகக் காலதாமதத்தோடு கவனிக்கப்படுகிறது. அவற்றையெல்லாம் துரிதமாகக் கவனித்து, அவர்களுக்குச் சீக்கிரமே பொருள் கொடுப்பதின்மூலம் அவர்களுடைய வாழ்க்கை வசதியைத் தேடிக்கொள்வதற்கு ஏற்றவகையைச் செய்து கொடுக்கிற முறையிலே இந்த அரசு உத்திரவிடுமா? அவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகையையும் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தாமதங்களை எல்லாம் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆனால் அவர்களுக்கு எல்லாம் கடன் கொடுப்பதிலே சில முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. கடனுக்காக மனுச் செய்ததும் மொத்தமாகக் கடனையெல்லாம் ஒரேயடியாகக் கொடுப்பதில்லை. ஏழ்மையும் வறுமையும் இருக்கிற நாட்டிலே தொகையை மொத்தமாகக் கொடுத்து விட்டால் அவற்றைத் தகுந்த முறையிலே செலவழிப்பார்களா மாட்டார்களா என்ற கருத்தில் அவர்கள் உள்ளபடியே தகுந்த முறையிலே செலவழிக்கத் தக்கவகையில் முதலிலே ஓரளவுக்குக் கடனும் இரண்டாவது முறையாக பாக்கிக் கடனும் இந்த விதமாகக் கொடுக்கப்படுகிறது. இதனாலே தாமதங்கள் ஏற்பட்டால் அவற்றைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1967 ஜூலை 18]

திரு. க. ர. நல்லசிவன் : பாகிஸ்தானாக இருந்தாலும், பர்மாவாக இருந்தாலும் அகதிகள் என்றால் எல்லோரும் இந்தியர்கள் என்ற முறையில் தமிழர்களா ஆந்திரர்கள் என்று கணக்கு வைத்துக்கொள்ளாமல் நமது அரசாங்கம் உதவிச் செய்வதை நிறுத்தி விட்டு, இந்திய அரசாங்கமே எல்லா அகதிகளுக்கும் முழுப்பொறுபேற்று உதவிகள் செய்யக்கூடிய வகையில் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த அரசு வலி யுறுத்துவதைத்தான் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கிறார்கள். இதை இந்த அரசு வற்புறுத்திக்கொண்டு வருகிறது.

திரு. மா. இராசாங்கம் : சென்னையிலே இருக்கிற பர்மா அகதிகளின் விடுதியை மூடிவிடுவதற்கு உத்திரவு வந்திருக்கிறதாம். அது மத்திய அரசு உத்திரவா அல்லது மாநில அரசு உத்திரவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தனிக் கேள்விப்போட்டால் தகவல் தெரிவிக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : பர்மா அகதிகளுக்குக் கடன் கொடுக்கும்போது 'பார்ட் பார்ட்' ஆகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இதை வாங்குவதற்காக அவர்கள் வருஷக் கணக்கில் அலைந்து கொண் டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதனால் அவர்களுக்குப் போக்கு வரத்துக் கஷ்டமாகவும், செலவுக்குக் கஷ்டமாகவும் இருக்கிறது. அதை உத்தேசித்து எந்தெந்த மாதங்களில் எத்தனை தவணைகளில் எந்தத் தேதியில் கொடுக்கப்படும் என்று அரசாங்கமே ஒரு தேதியை நிச்சயிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த அரசினுடைய வரலாறே மாதக் கணக்கைப் பொருத்தது. வருஷக் கணக்காகப் பர்மா அகதிகள் அவதிப்படுவது பற்றி அவ்வளவாகத் தெரியாது. இருக்கிற கஷ்டங்களைக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. ச. சிவசாமி : பர்மாவில் இருந்து தமிழர்களைப் பர்மிய அரசாங்கம் சட்டாயப்படுத்தி வெளியேற்றாமல் இருக்கும்போது மத்திய சர்க்கார் 'தாய் நாட்டுக்கு வாருங்கள்; எல்லாச் சலுகைகளும் தருகிறோம் என்று ஆசை வார்த்தை சொன்னார்கள். ஆகவே, அங்கிருந்து வருகின்ற தமிழர்களின நலன் மத்திய சர்க்காரால் கவனிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரவலாக மக்களால் நம்பப்படுகிறது.

திரு. நா. காசிராமன் : சார். 82,755 பேர் தாயகம் திரும்பியிருப்ப தாகச் சொன்னார்கள். அவர்களுடைய புனர் வாழ்வுக்காகக் கடனாகவும், மானியமாகவும் தரப்பட்டிருக்கிற மொததத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்த விவரங்கள் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இவ்வாறு பர்மாவிலிருந்து வெளி யேற்றப்பட்டவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை விட்டு விட்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஏராளமான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் மட்டும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சொத்தை மீண்டும் பெற்றுத் தருவதற்கு மத்திய சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னாலும் நமது ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரைத் தீவிரப்படுத்தி, போராடி, அந்தச் சொத்துக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மத்திய சர்க்காரோடு போராடுவதற்காக இருப்பதாகக் கருதுவது தவறு. இந்தப் பிரச்சினைகளை மத்திய சர்க்காரிடத்தில் நிரம்ப வலியுறுத்தி வந்திருக்கிறோம். பர்மா அகதிகள் அங்கு விட்டு வந்த சொத்துக்களைத் திரும்பப் பெற்றுத் தரவேண்டுமென்பதைப் பற்றி இந்த அவையில் கூட எல்லா கட்சி உறுப்பினர்களும் ஒன்றுபட்டு உத்தியோகப் பற்றற்ற தீர்மானமாக நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பினால் கூட பலன் இருக்கும்.

Police Flying Squads

*391 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to disband the Police Flying Squads for checking over-speeding by motor vehicles : and

(*b*) if so, the object of the same ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, recently I have heard that Flying Squads have been disbanded and that their work has been given to the regular police. Is that a fact ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the hon. Member is misinformed.

திரு. நா. காசிராமன் : அதிக வேகமாகச் செல்லும் மோட்டார் வண்டிகளை செக் செய்வதற்காக உள்ள போலீஸ் பிரிவை நிறுத்திவிடப் போவதில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்குப் புதிய வண்டிகளை வாங்கிக் கொடுத்தால்தான் இதை நன்றாகச் செய்ய முடியும் என்ற காரணத்தால் அதற்காக அதிகப்பணம் ஒதுக்கி வண்டிகளை வாங்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கேள்வி இந்தப் பிரிவை எடுத்துவிட்டார்களா என்பது. " எடுக்கவில்லை " என்று பதிலளிக்கப் பட்டது. அவர்களுடைய திறமையை அதிகப்படுத்துவதற்கு வழிவகைகள் தேவைப்பட்டால் ஆலோசிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that some reorganisation is taking place in the Police Department, with the result that some retrenchment is taking place and that some police officials have been affected by it ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I want my hon. Friend, Thiru Vinayakam to go to the source which has supplied him with this information and get it corrected.

State Emblem

* 392 *Q* —THIRU K. VINAYAKAM : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) under what authority and under what rules and sanctions the Government have changed the motto ' Satyameva Jayathe " in Sanskrit in the State Emblem into " Vaimaye Vellum " in Tamil ; and

(*b*) was the Legislature consulted ?

1967 ஜூலை 18]

Sale of rice at low price

*404 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state.—

(*a*) whether it is a fact that some sympathisers of the party in power running the Government, sold rice at a considerably low price in various areas like Triplicane, Teynampet, Royapettah, Kodambakkam, Alandur and Tambaram on 23rd February 1967 ;

(*b*) if so, whether it is still being sold at that price ; and

(*c*) how does that price compare with the price of rice sold in Government ration shops ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) முதல் (உ) வரை திருவல்லிக்கேணி, தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, கோடம்பாக்கம் போன்ற இடங்களில் 23—2—1967 அன்று விற்ற விலையை விட அரசாங்கப் பங்கீட்டுக் கடைகளில் விற்கப்படும் அரிசியின் விலை குறைவா, அதிகமா என்று கேட்கிறார்கள். அப்படி விற்றதா என்றால் அதுபற்றி அரசாங்கத்தினிடம் தகவல் இல்லை. திருவல்லிக்கேணியில் விற்றார்கள் என்றால், அங்கத்தினர் அவர்கள் திருவல்லிக்கேணியில் இருக்கிறார்கள். அவர்கள் அப்படி வாங்கினாரா இல்லையா என்று தெரியவில்லை. கிடைக்காததால் அப்படிச் சொல்கிறார்களோ என்று தெரியவில்லை. அதுபற்றிய தகவல் அரசாங்கத்திற்கு இல்லாததால் அந்த விலைக்கும் அரசாங்க விலைக்கும் உள்ள வேறுபாடு பற்றிய கேள்வி எழவில்லை.

திரு. கே. விநாயகம் : 23—2—1967 நாள்தான் நாம் எல்லாம் வெற்றி பெற்றதோ அல்லது தோல்வி பெற்றதோ என்பதையெல்லாம் வானொலியில் விளக்கம் செய்யப்பட்டது. அன்று, இன்று ஆட்சியில் உள்ள கட்சிக்காரர்களின் நண்பர்கள் அரிசியை அன்றிருந்த விலைக்கு அதிகமான விலை கொடுத்து வாங்கி இவர்கள் வெற்றி பெற்றதை விழாவாகக் கொண்டாடவேண்டுமென்று அதற்குப் பெயரும் தந்து ஒன்றும் தொடர்பில்லாத வகையில் அண்ணா அரிசி, எம். ஜி. ஆர். அரிசி, கருணாநிதி அரிசி, விநாயகம் அரிசி என்று திருத்தணியில் கூட விற்றார்கள் —இப்படி அதிகவிலைக்கு அரிசியை வாங்கி குறைவான விலைக்கு விற்றது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் சொல்கிறேன். அப்படி விற்றிருக்கலாம். ஆனால் அரசாங்கத்திற்கு அதுபற்றிய தகவல் இல்லை. அன்றைய நாளில், சரித்திரப் பிரசித்தி பெற்ற நாளில் அவர்கள் அதிக விலைக்கு வாங்கி குறைந்தவிலைக்கு விற்றது என்பது தானம் கொடுப்பதுபோல்தான் அர்த்தம். அரிசி தானம் என்று நீங்கள் வைத்திருப்பதுபோல் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அரசாங்கத்திற்கு அது பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை. அந்த அரிசி அந்த விலையில் அங்கத்தினர் அவர்களுக்கு கிடைக்காததால் சொல்கிறார்களோ அல்லது பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியால் சொல்கிறார்களோ என்று தெரியவில்லை.

திரு. எஸ். முருகையன் : இருபது ஆண்டு ஆட்சியிலிருந்து மக்கள் விடுபட்ட காரணத்திற்காக பல ஊர்களில் ஏழை மக்களுக்கு இலவசமாக அரிசி கொடுக்கப்பட்டது உண்மையா ? திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள், திருத்தணியில் கூட விற்றார்கள் என்று. அது நியாயமான விலையில் விற்கப்பட்டதா ? அல்லது ப்ளாக் மார்க்கெட் விலையில் விற்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தங்கள் மகிழ்ச்சிப்பெருக்கில், இருபது ஆண்டுகளாக இருந்த அரசின் மாற்றத்தை தமிழகம் உற்சாகத்தோடு வரவேற்கிறது என்பதற்கு அறிகுறியாக எவ்வளவோ விதமான உற்சாக வெளியீட்டினை மக்கள் பல்வேறு வகைகளில் பின்பற்றியிருக்கலாம்.

பொருள்களின் விலை உயர்வு

* 405 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-வது ஆண்டில் ரூபாய் மதிப்பை குறைத்ததினால் விலைவாசிகள் உயர்ந்தனவா ?

(இ) எந்தெந்த பொருள்களின் விலைகள் உயர்ந்தன ?

(உ) சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

(எ) எத்தனை பேர்களின் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(ஐ) அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள், ஜில்லாவாரியாக ?

(ஒ) விவரம் மேஜை மீது வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) முதல் (ஒ) வரை—சபை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : விலைவாசி உயர்ந்ததற்கு இந்த நாணய மதிப்பு குறைந்தது மட்டுமல்ல. பல காரணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஒரு காரணம் உணவுப்பொருள்களை குறிப்பாக மூன்று மாதங்களுக்கு முன்னால் வடநாட்டிலிருந்து லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சோளத்தைக் கொண்டுவந்து இருப்பில் வைத்து மக்களுக்கு வினியோகம் செய்யாமல் அவை மக்கி மண்ணாக போய் விட்டது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதன் காரணமாக அதை விலையை உயர்த்தி விற்கக்கூடிய அளவிற்கு நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்களைச் சொல்வார்களா ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is not correct.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that the object of devaluation of the rupee was not to affect the internal prices but to affect only foreign exchange and external prices and how does the Minister reconcile the fact that after devaluation the prices of internal commodities have been soaring, throwing the blame on the devaluation of the rupee ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It did affect the internal prices. We see from experience that the prices of some of the commodities have spiralled due to devaluation.

திரு. வி. கே. கோதண்டராமன் : அரிசி விலை குறைந்தால் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலையும் குறையும் என்று எதிர்பார்த்ததைப்போல் நடக்கவில்லை. அதற்குக் காரணம் வர்த்தகர்களிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பது. ஆகவே வர்த்தகர்கள் ஒத்துழைப்பு கிடைக்காத இந்த நிலையிலிருக்கும்போது சர்க்காரே அத்தியாவசியமான எல்லா உணவுப் பொருள்களையும் பங்கீடு செய்யக்கூடிய அளவிற்கு ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வர்த்தகர்கள் ஒத்துழைப்பு கிடைத்திருக்குமானால் இன்னும் விலைவாசிகள் இறங்குமுகமாக ஆக பெரும் வாய்ப்பிருக்கிறது. இன்னும் அந்த நிலை இருக்கிறது. வர்த்தக சமூகத்தின் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் கனம் அங்கத்தினரின் சிபார்சின திசை வழிதான் இந்த அரசாங்கம் நோக்கிப் போக வேண்டியிருக்கும்.

a 669–673 பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களின் நிர்வாக மேல்வரி

*406 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த உணவுப் பொருள்களின் மீது Administrative Surcharge எவ்வளவு வசூலிக்கப்படுகிறது ?

(இ) இத்திட்டம் எந்த ஆண்டு முதல் அமுலுக்கு வந்தது ?

(உ) அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) Administrative surcharge is levied on rice, millets, wheat and wheat products, pulses and sugar. An administrative sur-charge of Re. 1. per quintal is collected on rice, millets, wheat and wheat products and an admintstrative surcharge of Rs. 2 per quintal is collected on pulses and sugar.

(*b*) The surcharge is being collected ever since the stocks were distributed on Government account, i.e., from 1964–65.

(*c*) The administrative surcharge collected in a year is approximately equal to the annual expenditure on Civil Supplies staff. As to the years 1964–65, 1965–66 and 1966–67 the receipts classified as administrative surcharge were Rs. 14,86,971, Rs. 82,08,393 and Rs.63,16,953 respectively. However, some more amounts might have been collected as administrative surcharge though not classified as such. For the year 1967–68, it will be about Rs. 1·43 crores whereas the experinditure on Civil Supplies staff in 1967–68 will be about Rs. 1·39 crores.

திரு. வி. கே. கோதண்டராமன் : உணவுப் பொருள்கள் மீது எந்த விதமான வரியும் போடுவதில்லை என்று சொல்லிவிட்டு இப்படி மறைமுகமாக அட்மினிஸ்ட்ரேட்டிவ் சர்சார்ஜ் என்று நிர்வாக மேல் வரி போடப்பட்டு வசூலிக்கப்படுகிறதே, இது மேலும் விலை உயர்வதற்கு ஒரு காரணமாக இருக்கிறதல்லவா ? ஆகவே இதை எடுப்பதற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பெயர் அளவில் சர்சார்ஜ் என்றிருந்தாலும்—ஒரு பக்கத்தில் அங்கத்தினரைப் போன்றவர்கள் அத்தியாவசியப் பொருள்களை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்றும் அதை விநியோகிக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள், அப்படி அத்தியாவசியப் உணவுப் பொருள்களை ஏற்று நடத்தும்போது ஏற்படுகிற நிர்வாகச் செலவை, தானியக் களஞ்சியங்கள், ஸ்டோரேஜ் ஃபெஸிலிட்டீஸ் போன்றவை அல்லாமல் இந்த ஆண்டு மட்டும் சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்ட் 68 கோடி ரூபாய்க்கு வரவு செலவு நடத்துகிறபோது, அப்படி ப்ரொக்யூர்மெண்ட் எல்லாம் செய்யும்போது நிர்வாகச் செலவை சரிக்கட்ட ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று விதிக்கப்படுகிறது. இது இல்லாவிட்டால் இந்தச் செலவை வேறு ஒரு புறத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே இதை உணவுத் தானியங்கள் மீது போடப்படும் வரி என்ற பழி வரும் நிலையை சுமத்துவது சரியல்ல.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த சிவில் சப்ளை இலாகாவிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோதுமையோ, அரிசியோ அல்லது சர்க்கரையோ கொடுக்கப்படுகிறது. அவர்கள் பணம் கொடுத்துவிட்டு எடுத்துக்கொள்ளுகிறார்களா ? அல்லது கடனாக எடுத்துக்கொள்ளுகிறார்களா ?

[1967 ஜூலை 18

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, யாருக்கும் இலவசமாகக் கொடுப்பதில்லை. பணத்தின் அடிப்படையில்தான் கொடுக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், இந்தப் பொருள்களை வாங்கிக் கொள்முதல் செய்யும் நேரத்தில், அதில் கழிவு என்ற பெயரால் ஐந்து முதல் பத்து சதவிகிதம் கழித்து விடுகிறார்கள். அதற்கு மேல் நிர்வாக வரி என்று வாங்கப்படுகிறது. அந்த முறையில் இரண்டு வரிகளைப் போல் தெரிகிறது அல்லவா ? ஒன்று இந்த கழிவு செய்வதை விட்டுவிட வேண்டும் ; அல்லது இந்த வரியையாவது விட்டுவிட வேண்டும். இல்லையென்றால் அமைச்சர் அவர்கள் இரண்டுமே இருக்க வேண்டுமென்று கருதுகிறாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக இப்போது உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குகிற விலைக்கும், விநியோகிக்கப்படும் இடத்தில் இருக்கிற விலைக்கும் மத்தியில் இருக்கிற வித்தியாசங்கள் குறைக்கப்படவேண்டும் என்ற உறுப்பினருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளலாம். திரும்பத் திரும்ப அரசாங்கம் உணவுப் பொருள் மீது வரி போடுகிறது என்று பிரசார நோக்கத்தோடு வலியுறுத்துவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. கழிவு என்பது ஐந்து சதவீதம் என்று சொன்னார்கள் ; அது $2\frac{1}{2}$ சதவீதம் தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. எஸ். ஐ. மருந்தகங்கள், திருப்பூர்

*407 வினு.—**திரு. சு. துரைசாமி :** மதிப்பிற்குரிய மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை என்ன ?

(இ) திருப்பூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இந்த தேதியில் வேலையில் உள்ள டாக்டர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருப்பூரில், கேள்வியில் குறிப்பிட்டுள்ளபடி இ.எஸ்.ஐ. மருத்துவமனை இல்லை. ஆனால் அங்கு இரண்டு இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் (Dispensaries) இயங்கி வருகின்றன. 1—4—1967 வரை அவைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 1	3,583 பேர்.
இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 2	3,883 பேர்.

(இ) திருப்பூரில் இ.எஸ்.ஐ. மருந்தகங்களில் இந்த தேதியில் வேலையில் உள்ள டாக்டர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 1	5
இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 2	4

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் இ.எஸ்.ஐ. திட்டம் தொழிலாளர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அங்கு போதுமான டாக்டர்கள் இல்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அங்குள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை வைத்து ஒன்பது டாக்டர்கள் போடவேண்டுமென்று முடிவுகட்டி இப்போது போடப்பட்டிருக்கிறார்கள்.

1967 ஜுலை 18]

Family Planning Programme

*408 *Q.*—THIRU K. VINAYAKAM
THIRU S. SIVASUBRAMANIAN
THIRU V. K. KOTHANDARAMAN
THIRU L. BALARAMAN
} Will the Hon.
the Minister for Public Health be pleased to state—

(*a*) the policy and attitude of the Government towards the increasing population in the State ; and

(*b*) whether it is proposed to intensify the family planning ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ) : நமது பொருளாதார வளர்ச்சியுடன் பொருந்தும் அளவில் மக்கட் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதே அரசின் கொள்கையாகும். அந்த அளவில் அரசு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை முனைந்து செயல்படுத்தக் கருதியுள்ளது.

திரு. கே. விநாயகம் : ஸார், ஆண்டுதோறும் நமது நாட்டிலே மக்கள் தொகை ஏறிக்கொண்டே வந்தும், அதைத் தடுப்பதற்குக் குடும்பக் கட்டுப்பாடு என்று சொல்லி எவ்வளவோ பிரசாரம் செய்தும் நம்மால் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருப்பதால் நமது சர்க்கார் இந்தக் கொள்கையைத் தீவிரப்படுத்து வதற்கு என்ன ஆலோசித்துக் கொண்டிருக்கிறது ? இதிலே ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே அவைகளையெல்லாம் பற்றி அதிக அக்கறை காட்டாத கட்சி வந்த பிறகு இந்த முறைகளையெல்லாம் கிண்டல் செய்யாமல்—' the devices which the Government adopt for family planning ' நடைமுறையிலே அவைகளைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்யத் தீவிர முயற்சியிலே இந்த ஆட்சி ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் குறிப்பிட்டது தவறான கருத்தாகும். இந்த அரசு கிண்டல் செய்வது கிடையாது. உறுப்பினருடைய கேள்விதான் கிண்டல் செய்வதாக அமைந்துள்ளது. அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், இந்தப் பொருளாதார வசதியைச் சிக்கனப்படுத்தும் முறையிலே இந்த முறையைக் கையாளுவதை விட இன்னும் அதிகப்படியாகச் சிக்கனப்படுத்தக் கூடிய வழிகளும் உண்டு. நன்றாக இருக்கக் கூடிய எல்லோருக்கும் 30 ரூபாய் லஞ்சம் கொடுக்கக் கூடிய முறையில் ஆசை காட்டி அறுவை சிகிச்சை செய்வதை விட, ஆஸ்பத்திரிகளிலும் மற்றும் பல இடங்களிலும் லெப்ரஸி, டி.பி. போன்ற தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளும் இந்தத் தொத்து நோய்களால் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருப்பதால் அவர்களுக்குக் கட்டாய அறுவை சிகிச்சை செய்தால் அதனால் நன்மைகள் ஒன்றுக்குப் பத்தாக ஏற்படக்கூடிய நிலைமை உண்டு. அது போலச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டது போல லஞ்சம் என்பது இல்லை. உற்சாகப் படுத்துவதற்காகத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர—' as a sort of inducement ' லஞ்சமாகக் கொடுப்பது இல்லை. கனம் உறுப்பினர்களிடம் வேறு பல கருத்துக்கள் இருந்து அவைகளை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் வாங்கும் தொகை எவ்வளவு ? இதை அதிகமாக விரிவுபடுத்த இந்தச் சர்க்கார் ஏற்கெனவே விளம்பர அதிகாரிகளாக இருந்தவர்களை ஜில்லா அதிகாரிகளாக நியமிக்க உத்தேசித்திருப்பதாகத் தகவல் வருகிறது. அந்த மாதிரி எத்தனை அதிகாரிகளை நியமிக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஸார், குடும்பக் கட்டுப்பாடு விஷயம் ரொம்பத் தீவிரமாக இருக்கிற இந்த யுகத்திலே, சில பத்திரிக்கைகளில் அதிகப் பிள்ளைகளைப் பெற்றால் பரிசு கொடுப்பதாகச் சொல்லுகிறார்களே, அந்த மாதிரிப் பத்திரிக்கைச் செய்தி போடக் கூடாது என்று கட்டுப்படுத்து வதைப் பற்றி இந்த அரசாங்கம் யோசிக்குமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் உறுப்பினருடைய கேள்விக்கும் தொடர்பு இல்லை என்றாலும், அது போன்ற நிகழ்ச்சி இனி நடைபெறாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, is there any proposal under the consideration of the Government for legalising abortion by taking steps to amend the Indian Penal Code ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The matter is under consideration.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, குடும்பக்கட்டுப் பாடுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலேயும் குடும்பக் கட்டுப்பாடு ஃபீல்டு வொர்க்கர்ஸை நியமனம் செய்திருக்கிறோம். அவர் களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுவதோடு, வாசக்டமி செய்து கொள்ளு கிறவர்களுக்கு ஒரு வார ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் 30 ரூபாய் அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் நல்ல முறையில் சிறப்பாக நடைபெறவேண்டும், பொது மக்கள் இதைக் கடைபிடிக்கவேண்டும் என்று இந்த உதவித் தொகையை அதிகப்படுத்தி கவர்ச்சி ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா? ஃபீல்டு வொர்க்கர்ஸுக்கு உதவித் தொகையை இன்னும் கூட்டிக் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எம். சண்முகம் : தலைவர் அவர்களே, மூன்று குழந்தைகளுக்கு மேலே பெறக்கூடாது என்ற ஆலோசனையை மத்திய அரசு கூறியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது பற்றி மத்திய சுகாதார அமைச்சர் அவர்கள் ஒரு திட்டமிட்டு எல்லா மாநிலச் சுகாதார அமைச்சர்களையும் அழைத்துப் பேசினார்கள். அவர்களும் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறக் கூடாது என்று சட்டம் போடுவது, அபார்ஷனை லீகலைஸ் செய்ய சட்டம் போடுவது, பணம் கொடுக்கும் முறையில் அதை அதிகப்படுத்தி அதிக உற்சாகப்படுத்துவது ஆகிய பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களைக் கலந்து ஒரு முடிவுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எம். மேத்தா : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு பிர சாரம் செய்யக்கூடியவர்களாக, குடும்பக்கட்டுப்பாடு சட்டதிட்டத்திற்குட் பட்டு 2, 3 குழந்தைகளைப் பெற்றவர்களை மட்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி உரிய காலத்தில் ஆலோசிக்கப்படும்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் இந்த மாகாணத்தில் மொத்தத்தில் 95 சதவிகிதம் ஆதிதிராவிட மக்களும், பாக்கியிருக்கிற வன்னியப் பெருமக்களும் தான் ஈடுபட்டிருக்கிறார்கள்

என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இப்படி ஒரு தனிப்பட்ட சமூகத்தினரை மட்டும் அறுவை சிகிச்சையில் ஈடுபடுத்துவதும், மற்றபடி முஸ்லிம் சமுதாயம், கிறிஸ்தவ சமுதாயம் கண்டிப்பாக மத ஆசாரத்திஞல் இந்த அறுவை சிக்ச்சை செய்து கொள்ளாமல் இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? அம்மாதிரி சமுதாயத்தினரும் இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ள நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், இந்த இரண்டு சமூகமும் குறைந்தது 50 வருஷ காலத்தில் அழிந்துவிடும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் பல தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரும் மட்டும் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆளாகிருர்கள் என்று சொல்வது சரியல்ல. ஜாதிமத வேறுபாடு இல்லாமல் எல்லா மதத்தினரும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிருர்கள்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். ஏற்கனவே இதே ஸெஷனில் இதே அசெம்பளியில் இந்த கேள்வி கேட்கப்பட்டு பதில் சொல்லப்பட்டது. இதே உபகேள்விகளும் கேட்கப்பட்டிருக்கின்றன. மறுபடியும் இதேமாதிரியாக கேள்விகள் கேட்பது சரிதாஞ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதோடு துணை வினுக்களை நிறுத்திக் கொள்ளலாமா.?

எழுந்திருந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கே. விஞயகம் இறுதித் துணை விஞவைக் கேட்பார்.

திரு. மா. பா. சாரதி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, உபகேள்விகள் கேட்பதற்காக பல பேர்கள் கையை தூக்கிக் கொண்டிருக்கும்பொழுது நண்பர் விஞயகம் அவர்கள் மட்டும் எழுந்து நின்றுகொண்டு கேள்வி கேட்பதற்கு முந்திவிடுகிருர். அம்மாதிரி இல்லாமல், நீங்கள் பெயர் சொன்னதற்குப் பிறகு தான் எழுந்திருக்கவேண்டும் என்று உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, it is the duty of every Member who is anxious to put any question to draw the eye of the Speaker. Late marriages and less children are advocated by the Malthusean theory. Whereas Dr. Chandrasekhar, an expert on population problem, has been specially drafted on to the Central Cabinet to encourage family planning, what salutary steps have been taken by our State to respond to the call of the Centre to investigate the theory of late marriages and less children and is it in accordance with that theory that our Health Minister has not yet got married ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த வயதை உயர்த்தவேண்டும் என்ற கருத்து மத்திய அரசாங்கத்திஞுடைய சுகாதார அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே இந்து திருமண சட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு இல்லாத நிலை இருந்து, 1955—வது ஆண்டு சட்டத்தில் 15 வயது என்று குறிப்பிடப்பட்டது. அதற்கு முன்ஞலே 1920-ம் ஆண்டில் சிறு குழந்தைகள் திருமணம் செய்துகொள்வதைத் தடுப்பதற்கு 16 வயது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதை 21 வயதாக ஆக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் கருதுகிறது. இந்த அரசாங்கத்திடமிருந்து அதைப்பற்றி கருத்து கேட்கப்பட்டிருக்கிறது.

THE HON. THIRU C. N. ANNADURAI : Since my hon. Friend has raised the Malthusean theory, I want to refresh his memory and correct him. Malthuse said that there need not be birth

control because, when population increased, there would be war and pestilence and there would be natural reduction of population. But that is inhuman and merciless and that is why modern Governments are thinking in terms of controlling birth.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், தலைவர் அவர்கள் ஒரு ரூலிங் கொடுக்க வேண்டும். தலைவர் அவர்கள், பெயரைச் சொன்ன பிறகு கேள்விகள் கேட்பதற்கு எழுந்திருக்க வேண்டும் என்று ரூலிங் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் கையை தூக்காமல் எழுந்திருந்தால், நாங்கள் கையை தூக்குவது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கையை மட்டும் உயர்த்த வேண்டும். கையை உயர்த்துவதை இந்த வினாவிற்கு இதோடு நிறுத்திக்கொள்ளலாம்.

Rice seized at Boothapadi

*409 *Q.*—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —

(*a*) whether a lorry load of rice was seized by the Tahsildar, Bhavani at Boothapadi on 18th May 1967 ;

(*b*) whether it is a fact that the above lorry load of rice was released by the District Revenue Officer and the Collector to the owner ; and

(*c*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ஆம். லாரியிலிருந்து அரிசியை கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அதிகாரி உரிமையாளரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

(உ) ஒப்படைக்கும்படி உத்தரவிடப்பட்ட அரிசியை எச்சூழ்நிலைகளில் திருப்பிக் கொடுக்க நேர்ந்ததென்பது குறித்து விரிவாக விசாரணை செய்து, உடனடியாக அறிக்கை அனுப்பும்படிக் கோயம்புத்தூர் கலெக்டர் கேட்கப்பட்டுள்ளார்.

திரு. ஏ. எம். ராஜா : கலெக்டர், மாவட்ட வருவாய் அதிகாரி இருவரும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். உயர்மட்ட அதிகாரி ஒருவரை நியமித்து விசாரணை நடத்துவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் குறிப்பிட்டேன். கோயம்புத்தூரைச் சேர்ந்த டி. ஆர். ஓ. அவர்கள் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட இந்த லாரியை என்ன காரணங்களினால், என்ன அடிப்படையின் கீழ் விட நேர்ந்தது என்பதற்கான ஒரு விவரமான அறிக்கையை அரசாங்கம் கேட்டிருக்கிறது. அரசாங்கம், அவர் அந்த லாரியை விட்டதற்கு சரியான சமாதானம் இல்லை என்று கருதிய காரணத்தினால்தான், அதை அவர் அப்படி விடுவதற்கு என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி கலெக்டர் அவர்கள் மிக விரைவாக ஒரு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

வெள்ளிக்குறியிடப்படாத வினாக்கள்

Corruption cases.

35 *Q.*—Thiru A. BALASUBRAMANIAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of corruption cases and the like against Government servants drawing less than Rs. 200 per month referred to the Disciplinary Proceedings Tribunal in Madurai District from 1964–65, up-to-date;

1967 ஜூலை 18]

(*b*) authority or rules by which this was done; and

(*c*) the number of similar cases against Government servants drawing more than Rs. 200 per month referred to the Heads of Departments in Madurai District.

A.—(*a*) 14 (fourteen).

(*b*) Cases are referred to the Tribunals for Disciplinary Proceedings for enquiry under rule 4 of the Madras Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955.

(*c*) The Madras Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955 do not provide for referring corruption cases of Government servants drawing more than Rs. 200 per mensem to the Heads of Departments.

விடை.—(அ) 14 (பதினான்கு).

(இ) தமிழக 1955-ம் ஆண்டு சிவில் பணியாளர் (ஒழுங்கு முறை நடவடிக்கை நடுவர் மன்ற) விதிகளின் 4-வது விதியின்கீழ் விசாரணை செய்வதற்காக நடுவர் மன்றத்திற்கு வழக்குகள் அனுப்பப்பட்டன.

(உ) திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கும் குறைவாகச் சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்கள் பற்றிய லஞ்ச ஊழல் வழக்குகளைத் துறைத்தலைவர்களுக்கு அனுப்ப தமிழக 1955-ம் ஆண்டு சிவில் பணியாளர் (ஒழுங்குமுறை நடவடிக்கை நடுவர் மன்ற) விதிகளின் கீழ் வகை செய்யப்படவில்லை.

தொழில்கள்

36 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராஜ்ய சர்க்காரும், தனி நபர்களும் கூட்டுச் சேர்ந்து நடத்தப்பட்டு வரும் தொழில்கள் யாவை?

(இ) அவைகள் எப்பொழுது முதல் நடத்தப்பட்டு வருகின்றன?

(உ) அவைகளுள் சர்க்கார் நிர்வாக அதிகாரத்தில் உள்ளவை யாவை?

(எ) அவைகளில் 1957 முதல் 1966 வரை ஏற்பட்ட லாபம் நஷ்டம் முறையே எவ்வளவு?

விடை.(அ), and (இ) தனியார் துறையுடன் இணைந்து எந்தத் தொழிலையும் அரசு நடத்தவில்லை. மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி போன்ற சில கம்பெனிகளின் பங்கு மூலதனத்திற்குத் தமிழகத் தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷன் மூலமாக அரசு தொகை வழங்கியிருக்கிறது. சதேத் இண்டியா விஸ்கோஸ், தாரங்கத்ரா கெமிகல் ஒர்க்ஸ் போன்ற சில கம்பெனிகளில் அரசு நேரடியாகப் பங்குகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(உ) கம்பெனி நெறியாளர் கழகத்தில் அரசுக்குப் பிரதிநிதித்துவ உரிமை இருப்பதைத் தவிர, அந்தக் கம்பெனிகளின் நிர்வாகத்தில் அரசுக்கு எவ்வித மேலாதிக்கமும் இல்லை.

(எ) இக்கேள்வி எழவில்லை.

A.—(*a*) & (*b*) The Government are not running any industries jointly with the Private Sector. They have however contributed to the share capital structure of certain companies like the **Madras Aluminium Company** through the **Madras Industrial Investment**

Corporation. Government have also directly taken up shares in certain companies like the South India Viscose and the Dharangdra Chemical Works.

(*c*) The Government do not have control over the administration of these companies except by representation on the Board of Directors of the Company.

(*d*) Does not arise.

இரும்பு உருக்கு உருட்டாலை, அரக்கோணம்

37 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-ல் ஜனவரி மாதத்தில் வடார்க்காடு மாவட்டம் அரக்கோணத்தில் துவக்க விழா செய்யப்பட்ட இரும்பு உருக்கு உருட்டாலை இன்றுவரை எந்த அளவுக்கு செயல்பட துவங்கியுள்ளது ?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்ட நிலம் எத்தனை எக்கர் ?

(உ) பொது மக்களிடமிருந்து எடுக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டுவிட்டதா ?

(எ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை.—(அ) இத் தொழிற்சாலைத் திட்டத்திற்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு நிலமும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. துவக்க ஆய்வுகளும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. சோவியத் ரஷியாவிடமிருந்து பெறப்பட்ட நுணுக்கமான திட்ட அறிக்கை ஆராயப்பட்டு, அதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசிடமிருந்து தொழில் உரிமம் பெறப்பட்டுள்ளது. ரூ. 225 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் பெறப்பட்டு, அதனைப் பத்து ஆண்டுகளில் திருப்பித் தருவதற்கான கடன் வசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட வேண்டிய சாதனங்களைத் தருவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சோவியத் ரஷியாவிடமிருந்து தொழில் நுட்ப உதவியைப் பெறுவதற்கான நிபந்தனைகளும் இறுதி செய்யப்பட்டுள்ளன. தலைமையான தொழில் விற்பன்னர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விரைவில் கட்டிட வேலைகள் தொடங்கப்படும். ரூ. 22 இலட்சம் செலவில், நீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தனி ரயில்பாதை இணைப்பு ஒன்றை அமைத்துக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் நிர்மாண வேலைகள் ஏறத்தாழ 24 திங்கள்களில் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத் தொடர் வார்ப்படத் தொழிற்சாலையை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகள் வைப்பதற்குரிய சீர்திருத்தப்பட்ட நிலம் தருவதற்கான திட்டத்திற்கும் (Developed Plot Scheme) மொத்தம் 652·69 எக்கர் பரப்புள்ள நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொடர் வார்ப்படத் தொழிற்சாலைக்கு மட்டும் தேவைப்படக்கூடிய நிலப்பரப்பு இன்னும் சில நாட்களில் தனியே பிரிக்கப்படும்.

(உ) and (எ) ஆம். இழப்பீடாக ரூ. 5,21,414·50 கொடுக்கப்பட்டுள்ளது.

A.—(*a*) In respect of this project, lands have been selected and acquired. Preliminary surveys have been completed. A detailed Project Report has been obtained from USSR, has been examined and approved. Industrial licence from the Government of India has been secured. Import licence to a value of Rs. 225 lakhs has been secured and it has been accommodated under a ten-year credit facility.

Orders have been placed for the imported equipments and terms have been finalised for USSR technical assistance. Top technical men have been recruited. Civil construction will begin shortly. Arrangements for water-supply at a cost of Rs. 22 lakhs and for a railway siding have been made.

The project is expected to be completed in about 24 months.

(*b*) The total area earmarked for setting up the Continuous Casting Plant and the Developed Plot Scheme is 652·69 acres. The actual extent required for the Continuous Casting Plant only will be separated in the course of a few days.

(*c*) and (*d*) Yes. A sum of Rs. 5,21,414·50 P. has been paid as compensation.

தஞ்சை மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்பு

38 வினா.—**திரு ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சார போர்டார் மூலம் 1967-ம் ஆண்டிற்கு எத்தனை கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளது?

(இ) அவைகளின் விவரம் சபை முன் வைக்கப்படுமா?

விடை—(அ) & (இ) தஞ்சாவூர் மாவட்டத்தில், 1967-ம் ஆண்டில் கீழேகண்ட விவரப்படி 144 தலைமை கிராமங்களுக்கும், 81 சிற்றூர்களுக்கும் மின் விஸ்தரிப்பு செய்ய தமிழக மின்சார குழுவினால் திட்டமிடப்பட்டிருக்கிறது :—

தொடர் எண்ணும் தாலூகாவின் பெயரும்.	1967-ம் ஆண்டு மின் விஸ்தரிப்பு செய்ய திட்டமிட்டுள்ளவைகளின் எண்ணிக்கை.		
	தலைமை கிராமங்கள்.	சிற்றூர்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1 சீர்காழி	9	5	14
2 மாயூரம்	14	2	16
3 நன்னிலம்	7	6	13
4 தஞ்சாவூர்	4	5	9
5 ஒரத்தநாடு	11	10	21
6 மன்னார்குடி	10	4	14
7 நாகப்பட்டினம்	7	9	16
8 திருத்துறைப்பூண்டி	7	5	12
9 பட்டுக்கோட்டை	23	18	41
10 அறந்தாங்கி	22	17	39
மொத்தம்	114	81	195

A.—(*a*) and (*b*) The Madras State Electricity Board has proposed to electrify 114 main villages and 81 hamlets in Thanjavur district during 1967 as indicated below :—

Serial number and name of taluk.		Number proposed to be electrified during the year 1967.		
		Main villages.	Hamlets.	Total.
(1)		(2)	(3)	(4)
1 Sirkali	..	9	5	14
2 Mayuram	..	14	2	16
3 Nannilam	..	7	6	13
4 Thanjavur	..	4	5	9
5 Orathanadu	..	11	10	21
6 Mannargudi	..	10	4	14
7 Nagapattinam	..	7	9	16
8 Thiruthuraipoondi	..	7	5	12
9 Pattukottai	..	23	18	41
10 Aranthangi	..	22	17	39
Total	..	114	81	195

Sea water as drinking water.

39 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to State—

(*a*) Whether the Government have any proposal to convert the sea water into drinking water; and

(*b*) If so, the progress made so far?

A.—The question of conversion of see water into drinking water was examined by the Government in consultation with a U.N. Team of Experts who came over to Madras City at our request and the Government have decided to defer the scheme till other less costly schemes are implemented for augmenting the City Water Supply.

விடை.—நமது அழைப்பின்பேரில் சென்னை நகரம் வந்த ஐக்கிய நாடுகளின் வல்லுநர் குழுவின் ஆலோசனையுடன், கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டம் இவ்வரசால் பரிசீலனை செய்யப்பட்டது. நகரில் குடிநீர் வழங்குவதை பெருக்கும் குறைந்த செலவிலுள்ள மற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும் வரையில் இத்திட்டத்தை இவ்வரசு ஒத்திப்போட தீர்மானித்துள்ளது.

அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள், தென்னார்க்காடு

40 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லாவில் மாணவ மாணவிகளுக்கான அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள் முறையே எத்தனை?

(இ) அப்பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் ஆசிரியைகள் முறையே எத்தனை பேர்கள்?

(உ) அவர்கள் படிப்பு விவரம் என்ன?

விடை.—விவர அறிக்கை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

A.— statement* is appended.

* 674–677-ம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1967 ஜூலை 18]

காட்டுமன்னார்கோயில் தொகுதிக்கு மின் வசதி

41 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா காட்டுமன்னார்கோவில் தொகுதியில் எத்தனை கிராமங்களுக்கு இதுவரை மினசார வசதியளிக்கப்பட்டுள்ளது?

(இ) இன்னும் மின்சார வசதியளிக்கப்படவேண்டிய கிராமங்கள் எத்தனை?

விடை—(அ) 30 தலைக் கிராமங்கள்.

(இ) 70 தலைக் கிராமங்கள்.

A.—(a) 30 main villages.

(b) 70 main villages.

அற நிலையங்கள்

42 வினா.—திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நாகப்பட்டினம் நகரத்தில் உள்ள கிருஷ்ணன்கோயில், அகஸ்தீஸ்வரர் கோயில், சட்டையப்பர் கோயில் ஆகியவைகளின் கடந்த 5 பசலி வருடங்களுக்கான கணக்குகள் எழுதப்பட்டிருக்கின்றனவா?

விடை.—ஆம். இந்த மூன்று கோயில்கள் குறித்தும் 25—5—1967-ம் தேதி அன்று கையில் இருந்த ரொக்க இருப்பும், வங்கியில் இருந்த இருப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

		ரொக்க இருப்பு.		வங்கி இருப்பு.	
		ரூ.	பை.	ரூ.	பை.
1	ஸ்ரீ நவநீத கிருஷ்ணசாமி கோயில், நாகப்பட்டினம் நகரம்.	137	88	3419	34
2	ஸ்ரீ சட்டநாதசாமி கோயில், நாகப்பட்டினம் நகரம்.	51	63	28	53
3	ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில், வெளிப்பாளையம் (நாகப்பட்டினம்).	290	92	125	53

A.—Yes. The cash balances and the bank balances in respect of each of the three temples as on 25th May 1967 are as detailed below :—

		Cash balance.		Bank balance	
		RS.	P.	RS.	P.
1	Sri Navaneetha Krishnaswamy Temple, Nagapattinam Town ..	137	88	3,419	34
2	Sri Sattanathaswami Temple, Nagapattinam Town ..	51	63	28	53
3	Sri Agasthiswarar Temple, Velipalayam (Nagapattinam) ..	290	92	125	53

43 வினா—திரு கொ. இர. ஞானசம்பந்தன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதியுடன் முடியும் நிதி ஆண்டில் அற நிலையங்களிலிருந்து அற நிலையச் சட்டம் 94-ம் பிரிவின்படி, அரசாங்கத்துக்கு சேரவேண்டியதும், வசூலிக்கப்படாமல் தங்கி

யிருக்கும், சகாயத் தொகை, தணிக்கைக் கட்டணம், இதர சில்லரை இனங்கள் ஆகிய வருமான இனங்களின் தொகைகள் முறையே என்னென்ன ?

விடை.—

	தோராய கேட்பு.	வசூல்.	தோராய நிலுவை.
	ரூ.	ரூ.	ரூ.
1. உதவித் தொகை	41,17,300	14,71,563	26,45.737* (*கணக்கிலிருந்து அடித்து விடப் பட்ட ரூ. 21,975 இத்தொகையில் சேர்ந்துள்ளது.
2. தணிக்கைக்கட்டணம்	12,90,172	4,65,431	8,24,741* (*கணக்கிலிருந்து அடித்து விடப் பட்ட ரூ. 7,870 இத்தொகையில சேர்ந்துள்ளது.)
3. ஏனைய பலவகை இனங்கள்.	97,658·37	6,701·68	90,956·69

A.—

	Approximate Demand.	Collection.	Approximate Balance.
	RS.	RS.	RS.
1 Contribution	41,17,300	14,71,563	26,45,737* (*This amount includes a sum of Rs. 21,975 written off.)
2 Audit fees	12,90,172	4,65,431	8,24,741* (*This amount includes a sum of Rs. 7,870 written off.)
3 Other Miscellaneous items.	97,658·37	6,701·68	90,956·69

44 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:—மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அற நிலைய ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் ஆகியோர் அற நிலையப் பாதுகாப்புச் சட்டப் பிரகாரம் செய்யப்படவேண்டிய பணிகளுக்கல்லாத உற்சவங்கள், கட்டடத் திறப்பு விழாக்கள், அடிக்கல் நாட்டுதல் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதற்காக 1965–66, 1966–67 பிரயாணப் படிகள் சர்க்காரிடமிருந்து எவ்வளவு பெற்றுள்ளார்கள் ?

விடை.—இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறையைச் சேர்ந்த ஆணையாளரும், துணை ஆணையாளர்களும், உதவி ஆணையாளர்களும் மேற்படி சட்டத்தின்கீழ் அல்லது அச்சட்டத்தில் விதிகளின்கீழ் சுற்றுப்பயணம் செய்யவேண்டிய பணிகளுக்கல்லாது பிற பணிகளுக்காகச் சுற்றுப்பயணம் செய்யவில்லை. எனவே அவற்றிற்காகப் பயணப்படி எதும் பெறவில்லை.

A.—The Commissioner, Deputy Commissioners and Assistant Commissioners of the Hindu Religious and Charitable Endowments (Administration) Department have not undertaken

any journey for purposes which are not contemplated under the Hindu Religious and Charitable Endowments Act and the rules made thereunder and as such have not drawn any Travelling Allowance for such journeys.

கற்பகநாதர் குளம், திருத்துறைப்பூண்டி

45 வினு.—திரு. ந. தருமலிங்கம்: மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி "கற்பகநாதர் குளம்" இறவைப் பாசனத்திட்டம் G.O. Ms. No. 3844, dated 30-11-1965 உத்தரவுப்படி 31-5-66 அன்று ரூ. 1,65,000-க்கு டெண்டருக்கு வந்து, மெயின் வாய்க்கால் நிலம் யாவும் ஆர்ஜிதம் செய்துமுடிக்கத் திட்டமிடப்பட்டது என்ன காரணத்தால் செயல்படுத்தப்படவில்லை ?

விடை.—இத்திட்டத்திஞல் பயன்பெறும் குடியானவர்களில் 60 சதவீதத்தினரேனும் நிர்ணயிக்கப்பட்ட தண்ணீர்த் தீர்வையையும் நடை முதல் செலவையும் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டுதான் இந்த வேலைத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. சில குடியானவர்கள், இன்னும் ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கவில்லை, பயன்பெறும் குடியானவர்களில் 60 சதவீதத்தினரேனும் ஒப்பந்தங்களை எழுதிக் கொடுத்தவுடன் வேலைத்திட்டம் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

A—

The work was sanctioned subject to the condition that at least 60 per cent of the ryot-beneficiaries of the scheme agree to pay the prescribed water-cess and working expenses. Some of the ryots have not yet executed agreements. The work will be taken up for execution as soon as agreements are executed by at least 60 per cent of the ryot beneficiaries.

நொய்யல் நதிக் குறுக்கே அணை

46 வினு.—திரு. செ. பாலசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் நொய்யல் நதியின் குறுக்கே திருப்பூருக்கு மேல்புறம் ஒரு அணை கட்டி அதன் மூலம் வெள்ளம் ஏற்படும் காலத்தில் தண்ணீரை வாய்க்காலின் வழியாக திருப்பி, பல்லடம், ஈரோடு தாலுகாகளில் பல குளங்களை நிரப்பும் திட்டம் ஏதேனும் சர்க்கார் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மூலம் எந்தெந்தக் குளங்கள் பயன் பெறும்?

(உ) எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

விடை—(அ), (இ): திருப்பூர் நகரின் அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கே "மன் மறை அணைக்கட்டு" ஒன்றைக் கட்டுவதற்கும் தற்போதுள்ள ஸ்ரீகார் பெரியபாளையம் ஏரி, பதுப்பெள்ளபாளையம் ஏரி, தளவாய்பாளையம் ஏரி, புன் செய் பழத்தோலன் ஏரி, ஆகிய நான்கு ஏரிகளுக்கும் நீர்வசதி அளிக்க கால் வாய் ஒன்றை வெட்டுவதற்கும், வழியில் புதிய ஏரி ஒன்றை அமைக்கவும் செயற்குறிப்பு உள்ளது.

(உ) இத்திட்டம் விரைவில் நுணுக்கமாகப் பரிசீலனை செய்வதற்கு மேற்கொள்ளப்படும். இப்பரிசீலனையின் முடிவுகளை ஆராய்ந்தறிந்த பின்னரே, திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

A.—(*a*) & (*b*) : There is a proposal for putting up the "Manmarai anicut" across Noyyal river near Tiruppur town and excavate a channel to feed the existing four tanks (viz.) Srikarperiapalayam

tank, Pudupellapalayam tank, Dalavaipalayam tank and palatholon tank and also to form a new tank en route.

(c) This scheme will be taken up for detailed investigation shortly, and only after the results of investigation are studied further action can be taken regarding its execution.

சாத்தனூர் அணை.

47 வினா—திரு கே. சகாதேவ கண்டர் : மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையின் மொத்த ஆயக்கட்டு நிலங்களின் விஸ்தீரணம் எத்தனை ஏக்கர் ?

(இ) தற்போது நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(உ) ஆயக்கட்டில் சம்பந்தப்பட்ட நிலங்களில் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறாமல் உள்ளது ?

(எ) பாசன வசதி பெறாத நிலங்களுக்கு பாசன வசதி பெற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

விடை—(அ) சாத்தனூர் அணையின் மொத்த ஆயக்கட்டு நிலங்களின் விஸ்தீரணம் 21,000 ஏக்கர்.

(இ) தற்போது நீர்ப்பாசன வசதிகள் பெறும் நிலங்கள் 21,000 ஏக்கர்.

(உ) ஆயக்கட்டில் சம்பந்தப்பட்ட நிலங்களில் பாசன வசதி பெறாத நிலங்கள் ஏதும் இல்லை.

(எ) கேள்வி எழவில்லை.

A.—

(*a*) The ayacut under Sathanur Project Main Canal is 21,000 acres.

(*b*) The entire ayacut area of 21,000 acres has been thrown open for irrigation.

(*c*) Nil.

(*d*) Does not arise.

விவசாயிகளுக்கு நிலம்

48 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலங்களைப் பண்படுத்தி, நிலமில்லாத விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு அளிப்பதற்கான திட்டம் ஏதேனும் உண்டா, ஜில்லா வாரியாக விபரம் ?

(இ) ஆமெனில் இதற்காக விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்களா ? அதன் விபரமென்ன?

(உ) சாகுபடி செய்ய பணம் கொடுத்து உதவி செய்யும் உத்தேசமுண்டா ?

விடை—(அ) நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களில் 10,000 குடும்பங்களை 50,000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒன்றரை கோடி ரூபாய் செலவில் குடியமர்த்துவதற்கான திட்டம் ஒன்றிற்கு ஒப்புளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1967 ஜூலை 18]

இதற்கென நில அளவை செய்யப்பட்டது. இந்த நில அளவையின்படி இத்திட்டத்திற்குக் கீழே கொடுத்துள்ளவாறு 66,015·93 ஏக்கர் நிலம் கிடைக்கும் :—

மாவட்டத்தின் பெயர்.	கிடைக்கிற நிலப்பரப்பு (ஏக்கர்).
(1)	(2)
செங்கற்பட்டு	1,814·65
தென் ஆர்க்காடு	8,073·55
வட ஆர்க்காடு	2,714·88
தஞ்சாவூர்	3,947·38
திருச்சிராப்பள்ளி	3.592·05
மதுரை	6,374·20
இராமநாதபுரம்	36,336·50
திருநெல்வேலி	253·01
சேலம்	1,294·04
கோயம்புத்தூர்	1,615·47
மொத்தம் ..	66,015·93

(இ) மாநில அளவில், சென்னை வருவாய்த்துறைக் கழகத்தின் கூட்டுச் செயலாளர் (கடன்கள்) இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்புடையவராவார். இத்திட்ட வேலை சம்பந்தமாக இவருக்கு உதவியாக இருக்க 1966 அக்டோபரில் நியமிக்கப்பட்ட தனித் துணை கலெக்டர் பதவி தற்போது ரத்து செய்யப்பட்டுவிட்டது.

வெளியூர்களைப் பொறுத்தவரையில், இராமநாதபுரம் மாவட்டத்திற்காக 2 தாசில்தார்களும் 2 துணை தாசில்தார்களும் அடங்கிய சிறப்புப் பணியாளர் பிரிவை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டம் செயலிலுள்ள பிற மாவட்டங்களில் முறையான வருவாய்த்துறைப் பணியாளர்கள் இப்பணியைக் கவனித்து வருகின்றனர்.

(உ) இத்திட்டத்தின்கீழ், கீழே குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு வகைகளில் நிதி உதவி அளிக்கப்படுகிறது:—

(1) (Colonisation pattern) புதுக்குடியேற்றமுறை.—இம்முறையின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5,000 ரூபாய் மேல் வரம்பிற்கு உட்பட்டு உதவி அளிக்கப்படும். இதில் முக்கால் பங்கு மானியமாகவும் கால் பங்கு கடனாகவும் வழங்கப்படும்.

(2) (Individual pattern) தனிப்பட்டோர் முறை.—இம்முறையின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,250 நிதி உதவி வழங்கப்படும். இதில் முக்கால் பங்கு மானியமாகவும் கால் பங்கு கடனாகவும் வழங்கப்படும்.

(A.—(a) A scheme for the settlement of 10,000 families of landless agricultural labourers on an extent of 50,000 acres at a cost of Rs. 1.50 crores has been sanctioned.

A survey has been conducted for this purpose. According to the survey, the lands available for the scheme is 66,015.93 acres as detailed below :—

Name of the district.	*Extent available.* (ACRES.)
(2)	(1)
Chingleput	1,814·85
South Arcot	8,073·55
North Arcot	2,714·88
Thanjavur	3,947·38

Name of the district.	Extent available (ACRES.)
(1)	(2)
Tiruchirappalli	3,592·05
Madurai	6,374·20
Ramanathapuram	36,336·50
Tirunelveli	253·01
Salem	1,264·04
Coimbatore	1,615·47
Total ..	66,015·93

(b) At State level, the Additional Secretary (Loans), Board of Revenue, Madras is in charge of the implementation of the scheme. A Special Deputy Collector to assist him in connection with the scheme work was appointed in October 1966. This post has since been abolished.

In the mufassil, Special staff consisting of two Tahsildars and two Deputy Tahsildars has been sanctioned for the Ramanathapuram District. In the other districts where the scheme is in force, the regular revenue staff is looking after the work.

(c) Under the scheme, there are two patterns of financial assistance as shown below :—

(1) Colonisation pattern by which each family is entitled to an assistance subject to a ceiling of Rs. 5,000 out of which 75 per cent is grant and 25 per cent is loan.

(2) Individual pattern by which each family is entitled to an assistance of Rs. 2,250 out of which 75 per cent will be grant and 25 per cent will be loan.

Family Cards in City.

49 Q.—THIRU K. VINAYAKAM : THIRU S. RAMACHANDRAN : } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) the number of family rice ration cards issued in the City of Madras ;

(b) the number among them that were found to have been obtained spuriously ; and

(c) whether there were any instances of inclusion of fictitious persons in the rice ration cards ?

A.—(a) 5,22,117.

(b) 6,404 (as on 9th June 1967).

(c) Yes.

விடை.—(அ) 5,22,117.

(இ) 6,404 (1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ந் தேதி வரை).

(உ) ஆம்.

1967 ஜூலை 18]

வேளாண்மை ஆலோசனைக் குழு

50 வினு—திரு வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய அபிவிருத்திக்காக ஆலோசனை கமிட்டி ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதில் யார் யார் அங்கம் வகித்து வருகிறார்கள் ?

(உ) அதன் குறிக்கோளைப்பற்றிய விபரம் சபை முன் மேஜைமேல் வைக்கப்படுமா ?

விடை.—(அ). ஆம் மாநில வேளாண்மை ஆலோசனைக் கழகம் 1960-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

(இ) வேளாண்மை அமைச்சர் இக்கழகத்தின் தலைவராவார். வேளாண்மைத்துறை நெறியாளர் இதன் செயலாளராவார். கீழ்க்கண்ட அதிகாரிகள் இதன் உறுப்பினர்களாவர்:—

(1) அரசினர் வேளாண்மைத்துறைச் செயலாளர்.

(2) வருவாய்துறைக் கழகத்தின் உணவு உற்பத்தி ஆணையாளர்.

(3) கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்.

(4) தலைமைப் பொறியாளர் (பாசனம்).

(5) கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவன முதல்வர்.

(6) கிராம வளர்ச்சித்துறை நெறியாளர், சென்னை.

இவர்களைத் தவிர, அரசாங்கச் சார்பற்ற 7 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்கள் மாநிலப் புகழ்பெற்ற தாமே பயிர்த்தொழில் செய்யும் உழவர்கள் ஆவர். இவர்களில் இரண்டொருவர் குத்தகைக் காரரின் பிரதிநிதிகளாகவும், வேளாண்மைத் தொழிலாளர்களின் பிரதி நிதிகளாகவும் இருப்பர். அரசாங்கச் சார்பற்ற உறுப்பினர்கள் மூன்றாண் டுக்காலம் பதவி வகிப்பர். தற்போது இக்கழகத்தில் கீழ்க்கண்டவர்கள் அரசாங்கச் சார்பற்ற உறுப்பினர்களாக உள்ளனர்:—

(1) திரு. எ. கே. டி. பலராம ராஜா, ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம்.

(2) திரு. வி. கே. பழநிசாமி கவுண்டர், வேட்டைக்காரன் புதூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

(3) திரு. ஆர். ஸ்ரீநிவாச ஐயர், ஆத்தூர், செங்கற்பட்டு மாவட்டம்.

(4) திரு. ஜி. வாகீசம்பிள்ளை, சிதம்பரம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

(5) திரு. ஜி. நாராயணசாமி நாயுடு, மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.

(6) திரு. ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார், திருச்சிராப்பள்ளி, திருச்சி மாவட்டம்.

(7) திரு. எ. ஆர். சுப்பையா முதலியார், இடைக்கால், திருநெல் வேலி மாவட்டம்.

தற்போதைய கழக உறுப்பினர்களின் பதவிக்காலம் 4—4—1967 தேதி அன்று முடிவடைந்தது. அடுத்த மூன்றாண்டுக் காலத்திற்கு அரசாங்கச் சார்பற்ற உறுப்பினர்களை நியமிப்பது குறித்து ஆலோசனை நடந்துவருகிறது.

(உ) இம்மாநிலத்தில் உள்ள வேளாண்மை நிலைமையை ஆராய்வதற் கும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களின் முன்னேற் றத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும், அவசியமானபோது இத்திட்டங்களைத் தக்க வகையில் திருத்தி அமைப்பதற்கும், மாநில வேளாண்மைத் துறையின் ஆராய்ச்சி விரிவுப் பிரிவுகளின் வேலைகள் மாறிவரும் தேவை

களுக்கு ஏற்ப இருப்பதற்காக அவைகளைக் குறித்த காலத்திற்கொரு முறை சீர்தூக்கிப் பார்த்துத் தக்க வகையில் மாற்றி அமைப்பதும் வேளாண்மை, உணவு உற்பத்தி, பாசனம், சமுதாய வளர்ச்சி ஆகிய துறைகள் இணக்கமாகச் செயல்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இவ் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகம் ஆண்டிற்கு இருமுறை கூடும். இக்கழகத்தின் கூட்டங்கள் இம்மாநிலத்தின் பல்வேறு வேளாண்மைப் பகுதிகளில் சுற்றுமுறையில் நடக்கும்.

A.—(a) Yes Sir. The State Agricultural Advisory Board was constituted in 1960.

(b) The Minister for Agriculture is the Chairman of the Board and the Director of Agriculture is the Secretary, with the following officials as members :—

(1) Secretary to Government, Agriculture Department.

(2) The Commissioner for Food Production, Board of Revenue.

(3) Registrar of Co-operative Societies.

(4) The Chief Engineer (Irrigation).

(5) Dean, Agricultural College and Research Institute, Coimbatore

(6) Director, Rural Development, Madras.

In addition to the above there are seven non-official members who are to be chosen from prastical agriculturists of Statewide reputation of whom one or two will be chosen to represent tenants and agricultural labourers. The non-official members hold office for a period of three years. The names of the present non-official members are given below :—

(1) Thiro A. K. D. Balarama Raja of Rajapalayam, Ramanathapuram District.

(2) Thiru V. K. Palaniswamy Gounder of Vettaikaranpudur, Coimbatore district.

(3) Thiru R. Srinivasa Iyer of Attur, Chingleput district.

(4) Thiru G. Vagheesam Pillai of Chidambaram, South Arcot district.

(5) Thiru G. Narayanaswamy Naidu of Mayuram, Thanjavur district.

(6) Thiru R. Krishnaswamy Reddiar of Tiruchirappalli, Tiruchirappalli district.

(7) Thiru A. R. Subbiah Mudaliar of Idaikal, Tirunelveli district.

The term of the present Committee expired on 4th April 1967.

The question of appointing non-official members for the next term is under consideration.

(c) The Board has been constituted to study the agricultural situation in the State, to review the progress in the schemes for stepping up agricultural production, to revise them suitably

1967 ஜூலை 18]

wherever necessary, to reorient periodically the working of the research and extension wings of the State Agricultural Department to be in tune with the changing requirements and to ensure proper co-ordination between the Agriculture, Food Production, Irrigation and Community Development departments. The Board will meet twice a year and its meetings shall be held in rotation in the various Agricultural regions in the State.

செட்டி நாட்டுக் கால்நடைப் பண்ணை

51 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செட்டிநாட்டில் உள்ள கால்நடை பண்ணையில் எத்தனை மாடுகள், ஆடுகள், இருக்கின்றன ?

(இ) 1966-ல் அவற்றின் பராமரிப்புக்காகச் செலவு செய்த ரூபாய் தனித்தனியே எவ்வளவு ?

விடை—(அ) ராமநாதபுரம் மாவட்டம் செட்டிநாட்டிலுள்ள கால் நடைப் பண்ணையில் மாடுகள், ஆடுகளின் எண்ணிக்கை 1—1—1966 தேதியன்று பின்வருமாறு இருந்தது:—

(அ) மாடுகள்	1,069
(இ) ஆடுகள்	746

(இ) அவைகளைப் பேணுவதற்காக 1966-ம் ஆண்டில் ஆன செலவு பின்வருமாறு:—

	ரூ.
(அ) மாடுகள்	5,39,813·27
(இ) ஆடுகள்	29,487·75

A.—(a) The stock position of cattle and sheep on 1s Januaary 1966 at the Ramanathapuram district Livestock Farm, Chettinad was as follows :—

(a) Cattle	1,069
(b) Sheep	746

(b) Expenditure incurred during 1966 towards their maintenance is as follows :—

	RS. P.
(a) Cattle	5,39,813.27
(b) Sheet	29,487.75

தீவன ஆதாரங்கள் மேம்பாட்டுத் திட்டம்

52 வினா—திரு வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) ராஜ்ய ஆடுமாடுகளுக்கான தீனி அபிவிருத்தி அதிகாரி எந்த ஆண்டு முதல் நியமிக்கப்பட்டார்?

(இ) நியமிக்கப்பட்ட ஆண்டு முதல் இதுவரையில் எந்த அளவுக்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது?

விடை—(அ)தீவன மேம்பாட்டு அதிகாரி ௳—12—1958 முதல் நியமிக்கப் பட்டார்.

(இ) இம்மாநிலத்தில் நெடுங்காலமாக நிலவிவரும் தீவன தீனிப் பற்றுக்குறைக்குத் தீர்வு காணும் பொருட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மையக் கிராமப்பகுதிகளில் தீவன ஆதாரங்கள் மேம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பாட்டுத்திட்டம் ஒன்றை இந்திய அரசு 1958–59 முதல் சேர்த்துள்ளனர். இத்திட்டம் இப்போதும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் பல்வேறு வேலை இனங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை குறித்த விவரம் வருமாறு:—

(1) பண்படுத்தப்பட்ட 100 ஏக்கர் மேய்ச்சல் நிலங்களை நிறுவுதல்.

இவை காட்சிப்பண்ணை நிலங்களாகும். தீவன விதைகள், கிழங்குகள், தண்டுகள் முதலியவற்றை உற்பத்தி செய்து மையக் கிராம வட்டார உழவர்கள் தரம் உயர்ந்த மேய்ச்சல் நிலங்களை உண்டாக்கும் பொருட்டு அவர்களுக்கு அவ்விதைகள் முதலியவற்றை வழங்கும் நோக்கத்துடன், மாநில கால்நடைப் பண்ணைகளில் இதுவரை இத்தகைய பண்ணைகள் நிறுவப் பட்டுள்ளன, மையக்கிராம வட்டார உழவர்களின் கால்நடைசட்குப் போதிய அளவு சத்துள்ள தீவனம் உற்பத்திசெய்வதற்காக இப்பண்ணைகள் நிறுவப் பட்டுள்ளன.

(2) விதைகளையும் விதைபொருள்களையும் வழங்குதல்.

உழவர்களது நிலங்களில் தீவனப் பயிர்செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு 79,870 கிலோகிராம் விதைகளும், 1,01,82,460 புல்கட்டுகளும் இதுவரையில் மையக்கிராமப் பகுதி உழவர்களுக்குப் பாதிவிலையில் வழங்கப்பட்டுள்ளன. 100 ஏக்கராவில் மேம்பட்ட மேய்ச்சல் நிலங்கள் நிறுவப்பட்டுள்ள மாநிலக் கால்நடைப் பண்ணைகளிலிருந்து அவை வழங்கப்பட்டன.

(3) பத்து ஏக்கர் மேய்ச்சல் நிலங்களை நிறுவுதல்.

மைய கிராமத்திட்டம் நேரடியாகப் பயன்பெறும் பொருட்டு, ஒவ்வொரு மையக் கிராம வட்டாரத்திலும் உழவர்கள் தங்களது நிலங்களில் பத்து ஏக்கர் மேய்ச்சல் நிலங்களை நிறுவியுள்ளனர். இப்பகுதிகளில் கரைகட்டுதல், தகுந்த புல்வகைகளின் விதைகளைப் பயன்படுத்துதல், மாற்று முறையில் மேய்ச்சல் வசதிகளை ஏற்படுத்தல், நிலங்களைச் சுற்றிலும் வேலி போடுதல் முதலிய வேலைகளில் செய்முறை விளக்கம் கொடுக்கப்படுகின்றது. இதுவரையில் பற்பல மையக் கிராம வட்டாரங்களில் 31 பத்து ஏக்கரா மேய்ச்சல் நிலங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(4) புல்வெட்டுக்கருவிகள் வழங்குதல்.

தீவனப்பயிர்கள் விரயமாவதைத் தவிர்க்கவும் கால்நடைகள் அவற்றை உட்கொள்வது வசதியாய் இருக்கும் பொருட்டும் புல்வெட்டுக்கருவிகள் உழவர்களுக்குக் குறைந்தவிலையில் வழங்கப்படுகின்றன ஒவ்வொரு வெட்டுக்கருவியின் விலையில் 50 சத வீதம் அல்லது ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 80 இவற்றில் எது குறைவாய் உள்ளதோ அது உதவித்தொகையாக வழங்கப்படும். இதுவரை 276 புல்வெட்டுக் கருவிகள் மைய கிராம வட்டார உழவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்பட்டுள்ளன.

(5) தீவனக் குழிகளை வெட்டுதல்.

மழைக்காலத்தில் மிகுதியாக விளையும் புல்லையும் தீவனங்களையும் கட்டிக் காக்கும் நோக்கத்துடன், தீவனத்தைப் பாதுகாக்க தீவனக் குழிகளை வெட்டுவதில் உழவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. அதற்கென ரூ 400 அல்லது இதற்கென உழவர்களுக்கான செலவினம் இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அந்த அளவிற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. சென்னைத் தீவன மேம்பாட்டு அதிகாரி மேற்பார்வையிட்டபிறகு அந்த உதவித் தொகை வழங்கப்படும். இதுவரை உழவர்கள் கட்டிய 37 தீவனக் குழிகளுக்கு உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

(6) குறுகிய காலத் தீவனப் பயிர்களை விளைவித்தல்.

சணப்பு, வயல்பயறு (பில்லிபசேரா) போன்ற குறுகிய காலத் தீவனப் பயிர்கள் நல்ல சத்துள்ள தீவனப் பயிர்களாகும். தற்போதைய தரிசு நிலங்களில் முக்கியப் பயிர்களைப் பாதிக்காமல் துணைப்பயிர்களாக இவற்றைப் பயிரிடலாம். நெற்பயிரின் வைக்கோலுடன் அவற்றை நல்லத் தீவனமாக மாற்றலாம். இரு முக்கிய பயிர்களுக்கிடையில் இப் பயிர்களை விளைவிப்பதில் உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காகப் பயிர்களின் அறுவடையின் மீது ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 உதவித்தொகை வழங்கப் படுகிறது. மையக் கிராம வட்டாரங்களில் 3,855 ஏக்கரில் இப்பயிர்களை விளைவிக்க உழவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

(7) நல்ல மேய்ச்சல் நிலங்களைப் பயிரிடுதல்.

கரை கட்டுதல், வேலி போடுதல், விதைத்தல் முதலிய வேலைகளை மேற் கொள்வதன் மூலம் மேய்ச்சல் பகுதிகள் மேம்படுத்தப்பட்டு நல்ல மேய்ச்சல் நிலங்களாக மாற்றபடுகின்ற ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாத மொத்த செலவில் 66–2/3 சதவீதம் உதவித் தொகை அத்தகைய மேய்ச்சல் நிலங்களை நிறுவ வழங்கப்படுகின்றது. மையக் கிராம வட்டாரங்களில் 572 ஏக்கரில் அத்தகைய மேய்ச்சல் நிலங்களை நிறுவ இதுவரை உதவித் தொகை வழங்கப்பட்டது.

(8) ஆண்டு முழுவதும் விளையும் தீவனப் புல்பயறுவகைப் பயிர்கள் ஆகியவற்றை விளைவித்தல்.

கினியாப்புல், நேப்பியர்புல், பாரா, ப்ளூபஃபல் (Blue Buffal) போன்ற தீவனப்புல் வகைகளைப் பாசன வசதியுள்ள இடங்களில் பயிரிடலாம் அவை சத்து நிறைந்தவை. இத் தீவனப் பயிர்களையும் குதிரை கால் போன்ற பயறுவகைப் பயிர்களையும் பயிரிடவும், எருவிடுதல், பாசனம், களை நீக்குதல் போன்ற மேம்பாடுப் பயிர்முறைகளை மேற்கொள்ளவும் ஊக்கமளிப்பதற்காக, உறுதியான அடிப்படையில் அமைக்கப்பட்ட புல் அல்லது பயறு வகைப் பயிர் நிலங்கள் குறித்து செண்ட் ஒன்றுக்கு ரூ. 2 உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதேபோல் முதன் முறையாகத் தீவனப் பயிர்களை அறுவடைசெய்து எடுத்துக்கொள்ளும்போதும் அந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. மையக் கிராம வட்டாரங்களில் 315 ஏக்கர் பரப்பளவில் புல்வகைகளையும் பயறுவகைகளையும் பயிரிடுவதற்காக இதுவரை உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

A.—(*a*) The fodder Development Officer was appointed from 3rd December 1958.

(*b*) To solve the long negleected problem of the shortage of feeds and fodder in this State, the Government of India included a scheme for the development of feeds and fodder resources in Key Village areas in this State under the Second Five-Year Plan from the year 1958–59 which is being continued even now. Under the scheme various items of work, as detailed below, have so far been taken up :—

(i) *Establishment of* 100 *acres improved pasture plots.*—These are demonstration plots and 11 such plots have so far been established in the State Livestock Farms for production of fodder seeds, roots, cuttings, etc., and for distribution to the farmers in Key Village Blocks for cultivation of improved pastures which provide adequate Nutrition to the livestock.

(ii) *Supply of seeds and seed materials, etc.*—In order to encourage the ryots to take up cultivation of fodder in their lands, 79,870 kgs. of seeds and 1,01,82,460 grass slips have so far been distributed to the farmers in the Key Village areas at 50 per cent cost, from the State Livestock Farms, where 100 acres improved pasture plots are established.

(iii) *Establishment of* 10 *acre pasture plots.*—In order that the Key Village Scheme may derive direct benefit, ten acre pasture plots are established in each Key Village Block in the private lands by the ryots. Demonstration in bunding, reseeding with improved varieties of suitable pasture grasses and forming paddocks to facilitate rotational grazing, fencing the boundary, etc., are undertaken in these areas. Thirty-one such ten acre pasture plots have been established in different Key Village Blocks so far.

(iv) *Supply of chaff cutters.*—In order to avoid wastage of fodder and also to enable the animals to consume the fodder, chaff cutters are supplied to the ryots at the subsidised rate, the subsidy being 50 per cent of the actual cost or Rs. 80 per chaff cutter, whichever is less. Two hundred and seventy six chaff cutters have so far been supplied to the ryots at subsidised rate in the Key Village Blocks.

(v) *Construction of silo pits.*—With a view to conserve the surplus grass and fodder available during rainy season the ryots are encouraged to construct silo pits to preserve the fodder, for which a subsidy of Rs. 400 or the actual expenditure incurred by the ryots, whichever is less, is paid after inspection by the Fodder Development Officer, Madras. Thirty-seven silo pits constructed by the ryots have so far been subsidised.

(vi) *Raising of short-term fodder crops.*—Short-term fodder crops like sun hemp, phillipesara, etc., are good fodder crops of high nutritive value and they can be cultivated as catch crops in the current fallows without affecting the main crops and they can be converted into good hay and fed along with paddy straw. To encourage the ryots to raise these crops, in between two main crops, a subsidy of Rs. 10 per acre is paid on harvesting of the crop. Subsidy has been paid to the ryots for raising of these crops in 3,855 acres in the Key Village Blocks.

(vii) *Raising of good pastures.*—The grazing areas are being improved and converted into good pastures, by taking up bunding, fencing, harrowing, seeding, etc. A subsidy of 66-2/3 per cent of the total cost not exceeding Rs. 50 per acre is paid for establishing such pastures. Subsidy has so far been paid for establishment of such pastures in 572 acres in the Key Village Blocks.

(viii) *Raising of perennial fodder grasses and legumes.*—Perennial fodder grasses like guienea, Napier, Para, blue buffal raised under irrigated conditions are of nutritive value. As an incentive for the cultivation of these fodder grasses and legumes like lucerne and for adopting better practices, like manuring,

irrigation, weeding, etc., a subsidy of Rs. 2 per cent is paid on well established grass or legume plots and on taking the first cutting. Subsidy has so far been paid for cultivation of grasses and legumes in an area of 315 acres in the Key Village Blocks.

பருத்தி சாகுபடி

53 ஞவி—திரு. வி. கே. கோதண்டராமன், திரு. எஸ். மெய்யப்பன் : } மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்டகேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் பருத்தி சாகுபடியில் உள்ள நிலம் எத்தனை ஏக்கர், மாவட்ட வாரியாக ?

(இ) பருத்தி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக என்னென்ன புதிய முறைகளைக் கையாளுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—(அ) 1965–66-ம் ஆண்டில் தமிழகப் புள்ளிவிவர நெறியாளர் அளித்த பயிர்களைப்பற்றிய அறிக்கையில் உள்ளபடி, தமிழகத்தில் பருத்தி விளையும் நிலப் பரப்பினைக் காட்டும் விவரங்கள் பின்வருமாறு—

	மாவட்டம்.	1965–66 ஹெக்டேர்.	1965–66 ஏக்கர்.
	(1)	(2)	(3)
1	செங்கற்பட்டு	260	642
2	தென் ஆர்க்காடு	2,910	7,190
3	வட ஆர்க்காடு	320	790
4	சேலம்	24,280	59,996
5	தர்மபுரி	4,050	10,007
6	கோயம்புத்தூர்	125,460	310,013
7	திருச்சிராப்பள்ளி	14,170	35,013
8	தஞ்சாவூர்	240	592
9	மதுரை	56,660	140,007
10	ராமநாதபுரம்	89,030	219,993
11	திருநெல்வேலி	104,820	259,011
12	நீலகிரி	..	..
13	கன்னியாகுமரி	120	296
	மொத்தம்	422,320	1,043,550

(இ) பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட புதிய முறைகளாவன—

(1) உயர்ந்த ரகப் பருத்தி விதைகளை உபயோகித்தல்.

(2) ரசாயன உரமிடுதல்.

(3) பயிர்ப் பாதுகாப்பு முறைகளை உரிய காலத்தில் மேற்கொள்ளுதல்.

(4) சிறந்த வகையில் பயிரிட்டு வளர்க்கும் முறைகளை மேற்கொள்ளுதல்.

A.– (*a*) The particulars showing the area under cotton (both irrigated and dry) in Madras State as per the report on crop for 1965–66 issued by the Director of Statistics, Madras, are as follows :—

District.		1965–66	
		Hectares.	Acres.
(1)		(2)	(3)
1 Chingleput	..	260	642
2 South Arcot	..	2,910	7,190
3 North Arcot	..	320	790
4 Salem	..	24,280	59,996
5 Dharmapuri	..	4,050	10,007
6 Coimbatore	..	125,460	310,013
7 Tiruchirappalli	..	14,170	35,013
8 Thanjavur	..	240	592
9 Madurai	..	56,660	140,007
10 Ramanathapuram	..	89,030	219,993
11 Tirunelveli	..	104,820	259,011
12 The Nilgiris	..	..	--
13 Kanyakumari	..	120	296
Total	..	422,320	1,043,550

(*b*) The following are the new methods adopted for increasing the production of cotton :—

(i) Use of improved strains of cotton seeds ;

(ii) Application of fertilisers ;

(iii) Adoption of timely plant protection measures ; and

(iv) Adoption of cultural practices.

அரசினர் நந்தனர் மாணவர் விடுதி

54 வினா—திரு. கே. பி. எஸ். மணி, திரு. ந. இராஜாங்கம் : } மதிப்பிற்குரிய அரிஜன நல—செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் உள்ள அரசினர் நந்தனர் மாணவர் விடுதியில் நடப்பு ஆண்டில் ஆறு மாதம் கோதுமையும், கேழ்வரகு கூழும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன ?

விடை—(அ), (இ) 1966-ம் ஆண்டு ஜூன் முதல் 1967-ம் ஆண்டு ஏப்ரல் முடிய உள்ள கால அளவில் நாளொன்றுக்கு மூன்று முறையாக 13 நாட்களுக்கும் நாளொன்றுக்கு இரண்டு முறையாக 10 நாட்

1967 ஜூலை 18]

களுக்கும் கஞ்சி வழங்கப்பட்டதாக அரசிற்கு வந்த விரிவான அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. இந்த ஆண்டில் கஞ்சியும், உணவும் பின்வருமாறு அளிக்கப்பட்டன :—

காலை—

அரிசிக் கஞ்சி	175	நாட்கள்
கோதுமைக் கஞ்சி	40	நாட்கள்
கேழ்வரகுக் கஞ்சி	71	நாட்கள்

பகல்—

அரிசி உணவு	272	நாட்கள்
கோதுமைக் கஞ்சி	11	நாட்கள்
கேழ்வரகுக் கஞ்சி	3	நாட்கள்

இரவு—

அரிசி உணவு	261	நாட்கள்
கோதுமைக் கஞ்சி	17	நாட்கள்
கேழ்வரகுக் கஞ்சி	8	நாட்கள்

A.—(a) & (b) From the detailed reports received by the Government, it is seen that kanji was served for only 13 days at three times a day and for 10 days at two times a day during the period June 1966 to April 1967. During the year kanji and meals were served as follows :—

Mornings—

	Days.
Rice kanji	175
Ragi kanji	71
Wheat kanji	40

Noon—

Rice meals	272
Wheat kanji	11
Ragi kanji	3

Night—

Rice meals	261
Wheat kanji	17
Ragi kanji	8

தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டுமனை

55 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய அரிஜன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கண்டியூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள அரசாங்கம் வழங்கிய வீட்டுமனை விஷயமாகக் கலவரம் ஏற்படயிருப்பதாக அக்கிராம மக்களிடமிருந்து மார்ச் மாதத்தில் மனு ஏதாவது வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை.—(அ) ஆம்.

(இ) கண்டியூரில் அமைதி குலையாமல் பார்த்துக்கொள்ளுமாறு கரூர் துணைக் கலெக்டருக்கு திருச்சிராப்பள்ளி கலெக்டர் அறிவுறுத்தியுள்ளார். மேற்படி நிலத்தின் சொந்தக்காரர் சென்னை, உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, தடையாணை பெற்றுள்ளார். இது, இப்போது நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

A.—(*a*) Yes.

(*b*) The Sub-Collector, Karur has been instructed by the Collector of Tiruchirappalli to see that there is no breach of peace. The land owner has since filed a writ petition in the High Court, Madras and obtained an injunction. The matter is now sub-judice.

சிறப்பு அங்காடிகள்

56 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி, திரு. க. இராமமூர்த்தி : } மதிப்பிற்குரிய சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இன்று வரை நமது மாநிலத்தில் துவக்கப்பட்ட சூபர்-மார்க்கெட்டுகள் (Super Markets) எத்தனை ? மாவட்ட வாரியாக ?

(இ) அவைகள் ஒவ்வொன்றிலும் மாதவாரியாக விற்பனை செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) அவைகளுள், இன்று வரையில் லாபத்தில், நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் மார்க்கெட்டுகள் முறையே எவை எவை ?

விடை.—(அ) முதல் (உ) வரை விவர அறிக்கை[a] ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

(*a*) *to* (*c*) A statement [a] is appended.

நகர்ப்புற விஸ்தரிப்புத் திட்டம்

57 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதிப்பிற்குரிய மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் நகர்ப்புற விஸ்தரிப்பை ஒழுங்குபடுத்த சர்க்கார் அனுமதி வழங்கிய நகரமைப்புத் திட்டங்கள் எத்தனை?

(இ) அனுமதி வழங்கப்பட்டு பத்தாண்டுகளுக்கு மேலாக நிறைவேற்றப்படாத திட்டங்கள் எத்தனை?

(உ) பிரகடனப்படுத்தப்பட்டு, நகரமைப்புத் திட்டங்களுக்கு நிலப் பிரிவினை, வரை படம் தயார் செய்து தந்து அனுமதி வழங்கத் தேவையான கால அளவு எவ்வளவு?

(எ) பத்துப் பதினைந்து வருட காலமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள் ஆரம்ப நிலையிலேயே இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஐ) மதுரை நகர், கிழக்கு விசாலம் பாகம் பிரகடனப்படுத்தப்பட்டு பல வருடங்கள் ஆகியும் போக்குவரத்துள்ள சாலையை மறைத்து பொது மக்களுக்கு ஊறு செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படாததற்கான காரணங்கள் யாவை?

[a] 678–681-ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விடை.—(அ) 88,

(இ) அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. 30 நகரமைப்புத் திட்டங்கள் ஆரம்ப நிலையில் உள்ளன.

(உ) ஒவ்வொரு திட்டத்திற்கும் நகர மன்றம் தயாரித்து அரசினருக்கு அனுப்பிவைக்க 3 முதல் 5 ஆண்டுக் காலம்வரை அனுமதி வழங்கப்படுகின்றது. கொடுக்கப்பட்ட காலத்திற்குள் நகர மன்றத்தாரால் தயாரித்து முடிக்க இயலாவிட்டால் போதிய கால தவணை மேலும் அனுமதிக்கப்படுகின்றது.

(எ) தெரியும். சுமார் 47 திட்டங்கள் இம்மாதிரி நிலையில் உள்ளன.

(ஐ) திட்டத்தில் உள்ள 3 சாலைகளும் பொது உபயோகத்தில் உள்ளன. அவைகளில் எந்தவிதமான இடைஞ்சல்களும் இல்லை.

(1) Eighty-eight.

(2) All the sanctioned schemes have been taken up for implementation. However, 30 schemes are in the initial stage.

(3) Time is granted by Government from three to five years to the Municipal Council for preparation, publication and submission of each scheme. Further extension of time is also granted to the Municipal Council if it does not prepare the scheme within the time limit.

(4) Yes. There are about 47 schemes at this stage.

(5) All the three roads in the scheme are in public use and there are no obstruction in anyone of these roads.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன. அடுத்து உரிமைப் பிரச்சினைகள்.

2. உரிமைப் பிரச்சினைகள்—பேரவைத் தலைமையின் தீர்ப்புகள்.

(அ) நவசக்தி நாளிதழில் பேரவை நடவடிக்கை பற்றி வந்த செய்தி.

MR. SPEAKER : I have to dispose of three privilege issues.

The first one is Dr. Hande's privilege issue raised against the newspaper 'Navasakthi'. I wrote to the publisher of that newspaper and received a reply which says :

'Since your letter raises important issues concerning privileges, we would request you in all humility to grant us one week's time to make our representations. We have necessarily to take the advice of constitutional authorities and counsel before making our respectful submissions. We desire to emphasise our deep regard and attachment to the Legislative Assembly, of whose privileges and dignity you are the custodian.'

The Hon. House might observe that this letter is written in the proper spirit and tone and with due regard to this House. This House, endowed as it is with supreme powers in its sphere and within the State, does not expect fear or awe from others but only due respect. Therefore I have sanctioned the request made by the publisher and I await a further letter from the publisher. Therefore I have to announce to the House that this issue is adjourned to be taken up at a future date.

(இ) மேலவைத் தலைவர், மேலவை எதிர்க்கட்சித் தலைவர் இவர்கள்மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினை.

MR. SPEAKER : The other issue, also raised by Dr. Hande, is against the Chairman of the Legislative Council and also the hon. Member Mr. R. Venkataraman, Member of the Legislative Council I have carefully examined the position regarding the relations between the two Houses. When it is alleged that a Member of the other House has committed contempt against this House, this House cannot take any disciplinary action or privilege action against the Member of the other House. But the Speaker is bound to write to the Chairman of the Legislative Council making a request that the Upper House may take action against the concerned Member. But this could not be done in respect of the Chairman himself against whom a privilege issue has been raised. There are two reasons for this. One is I cannot write to the Chairman asking the Chairman to take action against himself. Secondly, that House has no powers, so far as I could see, to take action against its own Chairman in the matter of privileges. For these two reasons I hold that no *prima facie* case has been made against the Chairman of the Legislative Council and I rule accordingly.

மு.ப. 10-30 As regards the hon. Member, Thiru Venkataraman, it is possible to write to the other House and send a communication asking the other House to take action agsint that hon. Member. I said, it is possible, but, the procedure as laid down in the House of Commons is that when such a communication is sent, it should be accompanied by evidence that a breach of privilege has been committed. There fore when I send that letter, I have got to send it along with the evidence. I find that the hon. Member, Dr. Hande, although he raised that issue, has not placed in my hands any evidence or document which I can send to the other House. Therefore, I hold that no further proceedings can be taken in this matter and, with the permission of this House, I decide to drop this matter of privilege.

(உ) சென்னை நகர போலீஸ் கமிஷனர் தீ விபத்துக்கள்பற்றி செய்தி நிருபர்களுக்கு அளித்த அறிக்கை.

MR. SPEAKER : Regarding the third matter in respect of the privilege issue raised by the Hon. Member, Thiru Kothandaraman, against the Commissioner of Police, I am still awaiting certain facts and the matter is adjourned.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்

கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூரில் நிலவரி வசூலுக்குச் சென்ற அதிகாரிகளின் அத்துமீறிய நடவடிக்கை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 42-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன் :

"கோவை ஜில்லா, வேட்டைக்காரன்புதூர் வி. வி. தங்கவேல் கவுண்டரிடம் நில வருமானவரிப் பாக்கி வசூலிப்பதற்காகச் சென்றவிடத்தில் நில வருமான அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் அத்துமீறி நடந்து கொண்டதைப் பற்றி விவாதிக்கப் பேரவையை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்."

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் உட்காருங்கள். தீர்மான வாசகத்திற்குப் பிறகு உறுப்பினர் கூறிய வார்த்தைகள் பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பத்திரிகைகளிலும் வெளிவரா.

போலீசாருடைய அத்துமீறிய செயல்களைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் வேலைகளைத் தள்ளி வைக்கக் கூடாது என்று மீண்டும், மீண்டும் தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, போலீசாரின் செயல்கள் அத்து மீறியவைகளாக இருந்தாலும் பேரவையின் அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டியதில்லை என்று தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் ஒரு தீர்மானம் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் கொடுப்பதாக இருந்தால் முதலிலேயே என்னுடைய அலுவல் அறையில், கொடுத்து அனுமதிவாங்கியிருக்கவேண்டும்.

DR. H. V. HANDE: Sir, on a point of order.

MR. SPEAKER: No point of order can be raised when the Speaker is on his legs. நான் உட்கார்ந்த பிறகுதான் நடைமுறைக் கேள்வியை எழுப்பமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் 82-வது விதியின்படி அறிக்கை ஒன்றைப் பேரவையின் முன் வைப்பார்கள்.

DR. H. V. HANDE : Sir, to-day is the last day of the session. The Hon. Speaker did not allow the hon. member, Thiru Krishnaswami Gounder to speak on the adjournment motion. The adjournment motion relates to a very serious matter and I request the Hon. Minister for Home or Food to give us some explanation. That is why I wanted to raise a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் படித்தவர்கள். நன்றாகப் பேரவையின் விதிகளைத் தெரிந்தவர்கள்.

DR. H. V. HANDE : To-day is the last day of the session. I presume the Hon. Minister for Food is prepared to give a statement.

THE HON. THIRU C. N. ANNADURAI : Though the issue cannot become a necessary reason for the adjourment of the House, I assure the Hon. Member who has raised the issue to come and discuss it with me and the needful will be done.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

4. கல்வி-தொழில் அமைச்சரின் அறிக்கை.

(அ) புகுமுக வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கல்லூரிப் புகுமுக வகுப்புகளைக் கொண்ட 113 கலைக் கல்லூரிகள் உள்ளன. அவற்றில் 28 அரசினர் கல்லூரிகளாகும். இவற்றில் 21 கல்லூரிகள் ஆண்கள் கல்லூரிகள், 7 மகளிர் கல்லூரிகள். எஞ்சியுள்ள 85 கல்லூரிகள் தனியார் கல்லூரிகள் ஆகும். இவற்றில் 61 கல்லூரிகள் ஆண்கள் கல்லூரிகள். 24 கல்லூரிகள் மகளிர் கல்லூரிகள்.

இம் மாநிலத்தில் உள்ள 113 கல்லூரிகளில் அனைத்திலும் கல்லூரிப் புகுமுக வகுப்புகளில் நடப்பு ஆண்டில் ஆண்கள் கல்லூரிகளில் 43,200 இடங்களும், மகளிர் கல்லூரிகளில் 12,000 இடங்களும், ஆக மொத்தம் ஏறக்குறைய 55,200 இடங்கள் உள்ளன. 55,200 இடங்களில் நிரப்பப்படாமல் உள்ளவை என இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை 5,833. (ஆண்கள் கல்லூரிகளில் 4,641, மகளிர் கல்லூரிகளில் 1,192-ம் ஆகும்.) இவற்றில் 2,856 இடங்கள் அரசினர் கல்லூரிகளில் நிரப்பப்படாமல் உள்ளன. (ஆண்கள் கல்லூரிகளில் 2,788, மகளிர் கல்லூரிகளில் 98). எஞ்சியுள்ள 2,977 இடங்கள் தனியார் கல்லூரிகளில் நிரப்பப்படாமல் உள்ளன. (ஆண்கள் கல்லூரிகளில் 1,883, மகளிர் கல்லூரிகளில் 1,094).

அரசினர் கல்லூரிகளில் பெரும் பாலானவற்றில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பணி இன்னும் முடிவுறவில்லை. தேர்வுக் குழுக்கள் இன்னும் அப்பணியில் ஈடுபட்டுள்ளன. ஏறத்தாழ இன்னும் ஒரு வாரத்தில் தேர்வுப் பணி முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் கல்லூரிகளின் முதல்வர்களும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பணி இன்னும் முடியவில்லை என்றும், சேர்ப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அறிவித்துள்ளனர். காலியாயுள்ள எல்லா இடங்களையும் நிரப்புவதற்கென மாணவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளனர் என்றும் ஜுலை 20-ம் தேதி வரையில் அவர்கள் சேருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், கல்லூரிக் கல்வித் துறை நெறியாளருக்கு சென்னை மாநகரில் உள்ள கல்லூரிகளின் முதல்வர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த ஆண்டில் கல்லூரிப் புகுமுக வகுப்புகளில் சேருவதற்கு மாணவர்களின் நெரிசலைப் போக்க சென்னைப் பல்கலைக் கழகம் தமிழகக் கல்லூரிகளிலுள்ள இடவசதி நிலை முதலியவற்றிற்குட்பட்டு, அறிவியல் பாடத்திற்கு 85 இடங்கள் கொண்ட மேலும் ஒரு பிரிவையும், கலைப்பாடங்களில் 90 இடங்கள் கொண்ட மற்றுமொரு பிரிவையும் அனுமதிக்கச் சென்னைப் பல்கலைக் கழகம் ஒப்புக்கொண்டுள்ளது. இதன் காரணமாக, ஒரு கல்லூரியில் கல்லூரிப் புகுமுக வகுப்பில் உள்ள பிரிவுகளின் அறிவியல் பாடத்தில் ஏழு பிரிவுகளும், கலைப்பாடங்களில் மூன்று பிரிவுகளுமாக பேரளவு எண்ணிக்கை 10 ஆக உயரும். கூடுதல் பிரிவுகளுக்காக இடவசதிக்கு வகை செய்யக் கூடிய அரசினர் கல்லூரிகளும் மானியம் பெறும் கல்லூரிகளும் இந்த வசதியைப் பயன் படுத்திக் கொள்ளுகின்றன. இதுவரை எட்டு அரசினர் கல்லூரிகள் இவ் வசதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. இதனால் இவற்றில் 13 புதிய பிரிவுகள் சேர்க்கப் பட்டுள்ளன.

1967-ம் ஆண்டு ஜுலை மாதம் 15-ம் தேதி வரை உள்ள நிலைமை, 5,000 சில்லரை இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதாகும், அந்த இடங்களில் எவ்வளவு நிரப்பப் பட்டிருக்கின்றன, இன்னும் எவ்வளவு காலியாக இருக்கின்றன என்பதெல்லாம் உரிய காலத்தில் அறிவிக்கப் படும். ஒவ்வொரு கல்லூரியிலும் எவ்வளவு என்று இப்பொழுது சொல்லாமல், மொத்தத்தில் சொல்லியிருக்கிறேன். இன்னும் ஒரு வார காலத்தில் இருக்கும் நிலைமை பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும். அதே போல, பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புகளுக்கும் சில இடங்கள் நிரப்பப்

படும்போது, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேருகிறவர்கள் போக பாக்கி இடங்கள் காலியாக இருப்பவை பற்றி ஒரு லிஸ்ட் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களும் வெற்று இடங்களாக வரும்போது, அவைகளும் அறிவிக்கப்படும்.

(இ) கல்லூரிகளில் " ராகிங் "நடப்பதைத் தடுத்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மற்றொரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அதாவது, குறிப்பாக பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் " ராகிங் " அல்லது எள்ளி நகையாடுவது என்பது கவலைக்கு இடம் அளிக்கிறது என்று உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அது பற்றி ஒரு சுற்றறிக்கையும் 4—7—1967-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சினியரிங் மற்ற கல்லூரிகளில் அதற்கு இடமளிக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இளைய மாணவர்களை, புதிதாக வரும்போது, மூத்த மாணவர்கள் கேலி செய்யும் பழக்கம், கேலி, கிண்டலாக இல்லாமல், எள்ளி நகையாடி, அழவைத்து, துன்புறுத்துவதாகச் சென்றுவிட்டால் அதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவையில், ஒரு மாணவன் மன உளைச்சல் தாங்காமல் தூக்குப் போட்டுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டது பற்றிச் சொல்லப்பட்டது. போலீஸார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக கோவை கல்லூரியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பி.ஈ. டெக்னிக்கல் இறுதி ஆண்டு படிப்பவர்கள் 2 பேரையும், இரண்டாவது ஆண்டில் படிக்கும் மாணவர்கள் 2 பேரையும் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். எள்ளி நகையாடும் பணியில் 11 மாணவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அப்படி சென்னை " இன்ஜினியரிங் " கல்லூரியில் 3 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கிறது. மதுரை மருத்துவக் கல்லூரியில் 3 பேர்களை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கடுமையான சுற்றறிக்கைகளை எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்புவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கடுமையான நடவடிக்கைகள் எடுக்கலாம், வெளியேற்றலாம் என்று உத்தரவுகள் இடப்பட்டுள்ளன. இனி மிக ஜாக்கிரதையாக இருக்கும்படி விடுதிக் காப்பாளர்கள், கல்லூரி முதல்வர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாணவர்கள், வெளியேற்றப்பட்ட மாணவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க முதல்வர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) நிறுத்தி வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு அறிவிக்கைகள். இன்று 10 அறிவிக்கைகள் உள்ளன. ஆனால் விதிகளின்படி ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்பு அறிவிக்கைகளுக்கு மேல் எடுத்துக் கொள்ள முடியாது. ஆகையால் 41-வது விதி 3-வது உட்பிரிவைத் தளர்த்த வேண்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : அவைத தலைவரவர்களே 41—வது விதி 3—வது பிரிவின்படி ஒரு நாளைக்கு 2 அறிக்கைகள தெரிவிக்கலாம் என்று உள்ளது. அதை 244—ஆம் விதியின்படி இன்று தளர்த்த வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவ அந்த விதியைத் தளர்த்த பேரவை ஒருமனதுடன் அனுமதிக்கிறது. எனக் கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

6. கவன ஈர்ப்பு.

(அ) கோவை பஞ்சாலைகள் கதவடைப்பு

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் உள்ள கம்போடியா, சனுர்த்தன, ரங்கவிலாஸ், சோமசுந்தரா, காளிஸ்வரா, மற்றும் சில மில்கள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையின்றி அவதியுற்று அவர்கள் குடும்

பங்கள் வறுமையில் வாடுகின்ற நிலைபற்றி அவசரமும், முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு எம். பூபதி அவர்கள் இதே காரியத்திற்காக ஒரு கவன ஈர்ப்பை மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்களின கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. எம். பூபதி: கோவையில் சுமார் 8 பஞ்சாலைகள் மூடப்பட்டுக் கிடப்பதால் பல்லாயிரக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பின்றி, வருவாய் எதுமின்றி வறுமையில் வாடிக் கிடக்கின்ற நிலைமை பற்றி, அவசரமும‘ முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1965–66-ல் இம்மாநிலத்தில் மின்சார வெட்டு நீண்டதொரு கால அளவுக்கு நிலவியது. இந்திய ரிசர்வ் வங்கி கடன் வழங்குவது குறித்துக் கட்டுப்பாடுகளை விதித்தது. சந்தைகளில் துணிகள் விற்கப்படாமல் இருந்த கால அளவின்போது நூல், துணி இருப்புகள் துணி ஆலைகளில் தேங்கிக் கிடந்தன. மேற்குறிப்பிட்ட காரணங்களால், கடந்த இரண்டாண்டுகளாக இம்மாநிலத்தில் துணி ஆலைத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பல ஆலைகளும், ஏனைய மாவட்டங்களில் உள்ள ஒரு சில ஆலைகளும் மூடப்பட்டன. சில ஆலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன. மூடிய ஆலைகள் மீண்டும் செயல்படவும், மேற்கொண்டும் ஆலைகள் மூடப்படாதிருக்கவும், அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனது. தென் இந்திய ஆலை முதலாளிகள் சங்கத் தலைவர், தென் இந்திய துணி ஆலை ஆராய்ச்சி சங்கத்தின் நெறியாளர் ஒருவர், கைத்தறித்துறை நெறியாளர் ஆகியோர் அடங்கிய தொழில் நுட்பத் தனிக் குழு ஒன்று 1966 ஜூன் திங்களில் அமைக்கப்பட்டது. மூடப்பட்ட ஆலைகளின் தொழில் நிலை, நிதி நிலை குறித்து ஆய்வு செய்து அவற்றை மீண்டும் தொடங்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக, அக்குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் கோவை மாவட்டம், ஒண்டிப் புதூர் கம்போடியா ஆலை, கோவை மாவட்டம் ஜனார்த்தன ஆலை, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோயில் கோதண்டசலி ஆலை ஆகியவற்றிற்கு ரூ. 25.85 இலட்சம் வரையில் உத்தரவாத உதவியளிக்க (guarantee-assistance) அரசு முன்வந்தது. பாலமலை ரங்கநாதர் ஆலைக்கும் காளீஸ்வரர் ஆலைக்கும் உதவி வழங்க வேண்டும் என்று குழு பரிவுரை செய்யவில்லை. அவற்றின் இழப்புக்களைக் காட்டிலும் பொறுப்புக்கள் அதிகமாயிருந்ததே அதற்குக் காரணம். பொறுப்பு ஏற்கப்பட்ட உதவியைக் கோதண்டசலி ஆலை பெற்று, 29—6—1967-ல் மீண்டும் செயல்படத் தொடங்கியது. ஏனைய இரண்டு ஆலைகள் கடன் பெறும் பொருட்டு அவர்களுடைய வங்கிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவருகின்றன. 1967–ஏப்ரலில் முக்கூட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. டாக்டர் பி. எஸ். லோகநாதன் அக்குழுவின் தலைவராவார். அதில் பதினான்கு உறுப்பினர்கள் உள்ளனர். மூடப்பட்டுள்ள ஆலைகள் குறித்தும், மூடப்படும் நிலையில் உள்ள ஆலைகள் குறித்தும் இக் குழு ஆய்வு செய்யும். இந்த ஆலைகளை மீண்டும் தொடங்கவும், செயல்நலை ஆட்டம் கண்டுள்ள ஆலைகள் மூடப்படாமல் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதே இக் குழுவின் நோக்கமாகும் அக்குழு தனது முதலாவது இடைக்கால அறிக்கையில், ஒன்பது ஆலைகளுக்கு ரூ. 59·21 இலட்சம் அளவிற்குப் பொறுப்பு உறுதி உதவி வழங்கப் பரிவுரை செய்துள்ளது. குழு பரிவுரை செய்துள்ள கடனைப்பெற தத்தம் வங்கிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும்படி ஆலைகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அக் குழு தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையில் மேலும் ஏழு ஆலைகளுக்கு ரூ. 71·57 இலட்சம் அளவிற்கு உதவி வழங்குவதற்கும் பரிவுரை செய்துள்ளது. கோவை மாவட்டம், சோமசுந்தரம் ஆலை அலுவல்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக, 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்தல்)

சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துமாறு இந்திய அரசைக் கேட்கும்படியும் குழு பரிவுரை செய்துள்ளது. இப்பரிவுரைகளை அரசு மும்முரமாக ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்யவும், ஆலைகள் மேற்கொண்டும் மூடப்படுவதைத் தடுக்கவும், தேவையுள்ள பொருத்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்பதையும், அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும் மேற்கூறியவற்றிலிருந்து அறியலாம்.

(இ) நூல்வரி ஏற்றமும், பஞ்சாலைத் தொழிலாளர் அல்லலும்

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் மத்திய சர்க்கார் 60, 80, 100-ஆம் நம்பர் நூல்களின்மீது ஒரு கிலோ நூலுக்கு ரூ. 1·20 என்றிருந்த வரியை ரூ. 6·20 ஆக உயர்த்தியதால் தமிழகத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலும் அதில் பணியாற்றுகின்ற 1,00,000 தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருப்பதைப்பற்றி அவசரமும், முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, மின்சார வெட்டு, நியாயமான விலைகளில் பஞ்சு கிடைக்காமை, ஏனைய மூலப் பொருள்களின் உயர்விலைகள், கைத்தறித் தொழிலும் பரவலாக அமைக்கப்பட்ட ஏனைய துறைகளும் குறைந்த அளவுக்கு நூல் பயன்படுத்தியது போன்ற பல்வேறு காரணங்களால் தமிழகத்திலுள்ள துணி ஆலைகள் முக்கியமாக நூற்பாலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நெருக்கடியான ஒரு நிலையில் செயல்பட வேண்டி வந்தது. இத்தகையதொரு நெருக்கடி நிலைமையின் காரணமாக, சில ஆலைகள் ஏற்கெனவே மூடப்பட்டு விட்டன. இன்னும் பல ஆலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன. மூடிய ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்யவும், ஆலைகள் மேற்கொண்டும் மூடப்படாமல் தடுக்கவும், மாநில அரசு உத்தரவாத உதவி வழங்குவதன் மூலம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கச்சாப் பருத்தியின் விலையும் தயாரிப்புச் செலவுகளும் உயர்ந்தமையாலும் தொழிலாளர் ஊதியங்களும் பருத்தியின் மீதான ஆயத்தீர்வை வீதங்களும் அதிகரித்தமையாலும், கடந்த பன்னிரண்டு மாதங்களில் பருத்தி நூலின் விலைகள் உயர்ந்து கொண்டே போயின. 1967–68-ல் இந்திய அரசு வரவு–செலவுத் திட்டத்தில் கண்டு நூல் (Cone yarn) பாவு நூல் (sized yarn) ஆகியவற்றிற்கான ஆயத் தீர்வைகள் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவு நூல்.	வரவு–செலவுத் திட்டத்திற்கு முந்திய வீதங்கள்.	வரவு–செலவுத் திட்டத்திற்கு பிந்திய வீதங்கள்.
(1)	(2)	(3)
	(கிலோகிராம்ஒன்றுக்கு	காசுக் கணக்கில்)
Nf. 51 அல்லது அதற்கு மேற்பட்டு	150	620
Nf. 40 லிருந்து 50 வரை ..	120	620
Nf. 34 லிருந்து 39 வரை ..	90	240
Nf. 29 லிருந்து 33 வரை ..	60	240
கண்டு நூல்—		
Nf. 29 லிருந்து 33 வரை ..	50	70

தற்போதைய அதிகரிப்பின் விளைவாக மொத்த உற்பத்திச் செலவில் சுமார் 60 சதவிகிதம் தீர்வையாகச் செலுத்தப்படவேண்டிவரும். நூலுக்குக் கஞ்சி போடும் தொழிற்சாலைகள் (sinzig factories)

செலுத்தத் தக்க புதிய தீர்வை வீதம் Nf. 40, அதற்கு மேற்பட்ட எண்ணுள்ள, 100 கிலோ கிராம் நூல் கொண்ட பெட்டி ஒவ்வொன்றுக்கும் ரூ. 510 ஆகும்.

வரவு–செலவுத் திட்டத்திற்கு முன்பு இத்தகைய பெட்டி ஒன்றுக்கு செலுத்தத்தக்க தீர்வை வீதம் ரூ. 20 ஆக இருந்தது. நூலுக்குக் கஞ்சி போடும் தொழிற்சாலை இயந்திரம் ஒன்றுக்காக இந்த உயர்ந்த வீதத்தில் ஒரு நாளுக்கு 5,000 ரூபாய் செலுத்த வேண்டி வரும் எனத் தெரிகிறது. தொழிற்சாலையின் மூலதனம் பல இடங்களில் 50,000 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கையில் மேற்கூறியபடி அதிகமான தொகையை அத் தொழிற் சாலைகள் தீர்வையாகச் செலுத்த வேண்டி வரும். விதிக்க எண்ணியுள்ள தீர்வை முழுவதையும் செலுத்திவிட்டு ஆதாயத்திலும் இயங்குவது என்பது இயலாத செயல். 1967–68 மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் கண்டு நூலுக்காகவும் பாவு நூலுக்காகவும் அதிகத் தீர்வை வீதங்கள் விதிக்கப்பட்டதன் விளைவாக, இம் மாநிலத்தில் துணி ஆலைத் தொழில் மிகுந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இம் மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் மூலமே விசைத் தறிகளுக்கு நூல் பெருமளவிற்குக் கிடைக்கின்றது. நூல் மீதான தற்போதைய ஆயத் தீர்வை வீதங்களை உயர்த்தாமல் தற்போதுள்ள வீதங்களையே தொடர்ந்து செயலில் இருக்கும்படிச் செய்யுமாறு அமைச்சர் அளவில் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் துணி ஆலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலைமையையும் எத்தகைய இடர்ப்பாடுகளில் அத் தொழில் செயல்பட்டு வருகின்றது என்பதையும் குறிப்பாகக் கருதிப் பார்த்து, ஆயத்தீர்வை வீதங்களை உயர்த்தாமல் இருக்கும்படி இந்திய அரசை நான் கேட்டுக்கொண்டுள்ளேன். நான் மத்திய நிதி அமைச்சரைச் சந்தித்து, நூலின் மீதான ஆயத் தீர்வையைக் குறைக்கும்படிக் கேட்டுக் கொண்டதற்கு, குழு ஒன்று இது பற்றிப் பரிசீலிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டிருப்பதாகவும், அக் குழு இதைப் பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்குமென்றும், அதையொட்டி தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(உ) வெளியில் அரிசி விற்பனைத் தடையால் கோவை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் மக்கள் அல்லல்.

THIRU R. KRISHNASWAMY GOUNDER: Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the hardship of thousands of poor workers in and around Coimbatore City on account of the recent order of the Government completely prohibiting the sale of rice in the open market.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I may be permitted to make the following statement :—

The scales of supply of ration in the statutorily rationed area of Coimbatore since the commencement of this year are as follows :—

From.	To	Rice.	Wheat.
		(IN GRAMMES)	
(1)	(2)	(3)	(4)
11th December 1966.	28th January 1967.	1,200	800 (full)
29th January 1967.	4th February 1967.	800	800
12th February 1967.	25th February 1967.	1,200	400

From	To	Rice (IN GRAMMES)	Wheat
(1)	(2)	(3)	(4)
26th February 1967.	1st April 1967.	1,200	..
2nd April 1967.	29th April 1967	1,200	400
30th April 1967.	6th May 1967.	1,400	..
9th May 1967.	10th June 1967.	1,400	200
11th June 1967	to-date.	1,400	350 (full)

The full quantum of ration could not be supplied to the card holders since 29th January 1967 because of irregular supply of rice to this area and the reduced allotment of wheat and wheat products received from the Government of India. As the quantum of rations supplied to card holders was not sufficient to meet their weekly needs, a certain amount of open market sales of rice was permitted informally in January and February. The concept of statutory rationing precludes the open market sale of rice. This has been stopped with effect from 11th June 1967, the date with effect from which the full quantum of 1,750 grams of rations are being supplied to the card holders.

Just before the supply of full quantum of ration, was resumed in the statutorily rationed area of Coimbatore, reports were being received by the Government to the effect that organised attempts were being made by anti-social elements to smuggle a sizeable quantity of rice to Kerala State across the Coimbatore-Kerala border. As such clandestine movement of rice to Kerala by black-marketeers would affect the food position in this State, the Government had to take steps to nip this evil in the bud. As permission to allow free movement of rice into the statutorily rationed area of Coimbatore and sell it there, would encourage black-marketeers to import large quantities into Coimbatore on the pretext of looking after the requirements of the citizens of Coimbatore and attempt at smuggling such quantities to Kerala on the sly and such cases were reported to be on the increase, the Government stopped the open market sale of rice to Coimbatore. But there is no restriction for bringing up to ten measures of rice by any person for own consumption. Such a relaxation exists now both in Madras City and Coimbatore. No hardship has been caused by this step to the citizens of Coimbatore by stopping open market sales in Coimbatore since the full quantum of ration is now being supplied.

(எ) கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாத நாட்களுக்கும் தண்ணீர் தீர்வை வசூல்

திரு. எ. பட்டாபி நாயுடு: சட்டமன்றத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற கால்வாய்களின் வழியாகப் பாசன வசதி பெறும் நஞ்சை நிலங்களுக்கான தண்ணீர்த் தீர்வை, 1957-ல் இருந்து 1966- வரை, தண்ணீர் விடப்படாத நாட்க

ளுக்கும் சேர்த்து வசூலிக்கப்படுவது பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, பின் வரும் விவர அறிக்கையைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

1957 நவம்பரில், அதாவது, 1367-ம் பசலியில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து பாசனத்திற்காக நீர் விடப்பட்டது. வருவாய்த் துறையில் 7—1—1963 தேதியுள்ள 115-ம் எண் அரசு ஆணையில் நன்செய் நிலங்கள் மீது கூடுதலான தீர்வை விதிக்கப்படுவதற்கு அரசு, ஏற்பு அளித்துள்ளது. அத்தகைய கூடுதல் தீர்வை வீதங்களைக் கணக்கிடுவதற்கென இந்த ஆண்டு அடிப்படை ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தீர்வை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஒரு போக நன்செய் நிலங்கள் ..	ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15.
உடன்பட்டுத் தீர்த்த இருபோக நன்செய் நிலங்கள்.	ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20.
இரு போக நன்செய் நிலங்கள் ..	ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 22·50.

1367-ம் பசலி முதல் (1957 ஜூலை 1-ம் நாள்) இந்தத் தீர்வை வீதங்கள் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன. 1367-ம் பசலி முதல் கூடுதலான நன்செய்த் தீர்வையைச் செலுத்துவது குறித்துச் சில இடர்ப்பாடுகள் இருப்பதாக கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்ட உழவர்கள் 1965-ல் முறையீடு செய்து கொண்டனர். 1963-ல் (1374-ம் பசலியில்) வெளியான ஓர் அறிவிப்பின் மூலம் கூடுதல் தீர்வை விதிக்கப்பட்டிருக்க, 1367-ம் பசலி முதல் அத் தீர்வை வீதங்கள் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன என்பது அவர்களது முறையீடுகளில் ஒன்றாகும். இது குறித்து தர்மபுரி மாவட்டக் கலெக்டருக்கு அறிவிக்கப்பட்டது. 1367-ம் பசலியில் தான் இந்த நீர்த்தேக்கத்திலிருந்து முதன் முதலில் நீர் விடப்பட்டது என்றும், எனவே 1374-ம் பசலியில் (1963-ல்) அறிவிப்பு வெளியான போதிலும், 1367-ம் பசலியிலிருந்து அத்தீர்வையை விதிப்பது சரிதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

திரு. எ. பட்டாபி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு கேள்வி கேட்கத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 1367-ஆம் பசலிக்கு விடப்பட்ட தண்ணீரானது சில பகுதிகளுக்குத்தான் பாய்ந்தது. ஆனால், மீதியுள்ள பகுதிகள் 1371-ஆம் பசலி வரையிலும் பாயாமல் இருந்திருக்கின்றன. அப்படியிருக்க, 1371-ஆம் பசலியிலும், 1368-ஆம் பசலியிலும் 1369-ஆம் பசலியிலும் பாயப்படாத நிலங்களுக்கு, 1367-ஆம் பசலியிலிருந்து வசூலிக்கப்படுகிறது. இது நியாயமற்ற முறையாக இருப்பதால், இதைத் தவிர்த்து, அவர்களிடமிருந்து வாங்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதையெல்லாம் கணக்கிட்டு 1367-ஆம் பசலியிலிருந்து தீர்வை விதிப்பது சரிதான் என்ற முடிவுக்கு மாவட்டக் கலெக்டர் அவர்கள் வந்துள்ளார்கள்.

(ஐ) திருப்பூர் அரசினர் மருத்துவ மனையில் போதுமான கட்டில்கள் இன்மையால் நோயாளிகள் கீழே படுக்கவைக்கப்படுதல்

முற்பகல் 11-00

திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் போதுமான கட்டில்கள் இல்லாத காரணத்தால் அங்குள்ள நோயாளிகளைக் கீழே படுக்க வைக்கக் கூடிய நிலைமைபற்றி அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

967 ஜூலை 18]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கின்றேன். திருப்பூர் அரசாங்க மருத்துவ மனை 49 படுக்கை வசதிகளைக் கொண்டது. நகரின் மொத்த ஜனத்தொகை சுமார் 1 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. எனவே, அரசாங்க மருத்துவ மனையில் இட நெருக்கடி தவிர்க்க முடியாததாயிருக்கிறது. இந்த நிலைமை எல்லா மருத்துவ மனைகளிலும் அன்றாட நிகழ்ச்சிகளாக இருந்து வருகிறது.

மேற்படி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட படுக்கை வசதிகளைவிட அதிகமான நோயாளிகளைத் தவிர்க்க முடியாத காரணங்களால் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கட்டில் படுக்கை வசதியில்லாத காரணத்தால் அரசாங்க மருத்துவ மனைக்கு கடும் நோயுடன் வரும் நோயாளிகளுக்கு இடமளிக்க மறுப்பது சரியல்ல என்று அரசாங்கம் கருதுகிறது. கட்டில் படுக்கை வசதியில்லாத நோயாளிகளின் நிலையைக் கருத்திற் கொண்டு படுக்கை வசதிகளுடன் தரைமீது இருக்க வைத்து சிகிச்சை செய்யப்படுகிறது.

அரசாங்க மருத்துவ மனையில் "அவுட் பேஷண்ட் பிளாக் ஒன்றும், இன் பேஷண்ட் பிளாக் ஒன்றும்" விரிவுபடுத்த ஒரு திட்டம் மருத்துவ நெறியாளர் பரிசீலனையில் இருந்து வருகிறது. அரசாங்க நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டம் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

(ஒ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் ரசாயன உரம் கிடைக்காமை

திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் பூராவிலும் குறிப்பாக, அரக்கோணம் தாலுக்காவைச் சேர்ந்த கிராமங்களில் இந்த போக சாகுபடிக்கு (சுவர்ண வாரி) தேவையான ரசாயன உரங்களாகிய அமோனியம் சல்பேட், யூரியா முதலியன விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்காததுடன் ஒவ்வொரு கிராமத்திற்கும் சராசரி பத்து மூட்டைகள்கூட வரவில்லையாதலால் மேற்படி உரங்கள் உடனே கிடைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுபற்றி அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கின்றேன். பொதுவாக, வட ஆர்க்காடு மாவட்டத்திலும், குறிப்பாக அம்மாவட்டத்தில் அரக்கோணம் வட்டத்திலும் உள்ள உழவர்களுக்கு இரசாயன உரங்கள் போதிய அளவிற்கு வழங்கப்படுவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இரசாயன உரங்கள் பொதுவாகக் குறைந்த அளவில் கிடைக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த அரசின் உரத் தேவைகளுக்கேற்ப போதிய அளவிற்கு உரங்களை வழங்க இந்திய அரசால் முடியவில்லை. அந்த அரசு வழங்கும் உர அளவு எப்போதுமே நமது தேவைக்குக் குறைவாகவே இருந்து வருகிறது. உரங்கள் தேவைப்படும் அளவையும், அவை வழங்கப்படும் அளவையும் கருத்திற்கொண்டு, இந்திய அரசு மாநிலங்களுக்கு உரங்களை ஒதுக்கித் தருகிறது. அவ்வாறு ஒதுக்கப்படும் உரங்கள் ஏனையோருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. 1966-67-ம் ஆண்டுக்கென வட ஆர்க்காடு மாவட்டத்தின் பயிர் -பருவக்கால் அட்டவணையையொட்டி, அம்மாவட்டத்திற்கு 39,487 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) தேவைப்பட்டது. ஆனால், 19,402 மெட்ரிக் டன் உரங்களைத்தான் அரசால் ஒதுக்க முடிந்தது.

மிகுதியான விளைச்சல் தரும் நெல் ரகங்கள் உட்பட, குறுகிய காலக் கோடைப் பயிராகிய சொர்ணவாரிக்கென, 1967 ஏப்ரல் முதல் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு 5,608 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) ஒதுக்கப்பட்டது. 1–4–1967 முதல் தொகுப்பு விலைகள் **(Pool prices)** உயர்த்தப்பட்டதன் காரணமாக, சிறிது காலத்திற்கு உர வாணிபம் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த இடையீட்டினைத் தவிர உழவர்களுக்கு உரங்கள் எளிதாகவும், ஒரு சீராகவும் தொடர்ந்தும் கிடைத்து வந்துள்ளன.

அரக்கோணம் வட்டத்தைப் பொறுத்தவரையில், உரங்களை விற்கும் வேலையும் பங்கீடு வேலையும் அரக்கோணம் விற்பனைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அச் சங்கம் தனது சில்லறை வியாபாரிகள் மூலம் உரங்களைப் பங்கிடும். 1966–67-ல் அரக்கோணம் வட்டத்திற்கு 2,823 மெட்ரிக் டன் உரம் தேவை என மதிப்பிட்டிருந்தது. ஆனால், 2,046 மெட்ரிக் டன் உரமே (அமோனியம் சல்பேட் கணக்கில்) இந்த வட்டத்திற்கு வழங்கப்பட்டது. அம்மாவட்டத்தில் நிலவும் பொது நிலைமையைக் கருதிப் பார்க்கையில், இது போதுமானதல்லவெனச் சொல்ல முடியாது. மிகுதியான விளைச்சல் தரும் பயிர்வகை உட்பட சொர்ணவாரி கோடைப் பயிருக்காக, 1967 ஏப்ரல் முதல் இந்நாள் வரையில் அரக்கோணம் வட்டத்திற்கு மட்டும் 551 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) ஒதுக்கப்பட்டுள்ளது.

1967 ஜூன் இரண்டாவது வாரத்தில் அரக்கோணம் விற்பனைச் சங்கத்திற்குக் கடைசியாக ஒதுக்கப்பட்ட 115 மெட்ரிக் டன் உரம் (அமோனியம் சல்பேட் கணக்கில்) இன்னும் எடுத்து அனுப்பப்படவில்லை. ஒதுக்கப்பட்டுள்ள உரங்களை மொத்த விற்பனைச் சங்கம் எடுத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிய வந்துள்ளது. அச்சங்கத்தின் நிதி வரையறை, ஏனைய வரையறைகள் காரணமாக அத்தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. உரங்களைப் பங்கிடுவது குறித்து மாவட்ட அளவில் உரக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு அதிகாரிகளும் அரசுச் சார்பற்றவர்களும் உறுப்பினர்களாய் உள்ளனர். இந்த வட்டத்தில் உரங்களை இன்னும் சிறந்த முறையில் பங்கிடுவதற்கான சில பரிவுரைகளை இக்குழு வழங்கியுள்ளது. இந்தப் பரிவுரைகளை வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் தனியே ஆய்வு செய்துவருகிறார். எனவே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் சொர்ணவாரிப் பயிருக்கு இரசாயன உரங்கள் ஒரு சீராகப் பங்கிடப்பட்டன என்பதையும் சொர்ணவாரிப் பயிருக்காக உரங்களைப் பெறுவதில் எந்தத் தனி இடர்பாடுகளும் உழவர்களுக்கு ஏற்படவில்லை என்பதையும் இதனால் அறியலாம்.

(ஔ) கோவையில் தொழிலாளருக்குப் போதிய மருத்தவ வசதியின்மை.

திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவையில் உள்ள அரசினர் தலைமை மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு என ஒரு பிளாக் மட்டுமே இருப்பதால் கோவை மாவட்டம் முழுவதும் உள்ள ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கி மருத்துவம் பார்க்கும் வசதி இல்லாமை குறித்த அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரமான அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்கிறேன். கோவையில் அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவ வசதிக்கான இணைப்புக் கட்டிடத்தில் கோயம்புத்தூர் பகுதியிலுள்ள காப்புறுதித் திட்டத் தொழிலாளர்கள் தங்கியிருந்து மருத்துவம் பெறுவதற்கான வசதிகள் போதுமான அளவில் இல்லை. இது பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நிலை குறித்து அரசின் நாட்டத்தை ஈர்த்து தமிழகச் சட்டமன்றப் பேரவையின் விதிகளைச் சேர்ந்த 41-வது விதியின் கீழ் திரு. எஸ். துரைசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

1967 ஜூலை 18] [திரு. செ. மாதவன்]

தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டம் கோயம்புத்தூர் பகுதியிலுள்ள தொழிலாளர்களுக்கும் பயன்படும் வகையில் 1955-ம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டது. 1–6–1967 தேதி வரை, கோயம்புத்தூர் பகுதியிலுள்ள தொழிலாளர்களில் 72,598 பேர்கள் மட்டுமே காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துள்ள மேற்படி தொழிலாளர்களுக்கு அரசின் மருத்துவ நிலையப் பணி மூலமாகவும், அரசின் நியமன மருத்துவப்பணி மூலமாகவும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இருவகை ஏற்பாடுகளின் மூலமாகவும் அவர்கள் வெளி நோயாளிகளாகச் சிகிச்சை பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அரசின் மருத்துவ நிலையப் பணித் திட்டத்தின் கீழ் தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருந்தகங்கள் ஐந்தும், இயங்கும் மருந்தகங்கள் இரண்டும் உள்ளன. இந்த மருந்தகங்களில் பதிவு செய்துகொண்டுள்ளவர்களுக்கு இவைகளின் மூலமாக தேவையான மருத்துவ உதவி அளிக்கப்பட்டு வருகிறது. அரசின் நியமன மருத்துவப் பணித்திட்டத்தின் கீழ் 55 நியமன சிகிச்சை நிலையங்களும், ஒரு பயனுதவி மருந்தகமும் உள்ளன. இந்த நியமன சிகிச்சை நிலையங்களிலும் பயனுதவி மருந்தகத்திலும் பதிவு செய்துகொண்டுள்ள தொழிலாளர்களுக்கு இவைகள் வேண்டிய மருத்துவ உதவியைச் செய்து வருகின்றன.

கோயம்புத்தூர் பகுதியில் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்குத் தங்கியிருந்து மருத்துவம் பெறும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கோவை, அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் 84 படுக்கை வசதியுடைய இணைப்புக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. (அவை பொது நோயாளிகளுக்காக 45 படுக்கைகளும் பேறு மகளிர்க்காக 14 படுக்கைகளும் கொண்ட ஒரு பொதுக்கட்டிடமும், காச நோயாளிகளுக்கு 25 படுக்கைகள் கொண்ட மற்றொரு கட்டிடமும் ஆகும்). மேலும் பெருந்துறையிலுள்ள இராமலிங்கம் காசநோய் மருத்துவ நிலையத்தில் காச நோயாளிகளுக்காக 55 படுக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் பகுதியிலிருந்து வருகிற காப்புறுதித் திட்ட காச நோயாளிகளுக்கு இங்கே சிகிச்சையளிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர, கோயம்புத்தூரில் உள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனையிலோ, இராமலிங்கம் காச நோய் மருத்துவ நிலையத்திலோ சேர்க்கப்பட வேண்டுமென்று அனுப்பப்படுகிற நோயாளிகளும்—காப்புறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கென படுக்கை ஏற்பாடு செய்துள்ளதற்குக் கூடுதலாகவே சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இதற்காகும் செலவு அரசினால் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் கொடுக்கப்படுகிறது.

மேலும், கோயம்புத்தூர் பகுதியிலுள்ள காப்புறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அவசியமான மருத்துவ வசதிகளை அளிப்பது அவசியம். இந்நோக்குடன் கோயம்புத்தூரைச் சேர்ந்த உப்பிலிப்பாளையத்தில், அனைத்து நோய்களுக்கும் சிகிச்சையளிக்கும் பிரிவுகளுடன் (பிள்ளைப்பேறு—காசநோய் ஆகியவற்றுக்கும் ஏனைய நோய்களுக்கும் பொதுவாக) 500 படுக்கைகளை கொண்ட தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவமனை ஒன்று தனியே கட்டப்பட்டு வருகிறது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். கட்டிட வேலை விரைவில் முடிவெய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு பணியாற்றத் தொடங்கிவிட்டால் கோயம்புத்தூர் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு, தங்கியிருந்து சிகிச்சை பெற போதிய வசதியில்லை என்கிற குறைபாட்டிற்கே இடமிராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. முனு ஆதி அவர்கள் 41-வது விதியின் கீழ் அவசரமும் முக்கியமுமான காரியம் ஒன்றை கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர் இடத்தில் இல்லாததால் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதுகிறேன்.

(அஅ) மதுராந்தகம் வட்டத்தில் ஏரிகள் பழுதுபார்க்கப்படாமை

***திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் புயலின் காரணமாக 200-க்கு மேற்பட்ட ஏரிகள் உடைபட்டு, இன்னும் முழுதுமாக பழுது பார்க்கப்படாததால், இந்த ஆண்டு பருவ மழைக்குள் பழுது பார்க்க வேண்டிய நிலைமை பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, செங்கல் பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் புயலினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த பாசன ஏரிகளை விரைவில் பழுது பார்ப்பதன் அவசியத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது.

இம்மாநிலம் 1966-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 3, 10, 28 ஆகிய நாட்களில் வீசிய சூறாவளிப்புயலினால் பாதிக்கப்பட்டு மிகுதியான மழை, கடும் புயல் ஆகியவற்றின் காரணமாக அநேக பாசன ஏரிகள் பழுதுற்று உடைப்பெடுத்தன. வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் தான் பெரும்பாலும் ஏரிகள் சேதமடைந்தன. 1966-ஆம் ஆண்டு 3-ம் நாள் முதன் முதலாக புயல் வீசியதும் நடப்புபாசன பருவத்திற்கு தண்ணீரைத் தேக்குவதற்காக உடைந்த இடங்களில் சுற்றுக்கரைகள் கட்டுவதற்கு அண்டைக் கோட்டங்களில் இருந்து பணியாளர்களை வேலை மேற்கொள்ளச் செய்து உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உடைந்து சேதமடைந்த ஏரிகளை நன்னிலைக்கு கொண்டு வருவதற்காக வெள்ள நிவாரண சிறப்பு வட்டம் ஒன்று அமைக்கப்பட்டு அவை பழுது பார்க்கும் வேலைகளை விரைவில் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

புயலின் விளைவாக செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இன்றையவரை அரசுக்கு கிடைக்கப்பட்ட புள்ளி விவரப்படி பாதிக்கப்பட்ட மொத்த ஏரிகள் 1,999. இவ்வேரிகளில் 521 ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டன. 1,478 ஏரிகள் பாதிக்கப்பட்டன. இவ்வேலைகளை பழுதுபார்ப்பதற்கும் முன் நிலையில் கொண்டுவருவதற்கும் நடப்பு ஆண்டிற்கு ரூபாய் 125 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் வட்டம் பொருத்த வரையில் 194 ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளன. இவ்வேரிகள் அனைத்திலும் பழுது பார்க்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதுராந்தகம் வட்டத்தில் உடைப்புகள் ஏற்பட்ட ஏரிக்கெல்லாம் 1966-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிவுக்குள் சுற்றுக் கரைகள் கட்டப்பட்டது. 11-7-1967-ல் இவ்வரசுக்கு கிடைத்த தகவல்கள்படி 77 உடைந்த ஏரிகளில் பழுது பார்க்கும் வேலை முடிவடைந்துள்ளது. மீதியுள்ள 117 ஏரிகளிலும் வேலை விரைந்து முன்னேறி வருவதாகவும் தெரியவருகிறது. மேலும் இவ்வட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட 331 ஏரிகளில் 59 ஏரிகளில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய 272 ஏரிகளில் பழுது பார்க்கும் பணிகள் அண்மையில் மேற்கொள்ளப்படும். இப்பணிகளில் விரைவில் முடிவடையும் பொருட்டு பெரும்பாலானவை உள்ளூர் ஆயக்கட்டுக்காரர்களிடமே வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளன. அடுத்த பாசனப் பருவத்தில் ஏரிகளில் முழு அளவு நீர்த்தேக்கம் நிலையை அடைய வடகிழக்கு பருவமழை காலத்திற்கு முன்பே ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகளை பழுது பார்த்து தன் நிலைக்குக் கொண்டுவர பொறியியல் பணித்துறை ஆவன செய்யுமாறு அரசு பணித்துள்ளது. கரையை உறுதிப்படுத்துதல், கல் பாவுக்கரை அமைத்தல் போன்ற பிற செப்பனிடு வேலைகள் 1968-69 ஆகஸ்டு இறுதிக்குள் முடிக்கும் நோக்கத்துடன் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்களுடைய கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு அமைச்சரவர்கள் பதில் அளித்தவுடன் அவர் ஒரு விளக்க வினா கேட்க விரும்பினார். இப்போது அதைக் கேட்பதற்கு அழைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கூட்டுறவு ஸ்டோர் அந்த 150 டன் ரசாயன உரத்தை எடுக்கவில்லை என்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த கூட்டுறவு ஸ்டோரின் நிதி நிலை சரி இல்லை என்பதும் இங்கே கண்டிருக்கிறது. ஆகவே தனிப்பட்டவர்கள் யாராவது அந்த யூரியா ரசாயன உரங்களை பணம் கட்டி எடுத்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய முன் வந்தால் அரசாங்கம் அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கோரிக்கையை மாவட்ட கலெக்டருக்கு தெரிவித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பூபதி அவர்கள் ஒரு விளக்க வினா போட வேண்டும் என்றார்கள். அவருக்கு நான் அனுமதி அளிக்க இருந்தேன். அவர் இடத்தில் இல்லாததால் அவர் வந்த பிறகு அனுமதிக்கிறேன்.

7. உரிமைக் குழுவின் அறிக்கை

சிதம்பரநாத நாடார்மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினைமீது குழுவின் பரிந்துரை

புலவர் கா. கோவிந்தன் : (உரிமைக் குழுவின் தலைவர்).—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்கள் பேரவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்கு பற்றி, 17-7-1967-ஆம் நாளன்று இப்பேரவைக்கு அளிக்கப்பட்ட உரிமைக் குழுவின் அறிக்கை, சட்டப் பேரவையின் 191 (பி) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவின் அறிக்கை இப்பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்கிற தீர்மானத்தை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்கிறதா என்பது கேள்வி. ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (டி) விதியின் கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ளுகிறது'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக்குழுவின் பரிந்துரைகளை இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறதா என்பது கேள்வி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

8. அரசினர் மசோதா

இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967), 1967)

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 8 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக்கூட்டு ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட இப்பேரவையின் உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

1. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.
2. திரு. ஆலடி அருணா.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தொடர்ந்து, நம்முடைய நண்பர் திரு. விஞயகத்திற்குத் தப்புத் தகவலேயே கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள். (சிரிப்பு). அதுமட்டுமல்ல. இது திருமணத்தைப் பற்றிய விவகாரம். விஞயகத்திற்குத் திருமணம் ஆனதாகக் கதையிலே அப்படி இல்லே.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

அரசினர் தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : பேரவை விதி 139 (1) இன்படி, மாண்புமிகு சட்டத் துறைஅமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களே இக் கூட்டு ஆய்வுக் குழுவின் உறுப்பினராக நான் நியமிக்கிறேன்.

6. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(அ) கோவை பஞ்சாலேகளில் கதவடைப்பு

மாண்புமிகு பேரவைத் தலேவர் : திரு பூபதி. அவர்கள், தம்முடைய கவன ஈர்பு அறிவிக்கையையொட்டி ஒரு விளக்க விஞ கேட்க விரும்பிஞர்கள். ஆஞல் அவர்களே அழைத்தபோது இருப்பிடத்தில் இல்லே இன்று கடைசி நாளாகையால் அவர்கள் வருத்தத்துடன் இக்கூட்டத்தை முடித்துக் கொண்டு போக வேண்டாம் என்று கருதி அவர்கள் அந்த விளக்க விஞவை இப்பொழுது கேட்க அனுமதிக்கிறேன்.

திரு. எம். பூபதி : தலேவர் அவர்களே, இந்தக் கேள்வி சற்று நீளமாக இருப்பதைத் தாங்கள் அனுமதிப்பீர்கள் என்று நினைக்கிறேன். கோவையில் காளேஸ்வரா, சோமசுந்தரா, ரங்க விலாஸ், கம்போடியா போன்ற மில்களில் வேலே இல்லாத நிலேயில் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பல நாட்களாகப் பட்டினி கிடந்து, பட்டினியிலிருந்து தங்கள் மனைவி மக்களேப் பாதுகாக்க வேறு வழியின்றி, வயோதிகக் காலத்திற்கென்று சேமித்து வைத்திருந்த பிராவிடண்ட் நிதியிலிருந்து, பிராவிடெண்ட் நிதிச் சட்டத்தின் 68 (எச்)இன்படி, கடன் வாங்கி, அரைகுறை வாழ்வு வாழ்ந்து வந்த தொழிலாளர்கள் தாங்கள் வேலே செய்து வந்த மில்கள் மீண்டும் திறந்து அவர்களுக்கு வேலே வாய்ப்பு அளிக்கும் வரையில், தொழிலாளர்களேப் பட்டினிச் சாவிலிருந்து பாதுகாக்க பிராவிடெண்ட் பண்டுக்கு பஞ்சாலே முதலாளிகள் தங்கள் பங்காகக் கொடுத்து வந்த அந்த நிதியை, பிராவிடெண்ட் நிதிச் சட்டத்தின் 78-வது பிரிவுப்படி தொழிலாளர்களுக்கு கொடுத்து உதவ மத்திய சர்க்காரின் தொழிலாளர் அமைச்சு, சென்னையிலுள்ள ரீஜினல் பிராவிடெண்ட் நிதிக் கமிஷனர் அவர்களுக்கு ஆணே பிறப்பிக்கத் தக்க நடவடிக்கைகளே இந்த அமைச்சு எடுக்குமா ? என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலேவர் அவர்களே, கோவை ஆலேகளேப் பொறுத்த வரையில், ஆலே முதலாளிகளேயும் அந்த ஆலேகளுக்குக் கடன் கொடுத்து உதவக் கூடிய பாங்கர்களேயும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. உயர்திரு லோகஞதன் குழு அளித்த அறிக்கையில், எந்த வகையிலே உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த உத்தரவாதத்தை அமல் படுத்தும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. கனம் உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளபடி, இந்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அவர்கள் கோரியபடி தெரிவிப்பதற்கான கடிதங்களும் இதற்கு முன்ஞல் வரையப்பட்டிருக்கிறது. மீண்டும் அதுபற்றி விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்திய சர்க்காருக்குத் தூண்டப்பட்டிருக்கிறது. மேலும் அதுபற்றி விரைவுபடுத்தும் முயற்சிகளே இந்த அரசு மேற்கொள்ளும் என்று நான் கூறிக்கொள்ளுகிறேன்.

9. அரசினர் தீர்மானம்.

மாநிலத்தின் பெயரை அரசியலமைப்புச் சட்டத்தில் "தமிழ்நாடு" என்று மாற்றியமைத்தல்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்:—

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இம் மாநிலத்தைக் குறிப்பிடும் பெயர் "தமிழ் நாடு" என மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை உறுதியாகக் கருதுவதுடன், இதுகுறித்து அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் அமையும் வண்ணம் மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இப்பேரவை பரிந்துரைக்கின்றது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது குறிப்பிட விரும்புகிறார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இத் தீர்மானமே என்னுடைய முன்னுரையாக அமையும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, இப்போது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்திற்கு எந்த விதத்திலும் ஆட்சேபனை இல்லையென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்) இது ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலே கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஆகும். இருந்தாலும்கூட அப்போது சமய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, அப்போதிருந்த அமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்தத் தீர்மானத்திலே, "இதில் பெயர் சூட்டுவதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை; இருந்தாலும்கூட நமது தமிழ் நாட்டினுடைய பெயர், தமிழ்நாட்டிலே, தமிழிலே மட்டும் 'தமிழ் நாடு' என்று இருக்கலாமென்றும், ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருக்கலாம்" என்றும் குறிப்பிட்டுக் கூறினார்கள். அடிக்கடி வெளிநாடு சென்று வந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், வெளிநாடுகளிலே, உலக நாடுகளில் எல்லாம் எப்படி பெயர் குறிக்கப்படுகின்றது, எப்படி நாட்டினுடைய பெயர் சொல்லப்படுகிறது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, ஜெர்மனியை எடுத்துக்கொண்டால், உள்நாட்டில் "ட்யூஸ் லேண்ட்"—"தந்தை நாடு" என்று சொன்னால்தான் தெரியும். ஆனால் வெளி உலகத்திற்கு "ஜெர்மனி" என்று சொன்னால்தான் தெரியும். ஜெர்மனிக்கு உள் நாட்டில் உபயோகப்படுத்துவதற்கு "ட்யூஸ் லேண்ட்" என்றும், வெளி நாடுகளிலே "ஜெர்மனி" என்றும் பெயர் இருந்து வருகிறது. அதே நிலையிலே நம்முடைய சென்னை சர்க்காரை, தமிழில்—தமிழ் நாட்டில் "தமிழ்நாடு" என்றும், ஆங்கிலத்தில் "மெட்ராஸ் ஸ்டேட்" என்றும் குறிப்பிட வேண்டுமென்று சொல்லி வந்தார்கள். உலகத்திலே எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், சென்னை அரசாங்கத்தை "மெட்ராஸ் ஸ்டேட்" என்று சொன்னால்தான் புரிந்துகொள்வார்கள். இப்போதிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இந்தப் பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டு வருவதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. என்னுடைய கட்சியின் சார்பாக ஒரே ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். தமிழிலே நாம் உபயோகப்படுத்துவதற்கு "தமிழ்நாடு" என்றும், ஆங்கிலத்தில் "மெட்ராஸ் ஸ்டேட்" என்றும் தமிழும், ஆங்கிலமும் இணைந்த மொழியாக இருக்க வேண்டுமென்ற நிலையிலே "தமிழ் நாடு—மெட்ராஸ் ஸ்டேட்" என்று இணைந்திருக்க வேண்டுமென வேண்டிக் கொண்டு, "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டுவதை பெருமதிப்புடனும், ஆர்வத்துடனும் நான் வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தமிழ் மொழியே இராவணேஸ்வரனுடைய வீணை நாதத்திலிருந்துதான் ஏற்பட்டது என்பதை நான் ஓரளவு சுமாராகத் தெரிந்து வைத்திருக்

கிறேன். இராவணனுக்கும், இராமனுக்கும் நடக்கும் சண்டையிலே, இராவணன் கட்சியை ஆதரிக்கக்கூடிய நமது டி.எம்.கே. சர்க்கார் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதில் ஒரு தனிப்பெருமை இருக்கிறது. தமிழுக்காக உள்ள இராவணனுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், இதைக் கொண்டு வருவது நூற்றுக்கு நூறு மிகப் பொருத்தமாக இருக்கிறது. "தமிழன் என்றோர் இனம் உண்டு; தனியே அவர்க்கொரு குண முண்டு" என்று நாமக்கல் கவிஞர் பாடினார். இத்தகைய பெருமையையும், புகழையும் பெற்றிருந்த தமிழன், தன் நாட்டுக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்று போராட வேண்டிய ஒரு கேவலமான—இது பார்லிமெண்டரி வார்த்தைதான் என்று நினைக்கிறேன்—நிலைக்கு அன்றைய காங்கிரஸ் சர்க்கார் நிர்ப்பந்தப்படுத்திவிட்டது. அதற்குக் காரணமாக இருந்தவர் விருதுநகர் சங்கரலிங்க நாடார் என்று சொல்லலாம். அவர் முதலில் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார். உண்ணாவிரதம் இருந்தவரிடத்தில், "நாம் நாளாவட்டத்தில் செய்வோம்" என்று ஒரு வார்த்தை கனம் திரு. காமராஜ் அவர்கள் சொல்லி விட்டிருந்தால் போதும். ஆனால், "இவன் உண்ணாவிரதம் இருந்து போனால் போகிறான்" என்று அவர் அலட்சியமாகப் பேசவே, சங்கரலிங்க நாடாரும் மண்டையை உதறிவிட்டு, உயிர் நீத்தார். தமிழனுடைய மான உணர்ச்சியைக் காப்பதற்காக—காங்கிரஸ்காரர்களுடைய அலட்சிய மனோபாவத்தினால் திரு. சங்கரலிங்க நாடார் வீணாக தன் உயிரை மாய்த்துக்கொண்டார். பொட்டி ஸ்ரீராமலு அவர்களும் ஆந்திர மாநில அமைப்புக்காகப் போராடி உயிர்நீத்தார். அவருக்கு ஆந்திராவிலே சிலை வைக்கிறார்கள். அதுபோல இங்கேயும் சங்கரலிங்க நாடாருக்காக ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, அன்று சங்கரலிங்க நாடார் எந்த காரியத்திற்காக உயிரை அந்தக் மாபெரும் காரியத்தை இன்று இந்த டி.எம்.கே. சர்க்கார் செய்ய வந்தது வாஸ்தவத்திலேயே ரொம்பவும் போற்றக்கூடிய ஒரு காரியம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"சுயமரியாதைத் திருமணம் நடத்துவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்பது நாற்பது வருட காலமாக இருந்து வரும் பிரச்சினையென்று அம் மசோதாவைக் கொண்டுவந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைவிட உயிர்ப்பிரச்சினையான, தமிழ், தமிழர், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு, தமிழர் கலாசாரம் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முன் நின்று வருகிறார்கள். அம்மாதிரியான ஒரு பிரச்சினையாக "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்பதை இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் எதிர்க் கட்சியில் இருந்த காலத்திலும், அதற்கு முன் காலங்களிலும் தமிழ்நாடு பூராவும் எடுத்து விளக்கி, அதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி—தமிழனுடைய மானத்தைக் காக்க ஒரு முயற்சி எடுத்து வந்தார்கள். அந்த எழுச்சியை காங்கிரஸ்காரர்களால் தாங்க முடியவில்லை. உடனே, காமராஜ் அவர்களும் மற்றவர்களும் காதைக் கடித்துக்கொண்டார்கள். "ஜனங்களுக்கு மத்தியில் விஷயங்களைக் கவர்ச்சிகரமாக எடுத்துச் சொல்ல தங்களுக்கு முடியவில்லை. இந்த நிலைமை நீடித்தால் சீக்கிரத்தில் அவர்கள் மந்திரி சபையைப் பிடித்து விடுவார்கள்" என்று எண்ணி, உள் நாட்டில் 'தமிழ்நாடு, என்றும், ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றும் பெயர் வைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அவர்கள் வழவழாவென்று போய்விட்டார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்திலே சீர்திருத்தம் செய்து நூற்றுக்கு நூறு "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் இன்று வந்திருக்கிறது. அதை நான் மிகவும் வரவேற்கிறேன். "செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் சொல்லிக் கொண்டிருந்தார். வாஸ்தவத்தில் இன்றுதான் வாய் எல்லாம் தேன் இனிக்கிறது (சிரிப்பு). இன்றுதான் அந்தத் தேன் சுவை கொடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த வார்த்தையை இன்று கேட்கும் போதுதான் காதில் தேன் பாய்வதைப்போன்று இருக்கிறது. இந்தப்

புதிய அரசு தமிழ்நாடு என்று பெயர் வைப்பது வரலாற்றில் இடம் பெற்று விட்டது. இது தனிநாடு போல் தெரிகிறதே என்று சிலர் கூறலாம். அதன்மூலம் இந்திய யூனியனில் இருந்து பிரிந்துபோக வழியேற்படும் என்று நொண்டிச் சாக்குச் சொல்லலாம். நாகர்கள் நாகாலாண்டு என்று பெயர் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னபோது பார்லிமெண்டில் அதுபற்றி விவாதம் வந்தது. அப்போது பிரதமராக இருந்த மாண்பு மிகு ஜவஹர்லால் நேரு அவர்கள், "அவர்கள் அப்படி அழைக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். நாம் ஒப்புக்கொள்கிறோம்" என்பதாக ஆணித்தரமாகப் பதில் சொன்னார்கள். ஆகவே 4½ கோடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிற இந்தப் பேரவையில் இந்தத் தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டால் கட்டாயம் அவர்களும் இதை ஏற்றுக் கொண்டாகவேண்டும்.

மகாராஷ்டிராவை எடுத்துக்கொண்டால் அவர்கள் மொழி அடிப்படையில் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்மை மத்ராசி, மத்ராசி என்று கேவலப்படுத்தாத நிலையில், தமிழ் நாட்டவர்களே தமிழர்கள் என்று அழைக்க, அந்தச் சொல் நம் செவியில் ரீங்காரமாக ஒலிக்கவேண்டும். நாம் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். அதற்கு வகை செய்கிற அளவில் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரித்து, வரவேற்று, இதை நிறைவேற்றி வைக்க முன்வந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தார்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான—ப்ளஸ்ஸிங்ஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: கனம் மன்றத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் ஏகமனதாக இங்கிருந்து நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்குச் செல்லும் என்று எதிர்பார்த்தேன். அப்படித்தான் இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பேச ஆரம்பித்தபோது நினைத்தேன். ஆனால் இறுதியில் 'மெட்ராஸ்' என்று ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்று அவர் வற்புறுத்தியது கொஞ்சம் வியப்பாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது. வெளிநாட்டார் நமக்கு என்ன பெயர் சூட்டுகிறார்களோ அதை வைத்தே அழைக்கப்படவேண்டும் என்ற நினைப்பு சரியானது அல்ல. நமக்கு என்ன பெயரோ அதை வைத்து அவர்கள் அழைக்கிறபோது தான் நமக்கு மதிப்பு, நமக்கு மரியாதை அளிப்பதாக ஆகும். அவர்கள் வைத்த பெயரினால் அழைக்கப்பட்டால் தான் நன்றாகத் தெரியும் என்று சொல்வது வாதமாகாது. முறை ஆகாது.

இந்தத் தீர்மானம் எந்தவிதமான கட்சிச் சர்ச்சைக்கும் இடமில்லாமல் நிறைவேறியாக வேண்டிய விஷயம். நிறைவேற்றப்படாமல் விட்டு வைத்திருப்பது பெரிய தவறு. உண்மையில் இந்தச் சந்தர்ப்பத்தில் சங்கரலிங்க நாடாரை நினைவுபடுத்திக்கொள்வது பொருத்தமாகும். 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கப்பட வேண்டும் என்பதற்காக மரணத்தையே ஏற்றுக்கொண்டார். ஆகவே, உடனடியாக 'தமிழ்நாடு' என்ற பெயரே வைக்கப்படவேண்டும். தமிழில் 'தமிழ்நாடு' என்று இருக்கட்டும், ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றே இருக்கவேண்டும் என்பது ஆங்கில ஆட்சியின் இயக்கத்தில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறோம் என்பதைக் காட்டும். அது சரியல்ல. ஆகவே, இன்றைக்கு 'தமிழ்நாடு' என்ற பெயரை வைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்து, இதில் எந்தவிதமான காலதாமதத்திற்கும் இடம் அளிக்காமல் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துவதே பொருத்தமானதாக இருக்கும்.

பூகோளம் படித்தவர்களுக்குத் தெரியும். ஆப்பிரிக்காவில் ரொடிஷியா, கினி, கோல்டுகோஸ்ட் என்பதாக ஆங்கில ஆட்சியினரின் காலத்தில் வைக்கப்பட்ட பெயர்கள் எல்லாம் அவை விடுதலைபெற்றவுடன் தங்கள் தங்கள் சுயப்பெயரில் இன்று மலர்ந்திருக்கின்றன. மாலி என்று முன்பு கேள்விப்படாத பெயரை இப்போது கேள்விப்படுகிறோம். டான்சானியா—புதிதாகக் கேள்விப்படுகிறோம். உலக அரங்கு இத்தகைய பெயர் மாற்

றத்தை ஏற்றுக்கொள்கிறது. ஆகவே நம்முடைய மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கவேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது. இந்தத் தீர்மானத்தை சபை ஏகமனதாக நிறைவேற்றிவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தீர்மானத்தை பிரஜாசோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் முழு மனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்றவுடனேயே, நாடு மொழிவாரி ராஜ்யங்களாக பிரித்து அமைக்கப்பட்டபோதே, இங்கு நம்முடைய மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயரை மத்திய அரசு அரசியல் சாஸனத்திலே புகுத்தி இருக்கவேண்டும். ஆனால் அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் அதிலே கவனம் செலுத்தாது ஒதுங்கி இருந்த காரணத்தால்தான் இன்று 'மதராஸ் ஸ்டேட்' என்ற பெயர் நிலைத்து இருக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. எப்படி இதர மாநிலங்களிலே மொழிவாரியாக பிரிந்தவுடன் அவர்களுடைய மொழியின் பெயரால் பெயர் வைக்கப்பட்டு உள்ளதோ அதே மாதிரி நமது மாநிலத்தையும் தமிழ்நாடு என்று அமைத்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிராது. ஏன் அப்படிச் செய்யவில்லை என்பது புரியவில்லை. இருந்தாலும் பெரும்பகுதியான மக்கள், குறிப்பாக எல்லோரும் என்றே சொல்கிறேன். இதற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதைத் மனமகிழ்ச்சியுடன், பேருவகையுடன் வரவேற்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நான் கூறிக்கொள்கிறேன்.

ஆகவே, இன்று இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் நாள் ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாகும். இந்த அரசுக்கு இம்மாமன்றத்தின் முடிவை மத்திய அரசுக்கு தெரிவித்து தன்னுடைய அரசியல் சாஸனத்தில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எவ்வித தயக்கமும் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. ஆகவே, கூடிய விரைவில் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதற்கான முறையில் மாநில அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஒருமனதாக ஆதரிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்திய முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நம்முடைய தமிழ்த் திருநாட்டுக்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதாக சபை முன் கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தின் மீது பேசுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்குக் காரணம் இந்திய அரசியல் நிர்ணய சபையாகவும், பாராளுமன்றமாகவும் செயல்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் நான் சார்ந்திருக்கிற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தந்தை பெருமதிப்பிற்குரிய தலைவர், அல்ஹாஜி காயிதே மில்லத் முஹம்மது இஸ்மெயில் சாயப் அவர்கள் "இந்தியத் திருநாட்டிற்கு விதேசி மொழியான ஒரு மொழி தேவையில்லை. சுதேசி மொழி ஒன்று தேவை" என்ற பிரச்சனை எழுந்தபோது இந்தியத் திருநாட்டைப் பொறுத்த வரையில் தனித்து இயங்குகின்ற மொழி, தொன்மை வாய்ந்த மொழி, வல்லமை படைத்த மொழி, தரணி ஆண்ட மொழி, இலக்கியச் செறிவுள்ள மொழி, இலக்கண வரம்புள்ள மொழி, என்ற சிறப்பியல்பு உடைய நம்முடைய இன்பத் தாய்மொழியாகிய தமிழ்மொழியை இந்தியத் திருநாட்டின் பொதுமொழியாக—ஆதிக்கமொழியாக ஆக்குங்கள், ஆக்குங்கள்—என்பதாக இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் அமைத்துக் கொண்டிருந்த நேரத்தில் கூறினார்கள். அவர்களுடைய பெயரால்—இன்றைக்கு நம் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட இருப்பதை நான் ஆதரிக்கிறேன். வரவேற்கின்றேன்.

அதேநேரத்தில், நான் உலக நாடுகளுக்கு எல்லாம் சென்றிருக்கிறேன். மலேசியா சென்றிருக்கிறேன். பர்மா சென்றிருக்கிறேன். சவூதி அரேபியா சென்றிருக்கிறேன். அந்த நாடுகளிலே குறிப்பாக தமிழ்நாட்டில்

இருந்து செல்கிறவர்களை எப்படி அழைக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பர்மாவிலே தமிழர்களை சோழநாட்டில் இருந்து வந்தவர்கள் என்ற பொருளில் சோளியர்கள் என்று அழைக்கிறார்கள். மலேசியாவில் கலிங்க நாட்டில் இருந்து வந்தவர்கள் என்று கிளிங்சர் என்று அழைக்கிறார்கள். அதுமாத்திரம் அன்று, 157 மொழி பேசுகின்ற, பத்து லட்சம் மக்கள் கூடியிருந்து வழிபாடு நடத்துகிற மாண்புமிக்க மெக்கத் திரு நகரில் உள்ள முஸ்லீம் மக்களின் புனித சேத்திரமான—இறைவனை வணங்குவதற்குக் கட்டப்பட்ட பூர்வீக ஆலயம் உள்ள அந்த நகரில் தேனினும், பாகினும், தெள்ளிய அமிழ்தினும், இனித்திடும் இன்பத் தமிழ்மொழியில் இஸ்லாமிய தத்துவத்தை விளக்கி பதினேரு நாட்கள் பேசுகின்ற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய சொற்பொழிவை துருக்கியர் வீற்றிருந்து கேட்டார்கள். அல்ஜீரியர் வீற்றிருந்து கேட்டார்கள். நைஜீரியர் வீற்றிருந்து கேட்டார்கள். ஜெர்மானியர் வீற்றிருந்து கேட்டார்கள். உலகத்தில் உள்ள மக்களில் 157 மொழிகள் பேசுகின்ற மக்கள் எல்லாம் இன்பத் தமிழ் மொழியிலே நான் ஆற்றிவந்த சொற்பொழிவை அந்த புனித இடத்திலே வீற்றிருந்து கேட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அல்ஜீரிய நாட்டு உயர் நீதிபதி ஒருவர் என்னைச் சந்தித்துக் கேட்டார். நீங்கள் பேசுகின்ற வண்மையும் இனிமை மிக்கதான மொழி, கேட்போர் இதயத்தை ஈர்க்கும் வன்மைமிக்க சொல் படைத்த கவின்மிகு மொழி எந்த நாட்டு மொழி" என்று கேட்டார். நான் 'தமிழ்மொழி' என்று கூறினேன். அவருக்குத் தமிழ்மொழி என்று கூறியவுடனே புரியவில்லை. அதற்குப் பிறகு "மெட்ராஸ் மொழி" என்று கூறினேன். அப்போது தான் "மதராசி மொழியா" என்று கேட்டார். அப்போது வெட்கமும், துக்கமும் எனக்கு ஏற்பட்டது. நம்முடைய இன்பத் தமிழ்மொழியிலே நான் பேசுகின்றபோது—நான் தமிழ் நாட்டில் இருந்து வந்திருப்பவன் என்று உணர்த்தப்பட்டால்—தமிழ் மொழியில் பேசுவதாக அறிந்திருப்பாரேயானல் எவ்வளவு மகிழ்வாக இருக்கும். அந்த நிலை இன்றைக்கு இல்லாத காரணத்தினல் அல்லவா அல்ஜீரிய நாட்டு உயர் நீதிபதிக்கே புரியவில்லை. என்றைக்கு என்னுடைய தாய்த் திருநாட்டுக்கு, தேனினும் இனிய தமிழ்மொழியின் அடிப்படையில் பெயர் சூட்டப்பட்டு செந்தமிழ் நாடு என்கிற பெயர் உலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதாக என்னுடைய இறைவன் ஆலயத்திலேயே இதயம் உருகிப் பிரார்த்தனை செய்து கொண்டேன். அன்றைக்கு அந்தப் புனித ஆலயத்தின் முன் னின்று இறைவனிடம் நான் செய்துகொண்ட பிரார்த்தனையின் பலனைத் தான் இன்றைக்குப் பெறுகிறேன். அதனல் பாராட்டுகின்றேன்! வரவேற்கின்றேன்.

நாலரைக் கோடி மக்களின் நாயகர், தமிழ் அறிந்த மக்களுக்கு மத்தியில் தமிழுக்கு தனித்ததொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்த தவச் செல்வர், மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சராக இந்தப் பேரவையில் வீற்றிருக்கும் காலத்தில, நம்முடைய தாய்த் திருநாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்கிற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற நேரத்தில் அதை ஆதரித்துப் பேசுகின்ற பேற்றை பெற்றுள்ள நான் அதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். (பலத்த ஆரவாரம்). தமிழ்மொழியை இந்திய தேசீய ஆதிக்க மொழியாக்கவேண்டும், இந்திய நாட்டின் பொது மொழியாக்க வேண்டும் என்பதாகக் கூறிய தந்தை காயிதே மில்லத் அவர்கள் கட்சியின் எளிய ஊழியன் என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். தமிழ்நாட்டிற்கு உள்ளே மட்டும் அல்ல, தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதியில் மட்டும் அல்ல, தமிழ்கூறும நல்லுலகம் பூராவிலும் உள்ள மக்கள் அழைக்கின்ற வகையில்—அதுவும் சிறந்ததோர் மொழியை அடிப்படையாக வைத்து, தமிழ்நாடு என்று நம் மாநிலம் அழைக்கப்பட வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரித்து நமது அரசியல் சட்டத்தில் திருத்தம் நிறைவேற்றப்படுகிற பணியை சீக்கிரமே எடுக்கவேண்டும் என்று கூறி—தமிழ்நாட்டுக்கு உள்ளேயும், தமிழ் கூறும் நல்லுலகிலும், உலகம் எங்கிலும் தமிழ்நாடு என்ற பெயரில் நம்மை அழைக்கும் வண்ணம் பெயர் மாற்றம் செய்துள்ளதை ஆதரித்து அமர்கிறேன்.

1967 ஜூலை 18]

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, சபை முன்புள்ள தீர்மானத்தை ஆதரிக்கிறேன். மொழிவாரியாக நமது மாநிலம் அமைந்த நேரத்திலேயே 'தமிழ்நாடு' என்ற பெயரை இதற்கு வைத்திருக்கவேண்டும். அரசியல் சாசனத்தில் மட்டும் அல்ல, வெளிநாடுகளிலும் இது 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படாது வேறு ஏதோ பெயரில் அழைக்க விட்டிருப்பது சரியல்ல. என்னைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னிருந்த அரசாங்கம் மொழிப் பிரச்சினை பற்றிய உணர்வில் கொஞ்சம் கூட மக்கள் உணர்ச்சியை மதித்து நடக்காதது தான் இன்றைய அவர்களது நிலைக்குக் காரணம் என்று சொல்வேன். 1956-லேயே இந்தப் பிரச்சினை எழுந்தது. தட்டிக் கழித்து விட்டார்கள். பாராளுமன்றத்தில் தீர்மானம் வந்தது. ஒதுங்கிவிட்டார்கள். ஆகவே இன்றைக்கு புதிதாக வந்துள்ள அரசு இத்தகைய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்திருப்பதை ஆதரிக்கிறேன். 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கப்பட்டால் தான் தமிழ் நாகரீகம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் கலாச்சாரம் ஆகிய எல்லாவற்றுக்கும் மரியாதை இருக்கும். ஆந்திராவில் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. பி.ப. 1-00

தமிழ் மக்களுடைய மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்றே பெயர் வைக்கப் படவேண்டும். தமிழ்நாட்டு அரசாங்க நிர்வாகம் அனைத்தும் தமிழிலேயே நடத்தப்படவேண்டும். மசோதாக்கள் இங்கே ஆங்கிலத்தில் வருவதைப் பார்த்து மனம் சங்கடப்படுகிறேன் வேதனைப்படுகிறேன். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிற நமது தொன்மை மொழியில் சொல்ல முடியாத விஷயங்களே கிடையாது. எல்லாவற்றையும் தமிழிலேயே நடைபெறச் செய்ய, தகுந்த வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதற்கு சங்கரலிங்கனார் பெயரில் ஒரு ஆராய்ச்சிக்கூடமே நிறுவப்படலாம். அவர் நினைவை நாம் மறக்க முடியாது. இன்றைக்கு எல்லாக் கல்லூரிகளிலுமே தமிழ்மொழி மூலமாகப் போதனை நடத்தப்பட வேண்டும். தமிழில் படிக்க அதிகமான பேர்கள் விரும்பவில்லை, ஆங்கிலத்திலேயே படிக்க விரும்புகிறார்கள் என்கிற பேச்சுக்கே முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இன்றைக்கு ஆங்கிலத்தில் பாடம் நடத்துகிற கான்வென்ட் பள்ளிக்கூடங்கள் எல்லாம் விரட்டி அடிக்கப் படவேண்டும். தமிழ் உணர்ச்சியை எல்லாத் துறைகளிலும் இந்த அரசு ஊட்டியாகவேண்டும். 1957-ஆம் ஆண்டிலேயே 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கப்படவேண்டும் என்பதற்கு நாங்கள் ஆயிரம் பேர் கிளர்ச்சி செய்தோம். அன்று எங்கள் எண்ணம் நிறைவேறவில்லை. நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களின் முயற்சியால் இன்றைக்கு இந்தத் தீர்மானம் சபை முன் வந்திருப்பதை ஆதரித்து, இதை ஏகமனதாக நிறைவேற்றவேண்டும் என்று கேட்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவை முன் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை மனப்பூர்வமாக அல்ல, என்னுடைய உணர்ச்சி பூர்வமாக, உயிர் பூர்வமாக ஆதரிக்கின்றேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்க வேண்டிய புண்ணிய காரியம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிற வரையில் காத்திருந்தது என்கிறபோது இது கடவுளின் கட்டளை என்றே நம்புகிறேன். காங்கிரஸ் கட்சித் தலைவர் தீர்மானத்தை ஆதரித்தார்கள். அதைக் கண்டு பூரிக்கிறேன். இந்த உணர்வு பத்து ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருந்தால் காங்கிரஸ் கட்சியின் நிலை இன்று வேறாக இருந்திருக்கும் என்பதை, பூர்வ நண்பர் என்ற முறையில் அவருக்கு நினைவூட்டிக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்தார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். தேவையில்லா ஒரு குறிப்பையும் கொடுத்தார்கள். ஆயினும் அவர் தீர்மானத்தை எதிர்க்கவில்லை என்பதை மனப்பூர்வமாக உணர்கிறேன். ஆதரிக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். தமிழில் 'தமிழ்நாடு' என்று இருக்கட்டும். ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றே இருக்கட்டும் என்ற குறிப்பை தந்தார். அந்தக் குறிப்பை ஏற்

போமானால் இந்தத் தீர்மானமே தேவையற்றதாகி விடுகிறது. சட்ட நுணுக்கப்படி பார்க்கிறவர்களுக்கு இது புரியும். அந்தக் குறிப்பு நடைமுறையில் இருக்கிற ஒன்று தான். நான் சொல்கிறேன், "ஆங்கிலத்தில் மட்டும் அல்ல. ஆண்டவன் உலகம் என்று ஒன்று இருக்குமானால் அங்கேயும் என் தாய்நாடு "தமிழ்நாடு" என்றே அழைக்கப்படவேண்டும்" இந்தத் தீர்மானத்தின் பொருள் அதுதான். என்னை என் பெயரால் அல்லாமல் இன்னொரு பெயரிட்டு அழைக்க இந்த உலகத்தில் இருக்கும் யாருக்கும் உரிமை இல்லை. என்னை இன்னொரு பெயரால் அழைப்பதைத்தடுக்க என் தன்மானம் தயங்காது. என் மொழிப் பெயரால், என் இனப்பெயரால், என் நாட்டின் பெயரால் தான் நான் அழைக்கப்படவேண்டும்; தமிழிலே 'தமிழ்நாடு' என்றும் ஆங்கிலத்திலே 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றும் அழைக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் கொண்டுவந்திருக்கின்ற குறிப்பு அவருடைய நம்பிக்கையிலிருந்து பிறந்திருக்குமானால், அவருடைய கட்சியின் மாநிலக் கிளைக்குப் பெயர் அப்படியில்லை என்பதை நான் அவருக்கு நினைப்பூட்டுகிறேன். இங்கே இருக்கின்ற அகில இந்திய காங்கிரசின் கிளைக்கு 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' என்று தமிழிலேதான் பெயரிடப்பட்டிருக்கிறதே தவிர, ஆங்கிலத்திலே 'மெட்ராஸ் ஸ்டேட் காங்கிரஸ் கமிட்டி' என்று அழைக்கப்படவில்லை. ஆகவே, அவர்கள் இன்னும் சரியான இடத்திற்கு வருவதற்கு சிக்கல் இருக்கிறது என்பதைத்தான் இதன்மூலம் நான் குறிப்பிட விரும்புகிறேனே தவிர இதிலே நம்முடன் ஒன்றுசேர வந்த அவரை விரட்டுவதற்காக நான் கூறவில்லை.

திரு பி. ஜி. கருத்திருமன் : நான் குறிப்பிட்ட சமயத்திலே இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றேன், என்று கூறி அதோடு ஒரு ஆலோசனையையும் சொன்னேன். இப்படி இருக்கலாம் என்று என்னுடைய ஆலோசனையைச் சொன்னேனே தவிர, இப்படித்தான் இருக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஒரு ஆலோசனையாகத்தான் சொன்னேன். ஜெர்மனியை ஜெர்மானிய மொழியிலே ட்யூஸ்லேண்ட் என்றும் ஆங்கிலத்திலே ஜெர்மனி என்றும் அழைக்கிறார்கள், ஆகவே இங்கேயும் அப்படிச் செய்யலாமென்று ஆலோசனையாகத்தான் சொன்னேன். தமிழிலே திரு. சிவஞானத்தைவிட பற்றும் பாசமும் எனக்கு உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு ம. பொ. சிவஞானம் : தமிழ்ப் பற்றிலே நான் கடைப்பட்டவன் என்பதை இந்த அவையிலே நான் அவையடக்கத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன். என்னைவிடத் தமிழ்ப் பற்றில் சிறந்தவர்கள் இந்த மன்றத்திலேயும், மன்றத்திற்கு வெளியிலேயும் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் தெளிவாக 'குறிப்பு' என்றுதான் சொன்னேன். அவர்கள் ஆலோசனை சொன்னதாகச் சொன்னார்கள். நான் குறிப்பு என்று நல்ல தமிழில் சொன்னேன். மெட்ராஸ் ஸ்டேட் என்று உலகத்திற்குத் தெரிகின்ற மாதிரி இருக்கவேண்டுமென்றால், மகாராஷ்டிரம் மகாராஷ்டிரம் என்று இருக்கக் கூடாது, பம்பாய் ஸ்டேட் என்று இருந்திருக்க வேண்டும். ஆனால் மகாராஷ்டிரமாகத்தான் இருக்கிறது. ஆகவே மெட்ராஸ் ஸ்டேட் என்று சொல்லப்படுவதினும் தமிழ்நாடு என்று இருத்தலே சிறந்தது. மெட்ராஸைவிட பம்பாய் உலகப் பிரசித்தி பெற்றது என்பதில் இங்கேயுள்ள எவருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆகவே அப்படிப்பட்ட பம்பாய் மாநிலம் மகாராஷ்டிரம் என்று அழைக்கப்படுவதுபோல் மெட்ராஸ் ஸ்டேட்டும் தமிழ்நாடு என்று உலகத்தாரால் அழைக்கப்படுவதுதான் சிறந்ததாக இருக்க முடியும்.

மத்திய அரசு ரீஆர்கனிஸேஷன் ஆப் ஸ்டேட்ஸ் என்று மாநிலங்களைத் திருத்தியமைக்கின்ற பொழுது-மசோதா தயாரிக்கப்பட்ட பொழுது—அதிலே பம்பாய் ஸ்டேட் என்றுதான் பெயரிடப்பட்டது. ஆனால் குஜராத் தனி ஸ்டேட் ஆக பிரிக்கப்பட்ட பிறகு, ரெஸிடுவரி பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "பம்பாய் ஸ்டேட் என்று இன்

1967 ஜூலை 18] [திரு. ம. பொ. சிவஞானம்]

ஞொருவர் பெயர் வைக்கத் தேவையில்லை, அதற்குப் பாராளுமன்றம் தேவையில்லை, என்னுடைய மாநிலத்திற்கு மகாராஷ்டிரம் என்று பெயர் இடப்படும்" என்று முதலமைச்சர் அவர்களே மாநில சபையில் தீர்மானம் கொண்டு வந்தார்கள். ஆகவே, மெட்ராஸ் ஸ்டேட் என்றுல்தான் உலகத்திற குத்தெரியும் என்று எண்ணுமல் 'தமிழ்நாடு' என்று பெயரிடுவதுதான் சாலச் சிறந்தது. பம்பாய் ஸ்டேட்டுக்கு மகாராஷ்டிரம் என்று பெயரிட்டு அழைக் கப்படுவதைப் போன்று மெட்ராஸ் ஸ்டேட்டுக்கு தமிழ்நாடு என்று பெய ரிடப்பட்டு தமிழ்நாடு என்றே உலகம் முழுதும் அழைக்கப்படுதல் வேண்டும். தமிழ் நாடு என்ற பெயர் வந்த பிறகும் மெட்ராஸ் நகரம் இருக்கும், அதனுல் மெட்ராஸ் என்ற பெயரும் இருக்கும். தமிழ்நாடு என்ற பெயர் மெட்ராஸ் என்பதை மறைக்கும் திரை அல்ல; எப்பொழுதும் அதை மறைக்கக்கூடிய திரையாக அது இருக்காது. தமிழ்நாடு என்பது புத்தம் புதிய பெயரல்ல. தமிழ் இலக்கியங்களில்கூட தமிழ்நாடு என்று இல்லை என்றெல்லாம் முன்பு இந்தப் பேரவையில் சொல்லப்பட்டது. அப்படியில்லை, தமிழ் இலக்கியங்களிலே தமிழ் நாடு என்று சொல்லப்படுவதற்கு நிறை யச் சான்றுகள் இருக்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப் பெற்ற தொல்காப்பியத்திற்கு சிறப்புப் பாயிரம் பாடிய பனம்பாரனுர் என்ற புலவர்,

> " வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
> தமிழ்கூறு நல்லுலகம் "

என்று தமிழ் நாட்டின் எல்லையைக் கூறுகின்ற முகத்தான் தமிழ் கூறு நல்லுலகம் என்றே குறிப்பிடுகின்றுர். எனவே, உலகத்தாரால் 'தமிழ்நாடு' என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதேபோல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயற்றப்பட்ட புறநானூற்றுப் பாடல் ஒன்றிலே

> " வையக வரைப்பின் தமிழகம் "

என்று ஒலிக்கின்ற அலைகடலுலகில் தமிழ் வழங்கும் நாட்டுக்குத் தமிழகம் என்று உலகம் கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1800 ஆண்டுகளுக்கு முன்பாக இளங்கோவடிகளால் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தில்,

> " இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் "

என்று தெளிவாக தமிழ்நாடு பற்றி இளங்கோவடிகள் கூறியிருக்கின்றுர். மணிமேகலையில் தமிழ்நாடு பற்றிக் கூறப்படுகின்றபொழுது,

> " சம்புத் தீவினில் தமிழகம் "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. பெரிய புராணத்தில் சேக்கிழார்

> " நற்றமிழ் நாடு "

என்று கூறுகின்றுர். அதற்குப் பிறகு வந்த கம்பன் மிகத் தெளிவாகக் கூறுகின்றுர்,

> " தென் தமிழ்நாடு "

என்று. அதற்குப் பிறகு பிறந்து, நம்மோடு வாழ்ந்து மறைந்த பாரதி யார், தமிழ்நாட்டைப்பற்றிப் பாடுகின்றபொழுது,

> " செந்தமிழ் நாடு "

என்று கூறுகின்றுர்.

> "செந்தமிழ் நாடென்னும் போதினிலே
> இன்பத்தேன் வந்துபாயுது காதினிலே "

என்று கூறி 'தமிழ் நாடு' என்று கேட்டதுமே இன்பத் தேன் வாயில் பாயவில்லை, காதில் வந்து பாய்கிறது என்று அழகாகக் கூறியிருக்கிறுர்

[திரு ம. பொ. சிவஞானம்] [1967 ஜூலை 18

இன்னும் தெளிவாகக் கூறுகின்றபொழுது,

—எங்கள்
"தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று கூறுகிறார். இந்த நாடு எங்கள் தந்தையர் நாடு—தந்தையர்கள் இந்த நாட்டில் வந்து குடியேறியவர்கள் அல்ல, இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர்களின் பூர்வ புண்ணிய புனிதத் திருநாடு—என்று காட்டி, தந்தையர் நாடு என்று சொன்னவுடனே மூச்சிலே ஒரு சக்தி பிறக்குது என்று கூறுகின்றார். அதோடுமட்டும் நின்றுவிடாது,

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா"

என்று, "தமிழர் திருநாட்டைப் பெற்றெடுத்த தாய் என்று கும்பிடு பாப்பா" என்று கூறுகின்றார்.

ஆகவே, தமிழ் வழங்கும் நாடு—தாய்நாடு, தந்தைநாடு என்று தமிழருக்கு மூவாயிரம் ஆண்டுகாலத்திற்கு முன்னதாக இருந்தே தமிழ்நாடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இலக்கிய சான்றுகளைக்கூறினேன். அடியார்க்கு நல்லார் கூறுகின்றபொழுது 'தமிழ்த் தேசம்' என்று கூறுகின்றார். ஆகவே தமிழகம், தமிழ்நாடு, தமிழ்த்தேசம், செந்தமிழ் நாடு, தென்தமிழ்நாடு என்று எல்லாம் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட பெயர்களை எல்லாம் வைக்க மறுப்பதற்கும் ஒரு காலம் இருந்தது என்பதனை நினைத்தபொழுது என்னுடைய உள்ளம் கொதித்தது, அப்படிக் கொதித்ததால்தான் குமம்பிக்கொண்டிருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகப் பொது மாநாடு சென்னையிலே நடைபெற்றபொழுது நான் பேசியதை மீண்டும் இப்பொழுது நினைவூட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவது உறுதி, அந்த ஆட்சி வந்தவுடன் முதல் காரியம் இந்த மாநிலத்தினுடைய பெயரை 'தமிழ்நாடு' ஆக ஆக்கவேண்டுமென்று சொன்னேன். இன்றைக்கு அதேமாதிரி "தமிழ்நாடு" ஆக ஆக்குவதற்கு தீர்மானம் கொண்டுவந்த முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் அந்தத் தீர்மானத்தைப் படித்தவுடனேயே ஓடிப்போய் அவரைக் கட்டி ஆலிங்கனம் செய்யவேண்டுமென்ற உணர்ச்சி என் உள்ளத்தில் ததும்பியது, ஆனால் அவரது பக்கத்திலோ அல்லது நேராகவே நான் போவதற்கு இடம் இல்லை, கடைக்கோடியில் இருக்கிறேன்.

இது வாதம் எதுவும் இல்லாத பிரச்னை என்பதால் அதிகம் பேசி நீட்டிக்க விரும்பவில்லை. 1961-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி யன்று சட்ட மன்றத்திற்கு வெளியே இதற்காகத் தமிழரசுக் கழகத் தொண்டர்கள் சத்தியாக்கிரகப் போர் நடத்தி, 1,700 பேர்கள் கைது செய்யப்பட்டனர். 1961 ஜனவரி 30-ஆம் தேதி முதல் பெப்ரவரி 15-ம் தேதி வரை போராட்டம் நடந்தது. அவர்களிலே முக்கியமாக நாடகச் சக்கரவர்த்தி திரு. டி. கே. ஷண்முகம், திரைப்படத் தயாரிப்பாளர் திரு. எம். ஏ. வேணு, திரைப்பட வசனகர்த்தா திரு ஏ. பி. நாகராஜன், வழக்கறிஞர்கள், பட்டதாரிகள், பாமரத் தொண்டர்கள், 1,700 பேர்கள் சிறை புகுந்தனர், அன்று நாங்கள் எதற்காக சிறை புகுந்தோமோ, அதை இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்து நிறைவேற்றியிருக்கிறது என்பதை நினைக்கின்றபொழுது நாங்கள் கூட்டணிக் குடும்பத்தில் கலந்தது குற்றம் இல்லை என்று மீண்டும் நினைக்கத்தான் தோன்றுகிறது. பிரதேச உணர்ச்சியையும் தேசிய உணர்ச்சியையும் பிணைக்கச் செய்வதற்கு முயன்றார் காந்தியடிகள். இந்தியன் என்று சொல்வது தமிழனுக்கு எதிர் இல்லை, தமிழன் என்று சொல்வதால் இந்தியனுக்கு எதிர் இல்லை என்று உபதேசித்த தேசீயத் தந்தையின் திருச் சந்நிதானத்தில் இப்படிப்பட்ட தீர்மானத்தின் மீது பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைபற்றி மகிழ்ச்சியடைகிறேன் என்பதைச் சொல்லிக்கொண்டு ஒரே ஒரு குறிப்பை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

'தமிழ்நாடு' என்று பெயர் வைத்ததோடு மட்டும் நிறுத்திவிடக்கூடாது. தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டு தமிழுக்கு வாழ்வு இல்லாவிட்டால் உலகம் மதிக்காது. உலகத் தமிழ் மாநாடு நடைபெற இருக்கின்றது. உலகத்தின் பல நாடுகளிலிருந்து பேரறிஞர்கள் வர இருக்கிறார்கள். கடைகளில் பெயர்ப் பலகைகள் எல்லாம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்ற காரணத்தால் வருகின்றவர்கள் 'இன்னும் நாம் தமிழ் நாடு வந்து சேரவில்லையோ' என்று நினைத்துக்கொள்வார்கள். இங்கு ஒலிக்கின்ற மொழி ஆங்கிலமாக இருப்பதால் இன்னும் தமிழ் ஒலிக்கக்கூடிய தமிழ்நாடு வரவில்லையோ என்று நினைத்துக் கொள்வார்கள். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்வேண்டும்.

அதோடுகூட செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு 'வள்ளுவர் கோட்டை' என்று பெயரிட்டால் என்ன குடிமுழுகிப்போய்விடும் ? டில்லிப் பாராளு மன்றத்தைச் சேர்ந்திருக்கின்ற இடத்திற்கு சாணக்கிய புரி என்று பெயரிடப்பட்டு அப்படித்தான் அழைக்கப்படுகிறது. அதைப்போல் இதைத் 'திருவள்ளுவர் கோட்டை' என்று சொன்னால் ஒன்றும் ஆகிவிடாது. ஆகவே, நான் இந்தத் தீர்மானத்தை மன நிறைவோடு உயிர் நிறைவோடு ஆதரித்து, வரவேற்று உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு என்ற பெயரிட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்றுப் பாராட்டுகிறேன். பாரதியார் கண்ட கனவு நனவாகக் கூடிய ஒரு நாள் வந்திருக்கிறது. பாரதியார் அவர்கள் எவ்வாறெல்லாம் தமிழ் நாட்டைப் பற்றிப் புகழ்ந்து பாடினார் என்பதைப் பற்றியெல்லாம் மதிப்பிற்குரிய ம. பொ. சி. அவர்கள் சொல்லிவிட்டார்கள். ம. பொ. சி. அவர்கள் "தமிழ்நாடு" என்று பெயர் மாற்ற வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் சொல்லி வந்த நேரத்தில் அன்றைய தினம் இருந்த காங்கிரஸ் ஆட்சியினர் மறுத்துக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னாலே ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாடு என்று பெயரிடப்படவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில் எல்லாம் அதனை காங்கிரஸ் கட்சி மெஜாரிடியின் காரணமாகத் தோற்கடித்துக் கொண்டே வந்தார்கள். அதற்குக் காலம் இன்றைய தினம் பிறந்திருக்கிறது. இதனைத் தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா மக்களும் பெரிய அளவில் பாராட்டுவார்கள் ; வாழ்த்துவார்கள். அந்த முறையில் நானும் "தமிழ்நாடு" என்று பெயரிடப்பட வேண்டுமென்ற இந்த தீர்மானத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டி, வாழ்த்தி, வரவேற்று முடித்துகொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற இருக்கின்ற "தமிழ்நாடு" என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி இந்த அவையிலே இன்றையதினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும், நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும். இந்தத் திருநாளைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக் கொண்டிருக்க நேரிட்டதே என்பதுதான் மகிழ்ச்சியின் இடையிலே நமக்கு வருகின்ற ஒரு துயரமே தவிர நெடுங் காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை மிகுந்த காலம் தாழ்த்தி இன்றையதினம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றாலும் இதிலே எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவைத் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் கூட இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறார்களே தவிர வேறில்லை. அதிலே சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லியிருப்பது எதிர்க்கட்சியில் இருப்பவர்களுடைய கடமை என்ற வகையில் ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்ற முறையிலேயே தவிர எதிர்க்கிறார்கள் என்று இல்லை.

ஆகையினால் இந்தத் தீர்மானம் எல்லோருடைய ஆதரவையும் பெற்று இந்தியப் பேரரசுக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. இந்தியப் பேரரசிலே மிகுந்த செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோது இதைப் பற்றி அவர்கள் சொல்லும்போது, 'தமிழகச் சட்ட மன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது" என்பதனை முன்கூட்டியே என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்—அங்குள்ள பல தலைவர்கள். அதனை அரசை நடத்துகிறவர்கள் கூட ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்று எண்ணத்தக்க விதத்தில் பத்து நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றிப் பேசவேண்டிய வாய்ப்பு கிடைத்த நேரத்தில் அங்குள்ள உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்கள்—மெட்ராஸ் ஸ்டேட் என்று பேசிப் பழக்கப்பட்டவர் மிகுந்த அக்கறையோடும் மிகுந்த கவனத்தோடும் "Tamil Nad" என்றுதான் பேசியிருக்கிறார். ஆக இதை அவர்களும் ஏற்றுக் கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றைய தினம் இந்த அவையிலே நாம் பெற்றிருக்கிறோம்.

மதிப்புமிக்க திரு. ம. பொ. சி. அவர்கள் இதிலே மிகுந்த மன எழுச்சி பெற்றது இயற்கையானதாகும். அவர்கள் பல ஆண்டுகளாக "தமிழ் நாடு" என்ற பெயர் இந்த நாட்டுக்கு இடப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையோடு பாடுபட்டவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் என்பதிலே "திராவிட" என்பதை இணைத்துக் கொண்டிருப்பதாலே "தமிழ்நாடு" என்பதிலே அக்கறை இல்லாமல் போய்விடுமோ என்று சிலர் எண்ணிய நேரத்தில் "தமிழ்நாடு" என்று பெயரிடுதல் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும், மற்றவர்கள் கொண்டு வருகிறார்களே என்பதனாலே முன்னாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், இலக்கியத்தில் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டிருந்தாலும் இன்றையதினம் அவர்களும் "தமிழ்நாடு" என்று சொல்லிக் கொள்வதில் மிகுந்த பெருமைப்படுகிறார்கள். ஆகையினால் இந்தத் தீர்மானம் எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல் இந்த அவையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது என்று கருதுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு வெற்றி கிடைக்குமானால் அது இன்று கழகத்திற்கு வெற்றியல்ல; தமிழரசுக் கழகத்திற்கு வெற்றியல்ல; மற்றக் கட்சிகளுக்கு வெற்றியல்ல; இது தமிழுக்கு வெற்றி; தமிழருக்கு வெற்றி; தமிழ் வரலாற்றுக்கு வெற்றி; தமிழ் நாட்டுக்கு வெற்றி என்ற விதத்தில் அனைவரும் இந்த வெற்றியிலே பங்கு கொள்ளவேண்டும்.

"தமிழ்நாடு என்ற பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்கள்" என்பது மட்டுமல்ல, நம்முடைய தொழில் அமைச்சராக முன்னால் இருந்ததிரு. வெங்கட்டராமன் அவர்கள் "ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே செய்து கொள்ளக்கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதப்பட வேண்டி வரும்; அதனாலே சிக்கல்கள் விளையும்" என்றெல்லாம் சொன்னார்கள். அதிலிருந்து அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் போய்வந்தார்கள் என்பதைத்தான் கவனப்படுத்துகிறார்களே தவிர உண்மையாகச் சிக்கல்கள் இருக்கின்றனவா என்பதைக் கவனப்படுத்தவில்லை. மதிப்பிற்குரிய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னபடி "கோல்டு கோஸ்ட்" என்பது "கனா" ஆகி விட்டது; அதனால் எந்தவிதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டு விடவில்லை. தமிழ்நாடு தனி நாடாகி இந்தப் பெயரை இடவில்லை; இந்தியாவில் ஒரு பகுதியாக இருந்து கொண்டு இந்தப் பெயரை இடுவதால் இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்பதை ஒரு கடமையுணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

1967 ஜூலை 18] [திரு. சி. என். அண்ணாதுரை]

நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், "தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்து கொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். அதையும் அத்தனைபேரும் உள்ளத்திலே, கருத்திலே கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங்கள் இன்றையதினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கெல்லாம் நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்க காரியமாகும்.

நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் நெடுங்காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக் கொள்ளுகின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள். "என்னுடைய பாட்டனார் காலத்திலே தான் நம்முடைய நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் இடப்பட்டது; எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார்" என்று கருத்திருமன் பேரப் பிள்ளைகளும், எங்களுடைய பேரப் பிள்ளைகளும் எதிர்காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அந்த "ஆலோசனையை"க் கூடச் சொல்லாமல் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ள வில்லை. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்ற இந்த நன்னாளில் "தமிழ்நாடு" என்று நான் சொன்னதும் "வாழ்க" என்று அவை உறுப்பினர்கள் சொல்லுவதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு !

உறுப்பினர்கள் : வாழ்க !

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு !

உறுப்பினர்கள் : வாழ்க !

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு !

உறுப்பினர்கள் : வாழ்க !

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேலாக 17—6—1967 அன்று தொடங்கப்பட்ட பேரவையின் கூட்டத் தொடர், இன்றுடன் முடிவடைகிறது. நாள்தோறும் நடைபெற்ற கூட்டங்களைச் சிறப்பாகவும், கண்ணியத்துடனும் நடத்திக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் பேரவை கூடுகின்ற நாள் குறிப்பிடாமல், பேரவைக் கூட்டம் இன்று முடிவடைகிறது. பிற்பகல் 1-30

பின்னர் பேரவை நாள் குறிக்கப்படாமல் ஒற்றி வைக்கப்பட்டது.

10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*238. Notification issued with G.O. Ms. No. 728, Agriculture, dated the 28th February 1967, declaring the area of the Srivaikuntam market specified in the schedule of the notification and the

area of ten miles around that market comprised in the revenue villages to be notified market areas of the Srivaikuntam market for the purpose of the Madras Agricultural Produce Markets Act, 1959 in respect of cotton, chillies and groundnut. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

*239. Notification issued with G.O. Ms. No. 628, Revenue, dated the 20th March 1967, effecting ryotwari settlement of Minor Inams in the Javadi Hill villages in Tirupathur and Vellore taluks of North Arcot district in accordance with the provisions of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari Act*, 1963 (*Madras Act* 30 *of* 1963].)

*240. Notification issued with G.O. Ms. No. 466, Rural Development and Local Administration, dated the 4th March 1967, making certain amendments to the Madras Panchayats Act, 1958 relating to assessment and collection of taxes by panchayats. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*241. Audit Report on the Annual Accounts of the Madras State Electricity Board for the year 1965–66 and Balance Sheet as on 31st March 1966. [*Laid on the Table of the House under section* 69 (5) *of the Electricity (Supply) Act*, 1948 (*Central Act* 54 *of* 1948).]

242. Notification issued with G.O. Ms. No. 532, Home, dated the 21st February 1967, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the vehicles belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Madurai, with effect from 19th January 1967. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

243. Notification issued with G.O. Ms. No. 1131, Home, dated the 15th April 1967, reducing the rate of tax payable in respect of the vehicle belonging to the German Leprosy Centre, Chetput, North Arcot district. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1937).]

244. Notification issued with G.O. Ms. No. 2393, Home, dated the 19th July 1966, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 motor cars bearing registration numbers C.C. 1192, C.C. 1193 and C.C. 1194 intended for the official use of the Consulate General of Japan at Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931)].

B. Reports, Notifications and Other Papers.

115. List of Unstarred Questions and Answers from Nos. 35 to 57.

†116. The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1967 (L.A. Bill No. 15 of 1967).

†117. The Madras Inams (Supplementary) Amendment Bill 1967 (L.A. Bill No. 16 of 1967).

†118. The Madras City Land Revenue and Revenue Recovery (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 17 of 1967).

†119. The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 18 of 1967).

‡120. Annexure to L.A. Bill Nos. 16/1967 : 17/1967 and 18/1967.

*121. Report and Proceedings of the Committee of Privileges.

* Placed on the Table of the House on 17th July 1967

† Despatched to all Members on 15th July 1967.

‡ Despatched to all Members on 16th July 1967.

இணைப்பு I.

[8-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 400-க்கான விடையைக் காண்க.]

மாண்புமிகு முதல் அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், அரிஜன நலத்துறை அமைச்சர் ஆகியோர் பதவியேற்றபோது, அவர்களுடைய சொந்த வீடுகளில் பின்வரும் கட்டிட வேலைகளை நிறைவேற்றுவது தேவையாக இருந்தது :—

	மதிப்பீட்டுத் தொகை.
	ரூபாய்.
முதலமைச்சர் இல்லத்தில்—	
பார்வையாளர்களுக்காக வீட்டின் மதில் சுவருக்குள் ஓரளவிற்கு நிலையான கொட்டகை ஒன்றைக் கட்டுதல்.	8,150
தனி எழுத்தருக்கு இடவசதியளிப்பதற்காக வீட்டின் முன் தாழ்வாரத்தில் சிறிய அடைப்பு ஒன்றும், காவல் மேடையொன்றும் (Sentry platform) அமைத்தல்	1,705
செப்பனிடு-செலவுகள்	2,000
மின்சார விளக்குகள் முதலியன பொருத்துதல் ..	235
மின்சார விசிறிகள் அமைத்தல் (1,804+465) ..	2,269
பார்வையாளர் அறைக்கு மின்சார விளக்குகள் முதலியன இடல்	600
மொத்தம் ..	14,959
பொதுப்பணித்துறை அமைச்சர் அகத்தில்—	
வீட்டின்முன் பார்வையாளர் அமர சிமிட்டி கான்கிரிட் தரை பரவுதல் பார்வையாளருக்குத் தனியிருப்பு அளிக்கவும், அவ்விருப்பிலிருந்து தனிமை பெறவும் சிறிய சுவர் ஒன்றை எழுப்புதல் பார்வையாளர்கள், காவலர்கள் பயனுக்காகக் கழிவறை ஒன்றைக் கட்டுதல் காவலர்களின் பயன் கருதி அடைப்பு ஒன்றை அமைத்தல்	3,500
மின்சார விசிறிகள், கூடுதல் மின்சார விளக்குகள் முதலியன மின்சார மணி இவற்றை அமைத்தல்	1,085
மொத்தம் ..	4,585

	ரூ.	
அரிஜன நலத்துறை அமைச்சர் மனையில்—		
போலீஸ் காவலர் அடைப்பு ஒன்றைக் கட்டுதல்	430	10,580
தனி எழுத்தரின் உபயோகத்திற்காக முன் தாழ்வாரத்தில் தடுப்புச் சுவரும் கண்ணாடிச் சாளரமும் அமைத்தல்	620	
சிமின்ட் தகடுகள் வேயப்பட்ட தற்காலிக வண்டிக் கொட்டில் (garage) ஒன்றைக் கட்டுதல்	2,250	
பார்வையாளர்களுக்காக தற்காலிக அறை ஒன்றைக கட்டுதல்	5,500	
செப்பனிடு செலவுகள்	1,780	

1967 ஜூலை 18]

அரிஜன நலத்துறை அமைச்சர் மனையில்—
தொடர்ச்சி.

		மதிப்பீடுத் தொகை.
		ரூ.
மின்சார வசதிகள், மின்சார விளக்குகள் போன்ற பிறவற்றை ஏற்படுத்தல் (2,080+1,400)	3,480	4,269
பார்வையாளர் அறையில் மின்சார விசிறி அமைத்தல், மோட்டார் வண்டிக்கொட்டகையிலும், பார்வையாளர் அறையில் மின்சார விளக்குகள் முதலியனவும், மின்சார மணியும் பொருத்துதல்	789	

